# கிரஹலக்ஷ்மி

பிப்ரவரி - 1937

மலர் - 1

இதழ் - 2

௧

JL
n211, N37
N37-1-2
159935

32

# கிருஹலக்ஷ்மி

32.

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை



# GRIHALAKSHMI

ILLUSTRATED LADIES' MAGAZINE

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

பிரசுரிப்பவர்

டாக்டர் கே. என். கேசரி

FEB 1937

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] பிப்ரவரி 1937 [இதழ் 2

PRINTED AT THE LODHRA PRESS, EGMORE, MADRAS.


KING OF TONICS
AMRITA
அமிருதா நரம்புகளுக்கு வலு
வளிக்கும் மருந்து.

159939

# அமிருதா

மானிடருக்கு ரத்தமே உயிர். அதுவே பிராணாதாரம். ரத்தம் சுத்தமாகவும், போதிய அளவும் உடம்பில் இருந்து, அதன் ஓட்டமும் சரியாக இருந்தால்தான் தேகம் ஆரோக்கியமாக இருக்கும். அசுத்த ரத்தமே மனிதருக்குச் சம்பவிக்கும் எல்லா வியாதிகளுக்கும் மூலகாரணம்.

அத்தகைய கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து மனிதரின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதில் சிறந்தது எங்களுடைய அமிருதா ஒன்றே என அதை உபயோகித்தவர் அனேகர் நற்சாட்சி கூறுகின்றனர்.

அமிருதாவினால் தீரும் ரோகங்கள் அனேகம். மேகப்படை, தேமல், சொரி, கண்டமாலை, படை, தலைநோய், வயிற்றில் எரிச்சல், கண் எரிச்சல், பலஹீனம், தூக்கக்குறைவு, மூத்திர சம்மந்தமான எல்லா வியாதிகள், ரச கந்தக பாஷாணாதி விஷதோஷங்களால் ஏற்படும் சகல ரோகங்களும், ஸ்வப்பன ஸ்கலனம், சுக்கில ஸ்ராவம், மந்த புத்தி, சுகசங்கடங்கள், கீல் நோய் முதலியவற்றை அமிருதா தீர்த்து வைக்கும் அரிய மருந்து.

அமிருதாவினால் நல்ல தேக பலம், சுத்த ரத்த விருத்தி, சரீர ஆரோக்யம், இந்திரிய புஷ்டி, வாக்கு வல்லமை, யோசனாசக்தி முதலியவை உண்டாகும்.

இது பல புண்ய க்ஷேத்திரங்களிலிருக்கும் சிறந்த மூலிகைகளினாலும், பழ வகைகளினாலும், புஷ்ப வகைகளிலும் தயார் செய்யப்பட்ட ஓர் சிறந்த டானிக். இதை வாலிபர் முதல் வயோதிகர்வரை யாவரும் உபயோகிக்கலாம்.

"அமிருதா" என்ற பெயருக்குத் தக்கபடி இனிப்பாயும், சுவாசனையுள்ளதாயும், தயார் செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை 12 அவுன்ஸ் ரூ. 3 0 0
,, 6 ,, ,, 1 10 0

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.**

32.

# மாதவி ஸ்நோ

இது அநேக புஷ்பங்களினின்றும் எடுக்கப்பட்ட அத்தர்கள் நிரைந்துள்ள ஒரு நாசுக்கான பனிபோன்ற பரிமள பதார்த்தம். இதில் கொஞ்சம் விரலில் எடுத்துக்கொண்டு முகத்தில் பூசிக்கொண்ட மாத்திரத்தில் விரைவில் மாயமாக சர்மத்தில் மறைந்து, முகத்திற்கு காந்தியையும் தேஜஸையும் உண்டாக்கும். முகம் பளிங்குபோல் நிர்மலமாயிருக்கும். முகத்திலுண்டாகும் சோபை, மச்சம், முகப்பருவுகள் முதலியவைகளைப் போக்கும். மேலும் முகம் குளிர்ச்சியாயும், பனிநீரை தடவிக்கொண்டது போலுமிருக்கும்.

விலை புட்டி அணா 8

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.

உங்களுக்கு தேவையான ஆப்டோன், லயன், அழகிய கலர் பிளாக்குகள் முதலியவைகளை கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு, நேர்த்தியாகச் செய்து குறித்த காலத்தில் கொடுப்போம். வெகுகாலமாக எம். எஸ். எம். ரயில்வே கம்பெனிக்கும் பிரபல பிலிம் கம்பெனிகளுக்கும், புஸ்தக பிரசுரங்களுக்கும் நாங்களே பிளாக்குகள் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஒரு முறை தங்களது ஆர்டர்களை கொடுத்து பரீக்ஷியுங்கள்.

விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

**கே. ரத்னம் அண்டு கோ.,**
***(Late of Klein & Peyryl),***
**291, ஹைரோட்,**
**திருவல்லிக்கேணி, சென்னை.**

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

ஒரிஜினல்

## கல்ச்சர் வைரங்கள்

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனாம்!

சொ. அருணாசலம் செட்டி,
மு. ராமசாமி செட்டி,
ஷராப்பு வியாபாரம், திருச்சினாப்பள்ளி.

## பொருளடக்கம்


1. ஹிந்து ஸ்திரீகள் சொத்துரிமை .... .... 73
2. ஜெர்மனியில் ஸ்திரீகள் அடிமைகளல்ல — ஸ்ரீமதி சுபாஷிணி .... 76
3. மேடம் சன் யாட் சென் — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... 79
4. சமையல் — திரு. கோபால்ராவ், எம்.ஏ. .... .... 83
5. குழந்தை வளர்ப்பும், நமது நிலையும் — டாக்டர் ஏ. ஜே. பாண்டியன் .... 87
6. ஸ்திரிகளின் நிலைமை — ஸ்ரீமதி கிருஷ்ணவேணி .... .... 89
7. அன்னும் — ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி .... .... 90
8. ஓ ஞாயிற்றுக்கிழமையே ! — திரு. வி. ஆர். மயிலேறு, எம்.ஏ. .... 94
9. மத குருக்களின் போக்கு — ஸ்ரீமதி காந்தா .... .... 96
10. ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி "கண்ணன்" .... .... 97
11. சூரியவெளிச்சமும் காற்றும் — "சுகுமாரி" .... .... 104
12. கண்ணன் காதலி — "மைதிலி" .... .... 106
13. சங்கீதம் — சங்கீதவித்வான் ஜீ. எம். நாகராஜராவ் .... 111
14. நீ எதற்கென்று வருந்துவாய் ? — 'சக்திதாஸன்' .... .... 114
15. மார்தவிக் கொடி — "புஷ்பலீலா" .... .... 117
16. அனந்தசயனம் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... 118
17. மொல்ல ஜயந்தி .... .... .... 121
18. தரித்திரதேவதைக்குப் பலி — பண்டிதை ரா. ரங்கநாயகி அம்மாள் .... 123
19. இந்திய மாதர் சங்க வருஷ விழா .... .... 129
20. இந்திய மாதர்சங்கம் .... .... .... 130
21. "கிரஹலக்ஷ்மி"க்கு பாராட்டு .... .... .... 131
22. வனஜாவின் விவாகம் — ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயம்மாள் .... 134
23. விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... 139
24. செய்தித் திரட்டு .... .... .... 142
25. கதம்பம் .... .... .... 145
26. பஞ்சாங்கம் .... .... .... 147
27. பிரசவ அட்டவணை .... ... .. 148

மூவர்ணப்படங்கள்

1. ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி
2. பாரதமாதா





## டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கணச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாகயிருக்கிறது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**

# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர் :** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
திரு. பி. எம். ராமசர்மா, 14, மாடல் ஹவுஸ் தெரு, பசவங்குடி.
சாஸ்திரி ஹோட்டல் அண்டு ரெஸ்டாரன்ட், 89, சிக்பெட், சிடி.

**திருப்பதி :** மிஸ்டர். அப்துல் அஸீஸ்.

**சேலம் :** திரு. எம். என். கிருஷ்ணமாச்சாரி, 17, மெயின் ரோட்.

**கடலூர் :** மெஸர்ஸ். கமலா அன் கோ., புதுப்பாளையம், நியூடவுன்.

**வேலூர் :** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரியகடைத்தெருவு, கோட்டை.

**சென்னை :** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

**இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.**

## கிரஹலக்ஷ்மி காரியாலயம்,

தபால் பெட்டி நெ. 752,

**எழும்பூர், : : சென்னை.**




## பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும்நேரம் தேவை.

**பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,**
**58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை.**



# ஹிந்து ஸ்திரீகள் சொத்துரிமை

ஹிந்து ஸ்திரீகளுக்கு தற்சமயம் சொத்துரிமைகள் சில இருக்கின்றன வென்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அவைகள் மிகவும் குறைந்தவை. ஸ்திரீகளின் அடிமைத் தனத்துக்கு, அவர்களின் தாழ்ந்த நிலைக்கு முக்கிய காரணங்களில் அவர்களது பொருளாதார சுதந்தரக்கட்டு ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. சொத்து சுதந்திரமுள்ள ஒரு மாது சமூகத்தில் எவ்வளவு கௌரவம் வகிக்கிறாள் என்பதும், அவையற்ற ஒருவள் எவ்வளவு அலட்சியமாக நடத்தப் படுகிறாள் என்பதும் நாம் கண்கூடாக தினசரி வாழ்க்கையில் காண்கிறோம். இன்று பெரிய பணக்காரன் மனைவி; அதிகாரங்கள்; மரியாதைகள்; "அம்மா வாங்க, எழுந்திரடா, பெரியம்மா, உத்தரவு," எல்லாம் நடக்கிறது. நாளை கணவன் கண்மூடி பரலோகம் செல்கிறான். ஜீவனாம்சம் பெறுகிறாள் பெரியம்மா. நாளா வட்டத்தில் பிள்ளைகள் "கிழடு விழுந்து கிடக்க மாட்டேங்கரது. அந்த மூலை போதாதாம். கட்டிலு வேறே கழுதைக்கு. அப்ப இருந்தாப்போல இருக்கணுமாம்! முடியுமா? தானா தெரிஞ்சுக்கரதில்லே, சவம்" என்ற பேச்சுகள். ஏன் இந்த வீழ்ச்சி!

கணவன் தான் சம்பாதித்த சொத்தில் தன்னை அன்னையைப்போல் பாதுகாத்து சுகம் கொடுத்து வந்த அருமை மனைவிக்கு "சோத்துக்கு வழி செய்தால் போதும், வேறு அனாவசியம்," என்று ஹிந்து சட்டம் சொல்லுவதால் தான். பொதுவாக விவாஹமாகாத சகோதரிகள், விவாகமாகி கணவனை யிழந்து சொற்ப ஜீவனாம்சம் பெற்று தாய் வீடு வந்தவர்கள், தாய்மார்கள் இவர்களது நிலைமை ரொம்பவும் பரிதபிக்கத்தக்கது. தங்களுக்கு போதிய அளவு சொத்துப் பாதுகாப்புகள் ஹிந்து சட்டம் அளிக்காததால் அவர்கள் படும்

பாடு ஆண்டவனே அறிவான். அவைகளை நீக்கி நம் சகோதரிகளுக்கும், தாய்மார்களுக்கும், மனைவியருக்கும் பொருளாதார சுதந்திரத்தை யளிக்க முன்வருவது ஒவ்வொரு ஆடவரின் புனிதமான புண்ய கடமையாகும்.

“மதத்தின் பெயராலோ, அல்லது சட்டத்தின் அதிகாரத்தாலோ, சமூகக்கட்டுகளின் பலத்தின் காரணத்தாலோ ஸ்திரீகளின் மீது சுமத்தப்பட்டிருக்கும் துன்பங்களும், கஷ்டங்களும் மிகவும் அதிகமாயிருப்பதால் அவைகள் தற்சமயம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கின்றன. தக்கோர்களெல்லாம் இக்குறைகளையும் இடையூறுகளையும் சட்ட மூலமாய் எவ்வாறு சீர்திருத்தலாம் என்பது பற்றி தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். மாதர்களின் குறைகளும் இடையூறுகளும் இவ்வளவு அதிகமாயிருப்பதற்கு முதல் காரணம் நம் ஜனங்களிடமிருந்து வரும் அசமந்த புத்தியும், எதையும் காலாகாலத்தில் செய்யாது தள்ளிக்கொண்டே போகும் குணமும் தான் என்று நான் திட்டமாகக் கூறுவேன். எல்லாப் புருஷர்களும் தங்களைச் சார்ந்த ஸ்திரீகளின் தற்கால, பிற்கால வாழ்வின் நன்மையில் போதிய அளவு கவலையும், கவனமும் செலுத்துவார்களேயானால் இக்குறைபாடுகளில் அநேகம் நீங்கி விடும்” என்று ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ. பி. ராஜகோபாலாச்சாரியார் கூறுவது கவனிக்கத்தக்கது.

இந்திய சட்ட சபையில் இக்குறைபாடுகளை நீக்கும் நோக்கத்துடன் காங்கிரஸ் அங்கத்தினர் திரு. தேஷ்முக் ஒரு மசோதாவைப் பிரேரித்து, அது செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கும் போய் மறுபடியும் மேல் விவாதத்துக்கு சட்டசபை முன் வந்திருக்கிறது. அதைப்பற்றிப் பல மாகாண சர்க்கார்களும், ஹைகோர்ட் நீதிபதிகளும், வக்கீல் சங்கங்களும், இன்னும் தனிப்பட்டவர்களும், சபைகளும் தம்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். முக்கியமாக வங்காளத்தில் தான் இம்மசோதாவுக்கு பலமான எதிர்ப்பு இருந்து வருகிறது. வேறு சில மாகாணங்களிலும் கொஞ்சம் எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எதிர்ப்பு இல்லாத சத்காரியம் எது தான் உண்டு? ஒன்றுமில்லை. நல்லது செய்வதை தடை செய்ய இதிகாச புராண காலங்களிலிருந்தே ஒரு கோஷ்டி இருந்து வந்திருக்கிறது.

எதிர்ப்பவர்களெல்லாம், இம்மசோதா ஹிந்துமதத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு விரோதமானது என்றும், சாஸ்திரங்களுக்கு குந்தகமானதென்றும் கூறுகிறார்கள். இந்த வாதங்களை, இன்று இந்தியாவில் ஆங்கிலக் கல்வியினாலும், மற்றும் அநேக காரணங்களாலும், ஏற்பட்டிருக்கும் சமூக மாறுதல்களைக் காணும் எவரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஹிந்து மதம் கால தேச வர்த்தமானங்களுக்கேற்றுப்போல் அவசியமான மாறுதல்களை அவ்வப்போது செய்து வந்ததால்தான் இன்னும் தலை சிறந்து விளங்குகிறது. அத்தியாவசியமான, நியாயமான மாறுதல்களை எதிர்ப்பவர்கள் ஹிந்து மதத்தின் வளர்ச்சிக்கு உதவியளிப்பதற்குப் பதிலாக, அதற்குப் பங்கம் விளைவித்தவர்களாகவே ஆவர். சாஸ்திரங்களுக்கு குயுக்தியானதும், சுய





நலத்தையும் ஒட்டி வியாக்கியானங்கள் செய்யப்பட்டு, ஆதியில் ஸ்திரீகள் அனுபவித்து வந்த சொத்து பாத்தியதைகளும், பொருளாதார சுதந்திரங்களும் பறிக்கப்பட்டன வென்று திரு. ஹிரிவிலாச சாரதா கூறுகிறார். அவர் கூறுவது தவறு என்று சொல்லமுடியாது.

திரு. தேஷ்முக் கொண்டு வந்திருக்கும் ஹிந்து ஸ்திரீகள் சொத்துரிமை மசோதாவில் விதவைகளின் சம்பந்தமான பிரிவுகளை இந்திய சர்க்கார் ஆதரிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். திரு. தேஷ்முக்கும் சமய சந்தர்ப்பத்தை யொட்டி அம்மட்டிலுமாவது ஆதரவு கிடைத்ததே என்று சந்தோஷம் அடைகிறார். அம்மசோதாவை பம்பாய் ஹைகோர்ட் நீதிபதிகளும் கொள்கையளவில் ஆதரிக்கிறார்கள். இந்தியாவிலுள்ள முற்போக்கான எல்லா ஸ்தாபனங்களும், மாதர்களின் பிரதிநிதி சபைகளும் மசோதாவை மனப்பூர்வமாய் ஆதரிப்பது மன்றி சில திருத்தங்களும் தேவையென்று எடுத்துக்காட்டி யிருக்கின்றன. திரு. தேஷ்முக் மசோதா வெகு தீவிரமான மாறுதல்கள் ஒன்றும் செய்து விடவில்லை. அதே ரொம்பவும் தீவிரமானது என்று கருதுவது சரியல்ல. ஸ்திரீகளின் குறைகளை எடுத்துக் கூறின் அவைகள் அனந்தம். சட்டபூர்வமாக அவைகளுக்கு பரிகாரம் தேட வேண்டியது அவசியம். எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரம் அவர்களின் குறைபாடுகள் நீக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நம் சமூக வாழ்க்கையில் குடும்பங்களில் சமாதானமும், அன்பும் குடிகொண்டு வாழும். எனவே திரு. தேஷ்முக் அவர்களின் மசோதாவை கூடிய சீக்கிரம் நிறைவேற்றி அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய வேலையில் எல்லோரும் தங்கள் கடமையைச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

**கடைக்காரன்:** (சாமர்த்தியமாக) அம்மா இந்த சாமான் ரொம்ப நயமானது, உறுதியாக 50 வருஷங்களுக்கு உழைக்கும். நான் காரண்டி தருகிறேன். யோஜனை வேண்டாம்.

**கிழவி:** அவ்வளவு நாளைக்கு நான் இருக்கமாட்டேனப்பா.

**காதலன்:** காதலி, உன்னைப் பிரிந்து நான் எப்படி உயிர்தரிப்பேன்.

**காதலி:** அதைப்பற்றி தாங்கள் வருந்த வேண்டாம், மன்னரே! நான் படித்தவளல்லவா? விதவா விவாகம் செய்து கொள்ளுகிறேன்.

# ஜெர்மனியில் ஸ்திரீகள் அடிமைகளல்ல.

ஸ்ரீமதி சுபாஷிணி.

[சமீபத்தில் பலபத்திரிகைகளில், நாசிக் கட்சியார் ஆதிக்கத்துக்கு வந்தவுடன், அதாவது ஹிட்லர் ஜெர்மனி தேசத்தின் தலைவராக வந்ததி லிருந்து அத்தேசத்தில் ஸ்திரீகளின் கௌரவம் குறைந்துவிட்டதென்றும், அவர்கள் பழையபடியும் அடுப்பங்கரைக்கு விரட்டிவிடப் பட்டனர் என்றும், அவர்களின் நிலைமை வரவரக் கேவலமாய் ஆகிக்கொண்டு வருகிறதென்றும், செய்திகள் பிரசுரிக்கப் பட்டிருந்தன. அச்செய்திகளுக்கு ஆதாரமில்லை யென்று ஜெர்மனி தேசத்து தேசீய மாதர்கள் சங்கத்தின் தலைவி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறாள். அதன் சாராம்சம் கீழே பிரசுரிக்கப்பட் டிருக்கிறது.]

ஜெர்மனியில் ஸ்திரீ இன்று தாழ்த்தப்பட்டு அடிமையாகக் கருதப்படுவதாக அன்னியதேசப் பத்திரிகைகள் கூறுகின்றன. புதிய ஜெர்மனியில் நங்கையர்களின் நிலைமையைப்பற்றி அநேகவிதமான தப்பபிப் பிராயங்களும், எண்ணங்களும் இருந்து வருகின்றன. புதிய ஜெர்மனியைப் பற்றியும், அதன் ஜனங்களிடையே இருந்துவரும் மனப்பான்மையையும் அறியாததனாலேயே இவ்வித ஆதாரமற்ற செய்திகள் உலாவி வருகின்றன. தேசீய அபேதவாதம் (National socialism) ஜெர்மனியில் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டது; தேசம் பூராவும் அதன் ஆவேசம் நிலவுகிறது; மக்களை புதியவர்களாக மாற்றிவிட்டது.

ஜெர்மனி அரசியலில் எங்கள் கடமையை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். தேச முன்னேற்றத்துக்காக எந்த எந்த துறைகளில் ஈடுபட்டால் எங்களால் நல்ல பயன்கொடுக்க இயலுமோ அவ்வத்துறைகளில் நாங்கள் மனப்பூர்வமாக இறங்கி உழைத்து வருகிறோம். எங்கள் தேசத்தின் வளர்ச்சிக்கு நல்ல குடும்பவாழ்க்கை அத்தியாவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

## தேசீய தாய்மார்கள் சேவாசங்கம்

இந்த நோக்கத்துடனேயே நாங்கள் தேசீய தாய்மார்கள் சேவா சங்கத்தை ஸ்தாபித்தோம். அதன் ஆதரவில் எல்லா நகரங்களிலும் தாய்களுக்கு வேண்டிய கல்வியை அளிக்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி யிருக்கிறோம். அப்பள்ளிக்கூடங்களுக்கு எல்லோரும் போகவேண்டுமென்பது கட்டாயமல்ல. விரும்புபவர்கள் எல்லோரும் போய் வரலாம். கிராமங்களில் போய் போதனை செய்வதற்கு சுற்றுப்பிரயாணம் செய்யும் ஸ்திரீ உபாத்தியாயினிகளையும் அனுப்புகிறோம். அவர்கள் ஒவ்வொரு கிராமமாகப் போய் சில வாரங்கள் தங்கி தாய்களுக்கு அவசியமான கல்வியைப் பரப்பி வருகிறார்கள். தாய்கள் அத்தியாவசியமாய் உணர்ந்திருக்க வேண்டிய சிசுசம்ரட்சணை, குழந்தைகளுக்குக் கல்வியளித்தல், வளர்த்தல், குடும்ப நிர்வாகம் இவைபோன்ற விஷயங்கள் போதிக்கப்படுகின்றன.



## ஸ்திரீ தொழிலாளர் சேவை.

தாய்களுக்கு பயிற்சி யளிப்பதுடன் ஸ்திரீ தொழிலாளர் சேவையிலும் நாங்கள் ஈடுபட்டுழைக்கிறோம். எல்லா வகுப்பைச் சேர்ந்த 17 வயதுக்கு மேற்பட்டும், 25 வயதுக் குட்பட்டும் உள்ள சிறுமிகளும், மாதர்களும் ஸ்திரீ தொழிலாளர் சேவாசங்கத்தில் அங்கத்தினராக இருக்கின்றனர். உயர்தரப் படிப்புக்குப் போகிற மங்கைகள் தவிர மற்றவர்களுக்கு இச்சங்கத்தில் சேரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. தானாக விரும்பியவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். அங்கத்தினர்களுக்கு சேவை சம்பந்தமான கல்வி அளிக்கப்படுமுன் அவர்கள் தொழிலாளர் நன்மைக்காக 6 மாதமாவது பணியாற்றி யிருக்கவேண்டும்.

ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளவும், தேசத்துக்கும் சேவை செய்யவும் அவர்களைத் தயார் படுத்த வேண்டுமென்பது இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாகும். தொழிலாளர் முகாம்களில் வசிக்கும்போது ஜெர்மனியின் பிரச்சினைகளையும், அதன் மக்களின் சேவைகளையும் அறிவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று ஸ்திரீகளிடம் ஓர் ஆர்வம் ஏற்படுகிறது; ஏழைத் தொழிலாளரின் கஷ்டங்களை அகற்றி அவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற ஆசையுண்டாகிறது. இச்சங்கத்தில் பயிற்சி பெறும் மாதர்கள் விவசாயக் கழனிகளிலும், தொழிற் சாலைகளிலும் வேலை செய்யும் ஸ்திரீ தொழிலாளிகளுக்கு உதவி செய்யுமாறு அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் அதிக வேலை செய்து சிரமப்படும் ஸ்திரீ தொழிலாளர்கள் வீட்டுக்குப் போய் வீட்டு வேலைகள் செய்வதில் உதவி புரிந்து வருகிறார்கள். தொழிலாளியின் சிரமத்தைக் குறைக்க பல மணி நேரங்கள் கூடமாட சகோதரிகள் போல் வீட்டு வேலைகளை களிப்புடன் செய்து வருகிறார்கள். இதற்கு அவர்களுக்கு பிரதி பலன் ஒன்றும் கிடையாது. இந்த சேவா சங்க அங்கத்தினர்கள், கூட்டம் கூட்டமாக முகாம்களில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு முகாமிலும் சுமார் முப்பது நங்கையர்கள் சேர்ந்து இருக்கிறார்கள். அதிலிருக்கும் சேவகிகள் தங்கள் வேலையைச் சரிவர நிறைவேற்றி வருகிறார்களாவென்று மேற்பார்வையிட ஒரு தலைவி ஒரு முகாமுக்கு இருக்கிறாள். இதிலுள்ள நங்கையர் இது போன்ற சமூக சேவையில் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் ஈடு படுகிறார்கள். பாக்கி நேரத்தை விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும், இதரப் பயிற்சிகள் பெறுவதிலும் செலவளிக்கிறார்கள்.

## ஸ்திரீ தொழிலாளர் பாதுகாப்பு.

ஸ்திரீ தொழிலாளிகளின் நன்மைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்காக ஒரு காரியாலயமும் நாங்கள் அமைத்திருக்கிறோம். குறிப்பாக தொழிற்சாலைகளில் வேலை செய்து வருவோரின் கஷ்டங்களை இது கவனிக்கும். மாதர்களின் தேக சுகத்துக்குக் கெடுதல் ஏற்படாத வேலைகள் மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப் படும்படியும், அவர்களது தேக பலத்துக்கு மீறின கடினமான வேலைகள் அவர்களுக்கு அளிக்கப்படாதபடியும், அவரவர் சக்திக்கும், புத்திக்கும் ஏற்ற வேலைகளே அவர்கள் செய்யும்படியும் பாது காத்து

வர வேண்டிய வேலைகளாகும். தொழிற்சாலை யதிகாரிகளுடன் இது சம்பந்தமாகப் பேசிவர ஸ்திரீ தொண்டர்களிருக்கிறார்கள். உலோகத் தொழிலில் கடுமையான வேலையில் ஈடுபட்டு வந்த ஸ்திரீகளில் 20 சதம் பேரை அந்த வேலைகள் செய்வதினின்றும் தடுக்கப்பட்டு அதே சம்பளத்தில் லேசானதும், சௌகர்யமானதுமான வேலைகள் செய்யும்படி நாங்கள் இதற்குள்ளாகவே செய்து விட்டோம்.

வேலை செய்யும் தாய்மார்களின் நன்மைக்கான காரியங்களில் இதர ஸ்தாபனங்களுடன் இந்தச் சங்கத்தாரும் ஒத்துழைத்து வருகின்றனர். இது சம்பந்தமான சட்டங்கள் ஏற்படுத்த வேண்டிய முயற்சிகள் நாங்கள் செய்து வருகிறோம். பிரசவ காலத்துக்கு 6 வாரங்களுக்கு முன்னமேயே ஸ்திரீ தொழிலாளர்கள் வேலையினின்றும் சம்பளத்துடன் ரஜா எடுத்துக் கொள்ளலாம். அந்த சமயத்தில் அவர்களுக்கு நல்ல போஷிப்பு அளிக்கக் கூடிய ஆகாரங்களும், பிரசவத்திற்கு அவசியமான பொருள்கள் வாங்கவும் "குழந்தை, தாய்" பராமரிப்பு நிதியிலிருந்து பண உதவியும் அளிக்கப்படுகிறது.

பல குழந்தைகளுக்குத் தாயான தொழிலாள ஸ்திரீக்கு பதிலாக அனேக வாரங்கள் மாணவிகள் தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகிறார்கள். இது மாதிரி சமயங்களுக்கு அவர்களுக்கு சொற்ப ஊதியம் கொடுக்கப்படுகிறது. இதனால் முழுச் சம்பளத்துடன் தொழிலாள ஸ்திரீகள் அதிக நாட்கள் ரஜா வெடுத்துக் கொள்ள ஏதுவாகிறது.

தொழிலாளிகளின் க்ஷேமத்தை கவனித்துவர பெரிய தொழிற் சாலைகளில் க்ஷேம சேவகிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தொழிற்சாலை சொந்தக்காரர்களால் மட்டும் நியமிக்கப்படவில்லை. பாதுகாப்பு சபையாரும், முதலாளிகளும் சேர்ந்தே அவர்களை நியமிக்கிறார்கள். முதலாளி அவர்களை வேலையை விட்டு நீக்க முடியாது. எனவே அவர்கள் முதலாளியின் தயை தாட்சண்யம் பாராது தங்கள் பணியை தைரியமாய் செய்து வருகிறார்கள்.

## விரும்புவதென்ன?

இது வரையில் நான் விவரித்து வந்த வேலைகள் எல்லாம் சமூக சம்பந்தமானவைகளே. எங்கள் வேலைகள் இவற்றுடன் நின்றுவிட வில்லை. ஜெர்மானிய ஸ்திரீ, வியாபாரம், பத்திரிகை, ரேடியோ, சினிமாத் தொழில் முதலிய காரியங்களிலும் ஈடுபட்டு வேலை செய்து வருகிறாள். ஜெர்மனியில் ஸ்திரீ வீட்டு வேலைகளையும், கிரஹ நிர்வாகத்தையும், குழந்தைகளின் பாதுகாப்பையும் மட்டுமே கவனித்து வருகிறாள், மேலான உத்தியோகங்கள், வேலைகளில் அவளுக்கு இடமில்லை என்று நினைப்பது சுத்தத் தவறு. இவ்வேலைகளுடன் அவர்கள் ராஜ்யம் நின்று விடவில்லை. ஆனால் உயர்தரக் கல்வி கற்கலாயக்குள்ள ஸ்திரீகள் மட்டும் தான் கலாசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டுமென்பதே எங்கள் அபிப்பிராயம். தகுந்த யோக்கியதாம்சங்களும், சாமர்த்தியமும் உள்ள மாதர்கள் அவர்களுக்குத் தகுந்த வேலைகளைச் செய்ய நாங்களே உதவி செய்து வருகிறோம். இன்றும் வைத்தியம், பொருளாதாரம், கல்விப் பயிற்சி, நியாயவாதம் முதலிய உயர் தொழில்களில் எவ்வளவோ ஸ்திரீகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தந்த ஸ்திரீகள் எந்த எந்த வேலையைச் செய்வதால் தேசம் பெரிதும் பயன் அடையுமோ அந்த வேலைகளில் தான் மாதர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். ஸ்திரீகள் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கவனித்து வர ஒரு அகில ஜெர்மானிய மாதர் சங்கம் உள்ளது. அதன் தலைமையிலும், ஆதரவிலும், மேற்பார்வையிலுமே எல்லாக் காரியங்களும் நடந்து வருகின்றன.



# மேடம் சன் யாட் சென்.

ஸ்ரீமதி எஸ். கமலா.

தற்சமயம் சைனா தேசம் பல தொல்லைகளுக்குட்பட்டிருக்கிறது. அத்தேசத்தில் மத்திய சர்க்கார் போதிய பலமுள்ளதாக இல்லை. ஆயுத பலமும் நிர்வாகத்திறமையும் ஸ்திரப்படவில்லை. ஒரு பக்கம் ஜப்பான் சைனாவை விழுங்க பல வழிகளிலும் முயற்சி செய்து வருகிறது. மற்றொரு புறம் ரஷ்யாவின் உதவி பெற்ற பொது உடைமைக்காரர்கள் மத்திய சர்க்காரின் பயங்கொள்ளித் தனத்தைக் கண்டு தாங்களே அரசியலைக் கைப்பற்ற தீவிர முயற்சி செய்து வருகிறார்கள். சைனாவில் ஆதிக்கம் பெற ரஷ்யாவும், ஜப்பானும் போட்டியிடுகின்றன. இதர மேல் நாடுகளும் பங்கு போட விரும்புகின்றன. அப்பேர்ப்பட்ட சைனாவை யதேச்சாதிகார சக்கிரவர்த்திகளின் அதிகாரத்தினின்றும் விடுவித்து இன்றைய குடியரசு சைனாவை ஸ்தாபித்தவர் டாக்டர் சன் யாட் சென் என்பவரே. இந்த மாபெரும் பணியில் அவருக்கு பல வழிகளிலும் உதவியளித்தவர் அவரது வீர மனைவி மேடம் சன் யாட் சென்தான். அவரது சரித்திரத்தைக் கீழே சுருக்கமாகக் காணலாம்.

## மேடம் சன் யாட் சென்.

1890-ம் வருஷம் ஷாங்கை நகரத்தில் சர்வதேச வாசிகளும் வசிக்கும் பகுதியில் செய்மூர் ரோடிலுள்ள ஒரு கிரஹத்தில் சன் பிறந்தாள். அவள் தந்தையின் பெயர் சார்லஸ் ஜோன்ஸ் சூங். அவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர். தீவிரமான கொள்கைகள் உள்ளவராயிருந்தார். அவர் இல்லத்திலே சைனாவில் முடியரசை வீழ்த்தி குடியரசை ஸ்தாபிக்க முயற்சியும் கிளர்ச்சியும் செய்து வந்த அனேக சீனத் தலைவர்கள் அடிக்கடிகூடி ஆலோசனைகள் செய்வதும், திட்டங்கள் வகுப்பதும் உண்டு. சீனக் குடியரசேற்படுத்துவதில் அக்குடும்பத்தின் சேவை பாராட்டத்தக்கது. ஜோன்ஸ் சூங், டாக்டர் சன் யாட் சென்னின் ஆப்த நண்பர்களில் ஒருவர். அவரது கிளர்ச்சிகளிலும் உதவி புரிந்து வந்தார்.

மேடம் சென்னின் தாயார் பெயர் நிய். அவளும் தன் கணவனுடன் ஒத்து வாழ்ந்தாள். ஸ்ரீமதி சென் கூடப் பிறந்தவர்கள் இரு சகோதரர்கள். அவர்களும் பிற்காலத்தில் சைனாவின் அரசியல் வாழ்வில் பங்கெடுத்துக் கொண்டு கௌரவ ஸ்தானங்களும் வகித்து வந்தனர். சென்னுக்கு அவள் தாய்தந்தையர் இட்ட பெயர் சிங்க லிங். ஆங்கிலத்தில் அதற்கு "அதிர்ஷ்ட காலம்," லக்கி ஏஜ் (**Lucky age**) என்று அர்த்தம்.

## கல்வி

ஜோன்ஸ், சிங்க லிங்கை சிறு பிராயத்திலேயே பள்ளிக்கூடத்துக்கு கல்வி கற்க அனுப்பி விட்டார். சிங்க லிங் கல்வியில் இளம்பிராயத்திலிருந்தே மிகுந்த ஆர்வம் காட்டி கீழ்த்தரப் படிப்பை வெகு சீக்

கிரம் முடித்து விட்டாள். அவள் தந்தை அவளை உயர்தரப் படிப்புக்காக ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பினார். அங்கு ஜியார்ஜியா மாகாணத்தில், மாகன் என்ற ஊரிலுள்ள வெஸ்லியன் காலேஜில் லிங் சேர்ந்தாள். சகமாணவர்களும், மாணவிகளும் அவள் மீது அன்பும், மதிப்பும் உடையவர்கள் ஆனார்கள். சிங்க லிங் என்ற பெயர் அமெரிக்கத் தோழர்களினால் உச்சரிக்க முடியவில்லை. அவர்கள் அவளை "ரோஸமாந்து" என அழைத்தார்கள். சில வருஷங்களில் தன் கல்வியை முடித்துக் கொண்டு திரும்பவும் லிங் தன் தாய் நாடு திரும்பினாள்.

## மணம்

சைனாவின் விடுதலை வீரனான டாக்டர் சன் யாட் சென்னை லிங் சிறு குழந்தையாயிருக்கும்போதே அறிவாள். தன் தந்தையுடன் அவர் அடிக்கடி சைனாவின் விடுதலைப் போராட்டத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை அவர் மடியில் விளையாடிக்கொண்டே கவனித்து வந்திருக்கிறாள். அப்பொழுதே அவளுக்கும் தீவிர அரசியல் அபிப்பிராயங்கள் மனதில் பதிய ஆரம்பித்து விட்டது.

கல்வியை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்ப வரும் வழியில் யோகஹாமாவில் இறங்கினார். அவ்வூரில் தான் அப்பொழுது சீன சர்க்காரிடமிருந்து தப்பி வந்து மறைமுகமாக டாக்டர் சென் வசித்து வந்தார். சென் லிங்கை அன்புடன் வரவேற்றார். சிங்கலிங்குக்கும் அவர் மீது காதல் உண்டாயிற்று. அப்பொழுது அவளுக்கு வயது இருபத்து மூன்று. சன் யாட் செனுக்கு வயது நாற்பத்து ஒன்பது. சன் யாட் செனை மணந்து கொண்டால் தனது தந்தையினுடையவும், சென்னுடையவும் ஜன்ம லட்சியத்தைப் பூர்த்தி செய்யும் கைங்கர்யத்தில் தான் பரிபூரணமாக ஈடுபடலாம் என்ற விருப்பத்தாலும், சென் மீது அவளுக்கு இருந்த அன்பினாலும் வயதில் தாரதம்மியம் இருந்தபோதிலும் அவரையே மணந்து கொள்ள வேண்டுமென்று சிங்கலிங் விரும்பினாள். சில நாட்கள் சென்னுடன் தங்கியிருந்து விட்டு ஷாங்கைக்கு தன் பெற்றோர்களின் அனுமதி பெறவந்தாள்.

ஆனால் அவள் பெற்றோர்கள் அவளுக்கு ஏற்கனவே வேறு கணவனைத் தீர்மானித்து விட்டதாகவும், அவனையே சிங்கலிங் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். அவர்கள் விருப்பத்துக்கோ லிங் இணங்கவில்லை. தான் காதலித்த டாக்டர் சென்னைத்தான் வதுவை செய்து கொள்ளுவேனென்று தீர்மானமாகக் கூறி விட்டாள். அந்த மன உறுதியுடன் யோகஹாமாவுக்குப் புறப்பட்டு உடனே வந்து விட்டாள். ஊர்ஜனங்களும், உற்றாரும், உறவினரும் அவளைப் பலவிதமாகத் தூற்றினார்கள். அவற்றை அவள் சற்றும் பொருட்படுத்தவில்லை. கூடிய சீக்கிரம் டாக்டர் சென்னுக்கும், சிங்கலிங்குக்கும் எளிய முறையில் அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் யோகஹாமாவில் திருமணம் நடைபெற்றது.

டாக்டர் சென்னுக்கு இது முதல் கல்யாணமல்ல. இதற்கு முன்னரே ஒரு மனைவி இருந்தாள். ஆனால் அவளுக்கும் இவருக்கும் மன ஒற்றுமை இல்லாது



# கிரஹலக்ஷ்மி

தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை.

தமிழில் மாதர்களுக்கென பிரசுரிக்கப்படும் உன்னத பத்திரிகை கிரஹலக்ஷ்மி ஒன்றே. படித்த ஒவ்வொரு ஸ்திரீயும் அவசியம் வாசிக்கவேண்டும்.

**வருட சந்தா ரூ 3** **தனிப்பிரதி அணா 4**

கிரஹலக்ஷ்மியில் தங்கள் விளம்பரங்களைப் பிரசுரிப்பதால் வியாபாரிகள் நல்ல பலன் அடைவார்கள் என்பது நிச்சயம்.

### விளம்பர விகிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 15 | 0 | 0 |
| அரை பக்கம் | „ | 8 | 0 | 0 |
| கால் பக்கம் | „ | 5 | 0 | 0 |

## கிரஹலக்ஷ்மி காரியாலயம்

தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை.

### சந்தாதார் விண்ணப்பம்.

ஐயா,

தங்கள் பத்திரிகை "கிரஹலக்ஷ்மி"க்கு நான் சந்தாதாராக விரும்புகிறேன். என்னை..................................மாதத்திலிருந்து சந்தாதாராகச் சேர்த்துக்கொண்டு பத்திரிகையை அனுப்பி வரவும். ரூபாய்.......................... சந்தாத் தொகையை அனுப்பியிருக்கிறேன்.

பெயர்..........................................................................

உத்தியோகம்..................................................................

விலாசம்...........................................................................

..........................................................................

சின் முதல் தலைவராக ஒப்புக் கொள்ளப் பட்டார். இருவரும் தேச மக்களால் பல வித மரியாதைகளும் அளிக்கப்பட்டனர். முதலில் இருவரும் ஒரு ஹோட்டலி லேயே தங்கினர்.

## டாக்டர் சென் மரணம்

சில நாட்களில் சென்னுக்கு மூத்திரக் காய் உபத்திரவம் ஏற்பட்டது. அவரை சிகிச்சைக்காக ராக்பெல்லர் பவுண்டே வுன் நர்ஸிங் ஹோமுக்கு எடுத்துச் சென் றனர். வியாதி வர வர அதிகமாயிற்று. வைத்தியர்களும் கைவிட்டு விட்டனர். வியாதி குணத்துக்கு வராது என்று அவர் கள் கூறிவிட்டனர். உடனே சென் அவரது பழைய நண்பரான டாக்டர் வெல்லிங்டன் கூ என்பவர் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்த நிலையிலும் ஸ்ரீமதி சென் அவர் படுக்கைப் பக்கத்திலேயே இருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகள் புரிந்து வந் தாள். படுக்கையிலிருந்து கொண்டே சென் தன் மனைவியின் மூலம் தேச மக் களுக்கு அடிக்கடி செய்திகள் அனுப்பு வார். சில சமயங்களில் அவர் சொல்ல, கடிதங்கள் வரைவாள் ஸ்ரீமதி சென். அவரது ஞாபகக் குறிப்புகளும் அப் பொழுது எழுதப்பட்டன. அவரது "மரண சாஸனம்" இவ்வாறே எழுதப் பட்டு பூர்த்தி அடைந்தது. சீன தேச மக்கள் அச் சாஸனத்தை ஒரு விலை மதிக்க முடியாத கிரந்தமாக மதித்துப் போற்றி வருகிறார்கள்.

கடைசியில் பத்து வார சுரத்தினால் மா பெரும் வீரர் டாக்டர் சன் யாட் சென் 1925-ம் வருஷம், மார்ச்சுமீ 12உ கால மானார். அவரது உடலை படுக்கையினின் றும் எடுத்த பொழுது, தலையணையின் கீழ் டாக்டர் சென் மனைவிக்குக் கொடுத்த சாஸனம் இருந்தது. அதில் அவர் தன் மனைவிக்கு அவரிடமிருந்த சொத்துகளா கிய ஷாங்கையிலுள்ள அவர் வீட்டையும், புஸ்தகங்களையும், பழந்துணிகளையும் ஞாப கார்த்தமாக எழுதி வைத்திருந்தார். கணவன் சிங்கலிங்குக்கு கொடுத்த கல் யாண வெகுமதி இவைகள்தான். தனக்கு தன் கணவனளித்த பிரதம வரம், தான் தேச சேவை செய்ய சந்தர்ப்பம் கிடைத் ததுதான் என்று இன்னும் ஸ்ரீமதி சென் கூறி வருகிறாள்.

## பின்னர்

சன் யாட் சென் இறந்த பின் சீன அர சியலில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. சென்னின் வலது கைபோன் றவரான சியாங் கே ஷேக் கொள்கை மாறி விட் டார். ரஷ்யாவின் உதவியை அடைய வேண்டுமென்பது சென் கொள்கை. ஆனால் ஷேக் ரஷ்யாவின் உதவியை மறுத்து ஜப்பான் ஆதிக்கத்துக்குச் சற்று உட்பட்டார். பொது உடைமைக்கு விரோதமாகவும் சில காரியங்கள் செய் தார். உடனே ஸ்ரீமதி சென் அரசியல் வாழ்க்கையை விட்டு விலகினாள். தன் சகோதரர்களையும் விலகச் சொன்னாள். ஆனால் அவர்கள் முதலில் தங்கள் சகோ தரியின் புத்திமதியை அலட்சியம் செய்து தள்ளினார்கள். சியாங் கே ஷேக் சர்க்கா ரில் உயரிய ஸ்தானங்களை அவர்கள் ஏற் றார்கள்.

ஸ்ரீமதி சென் சைனாவை விட்டு ரஷ்யா வுக்கு வந்து சில வருஷங்கள் வசித்து வந் தாள். அரசியல் சமரஸங்கள் அவளுக்குப் பிடிக்காது. பிடிவாத லட்சிய மனுஷி. சில வருஷங்கள் கழித்து மறுபடியும் சைனா வுக்கு வந்து ஷாங்கையில் தன் இல்லத்தில் இன்னும் வசித்து வருகிறாள். அவள் சகோதரர்களும் அவளுடன் இன்று சேர்ந்து கொண்டார்கள். சைனாவின் விடுதலைப் போராட்டம் இன்னும் பூர்த்தி யடைய வில்லை யென்றும் அவள் கருது கிறாள். அவளுக்கு ரஷ்யாமீது அன்பும், ஜப்பான் மீது வெறுப்பும் உண்டு.



பொங்கல் அக்னி.



பொங்கல் வேலையோ!



குற்றாலம் நீர்வீழ்ச்சி.

குற்றாலம் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த ஆரோக்கிய ஸ்தலம். கோடை காலத்தில் பிரமுகர்களும், இதரர்களும் இங்கு வந்து நீர் வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து சுகம் அடைகிறார்கள்.

# சமையல்

## ஸோயாபீனும் அதன் உபயோகங்களும்

**திரு. கோபால் ராவ், எம்.ஏ.**

ஸோயாபீன் ஒரு உயர்ந்த போஷணையுள்ள ஆகாரம். அது நாட்டுப் பயறைப் போல இருக்கும். ஆனால் அதில் சுக ஆரோக்கியத்திற்கு வேண்டிய முக்கியமான ஆகார வஸ்துக்களெல்லாம் அடங்கியிருக்கின்றன. அதில் நரம்பு வளர்ச்சி, சதைவளர்ச்சிக்கு வேண்டியவைகளும், பலமும் சக்தியும் ஊட்டுவதற்கு வேண்டிய சராசரி கொழுப்பும், கால்ஷியம், பாஸ்பரஸ், இன்னும் இதர உப்புகளும், நம் தேகத்தின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு வேண்டிய வைடமின்களும் (சத்துப் பொருள்கள்) அடங்கியிருக்கின்றன.

நமது ஆகாரத்தில் மேலே கூறியவைகளெல்லாம் அவசியமாகத் தேவையிருக்கின்றன. ஏனென்றால் நாம் அரிசியையே முக்கிய ஆகாரமாகக் கொள்ளுகிறோம். ஆகையால் முக்கியமாக, மாமிசம்சாப்பிடாதவர்கள் தங்களுடைய ஆகாரத்திலிருந்து போதிய போஷணைபெற ஸோயாபீன் உபயோகப்படுத்த வேண்டும். ஏனென்றால் அதனுடைய வளர்க்கும் குணங்கள், மாமிசத்தில் காணப்படுபவைகளைவிடச் சிறந்ததாயிருக்கின்றன. ஸோயாபீனை மாமிசம் உண்ணுதவர்கள் மட்டும் அல்லாமல் மற்ற யாவரும் உபயோகப்படுத்தலாம். அது கெட்டுப்போன இறைச்சியை உபயோகப் படுத்துவதாலுண்டாகும் கெடுதல்களை நீக்குகிறது.

இந்தியாவில் ஸோயாபீனின் உபயோகம் மிகவும் போற்றப் படுகிறது. மேலும், ஸோயாபீன் இறக்குமதி அதிக மாவதிலிருந்தும், சாகுபடி அதிகப்படுத்தப்படுவதிலிருந்தும் அதனுடைய மதிப்பு நன்கு விளங்கும். எனினும் அதில் இருக்கும் ஆகாரத்திற்கு வேண்டிய வஸ்துக்களைப் பற்றியும், அதை சமைக்கும் விதத்தைப் பற்றியும் பிரசாரம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. அது தென்னிந்தியாவில் சாதாரணமாக உபயோகப்படும் பயறைப்போலிருந்தாலும் அது சமைக்கப்படும் விதம் வேறு. சமையலில் பாகுபாடு செய்யாமல் ஸ்திரமான ஒரு முறையைக் கையாள வேண்டி கீழே சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### ஸோயா தோசை, இட்டிலி

ஸோயா தோசை, இட்டிலி அவைகளுடைய இனிமையான ருசிக்குமட்டுமன்றி, போஷணைசக்திக்கும் இன்றியமையாதவை.

அரைப்படி (மதறாஸ்) ஸோயாபீனை முன்னிரவில் 10 மணி நேரத்திற்கு ஊரவைக்க வேண்டும். மறுநாள் காலை அதை நன்றாக இரண்டு மூன்று தடவை சுத்தமான தண்ணீரில் கழுவி மாவாக அரைக்கவேண்டும். ஒரு படி (மதறாஸ்) அரிசியைத் தண்ணீரில் இரண்டு மணி நேரம் ஊரவைத்து முன்போல் இதையும் மாவாக அரைக்கவேண்டும். பிறகு இவ்விரண்டையும் கலந்து

இரண்டு அவுன்ஸ் உப்பையும், கொஞ்சம் தண்ணீரும் சேர்த்து, வழக்கமாக தோசை தயாரிப்பது போல் தயாரிக்க வேண்டும். வேண்டுமானால் ஸோயாபீனோடு உளுத்தம் பருப்பும் சேர்க்கலாம். இப்பொழுது அரிசியின் அளவு 1 படி யாகவும், ஸோயா பீன் $\frac{1}{4}$ படி யாகவும், உளுத்தம் பருப்பு $\frac{1}{4}$ படி யாகவும், உப்பு இரண்டு அவுன்ஸாகவும் இருக்க வேண்டும். இம் மூன்றையும் தனித் தனியாக ஊரவைத்து அரைத்து முன் போல் தயாரிக்க வேண்டும்.

அன்று அரைத்த மாவை அன்றைக்கே உபயோகப் படுத்துவது மிகவும் நலம். ஏனென்றால் நாட் கழித்தால் ஒரு வித மான கெட்ட நாற்றம் ஏற்பட ஆரம்பித்து விடும். இந்த மாவு இட்டிலி தயாரிப்ப தற்கும் உபயோகப்படும். சாதாரணமாக இட்டிலி தயாரிப்பது போல் தான் இதை யும் தயார் செய்யவேண்டும்.

## ஸோயா சாம்பார், கூட்டு

ஸோயாபீன் சாம்பார் செய்வதற்கு $\frac{1}{4}$ படி ஸோயாபீனை ஐந்து அல்லது ஆறு மணி நேரம் தண்ணீரில் ஊரவைத்து நன்றாக கழுவவேண்டும். ஒரு பாத்திரத் தில் போதுமான தண்ணீரை எடுத்துக் கொண்டு கொதிக்க வைக்கவேண்டும். இதன் கூட கால் படி பருப்பைச்சேர்த்து இவ்விரண்டும் நன்றாக வேகும் வரை கொதிக்க வைக்கவேண்டும். பிறகு தண் ணீரில் இரண்டரைப் பலம் புளியைக் கரைத்து, அதை கொதிக்கும் பருப்பிலும் ஸோயாபீனிலும் சேர்க்கவேண்டும். பிறகு கடுகு, உளுத்தம்பருப்பு முதலிய மற்ற அவசியமான சாமான்களையும், 2 பலம் உப் பையும் போட்டு வழக்கமாக சாம்பார் தயாரிப்பது போல் செய்து முடிக்கவேண் டும்.

ஸோயாபீன் கூட்டு தயாரிப்பதற்கு கால் படி ஸோயாபீனையும், 1/8 படி பருப் பையும் முன் போல் கொதிக்க வைத்து ஒரே மாதிரி அளவில் வெட்டப்பட்ட காய் கறிகள் 15 பலத்தைச் சேர்க்க வேண்டும். முன் போல் $2\frac{1}{2}$ பலம் புளியைக் கரைத்த தண்ணீர், 2 அவுன்ஸ் உப்பு மற்றும் வேண்டியவைகளைச் சேர்த்து சாதாரண மாக கூட்டு தயார் செய்வது போல தயாரிக்க வேண்டும்.

ஸோயாபீனுக்கு பதிலாக ஸோயா பருப்பையும் உபயோகிக்கலாம். ஆனால் அதை உபயோக படுத்துவதற்கு முன் அதை ஊறவைப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

## ஸோயாபீன் சுண்டல்

முன்னிரவில் ஸோயாபீனை ஊறவைத்து 45 நிமிஷத்திற்கு கொதிக்கவைக்க வேண் டும். பிறகு அதிலுள்ள தண்ணீரை வடி கட்டி விட்டு, கொதித்ததில் மிளகாய் பொடி, உப்பு, மற்றும் தேங்காய் முதலிய வேண்டிய சாமான்களையும் சேர்க்க வேண் டும். வேண்டு மானால் ஸோயாபீன் தோலை எடுத்து விடலாம். பிறகு அதன் கூட கொஞ்சம் எண்ணெயும் கடுகும் சேர்த்து ஒரு சட்டியில் போட்டு இரண்டு நிமிஷத்திற்கு பொரிக்க வேண்டும்.

## ஸோயா பூரி

கோதுமைமா 3 ஆழாக்கு, ஸோயா மா ஒரு ஆழாக்கு, பருப்பு கால் பலம், இம் மூன்றையும் கொஞ்சம் தண்ணீருடன் சேர்த்து, இத்துடன் 1 பலம் நெய்யையும்





சேர்த்து நன்றாகப் பிசைந்து பூரிகள் செய்ய வேண்டும். நெய்யிலாவது தேங் காய் எண்ணெயிலாவது தயாரிக்கலாம்.

## தித்திப்பும் உறைப்பும்

கோதுமை அல்லது பருப்பு மாவால் செய்யப்படும் எல்லா விதமான தித்திப்பு, உறைப்பு வஸ்துக்களும், ஸோயா மாவின் உதவியால் செய்யலாம். உதாரணமாக மைசூர்பாகு என்னும் தித்திப்பு தின்பண் டம் கீழ் வருமாறு செய்யலாம்:—

போதுமான தண்ணீரில் 2 பவுண்டு அஸ்கா சர்க்கரையை அது இலேசாக கெட்டி யாகும் வரை கொதிக்கவைத்து, ஸோயா மா அரை பவுண்டு, உளுத்த மா அரை பவுண்டையும் சேர்த்து சர்க்கரைபாகுடன் சேர்க்கவேண்டும். பிறகு நன்றாகக் கலக்கி 2 பவுண்டு நெய்யும் சேர்த்தால் அது இலே சான பொன்மை நிறத்திற்கு மாறும். பிறகு அதை ஒரு தட்டில் ஊற்றி ஆறவைத்தால் "மைசூர்பாகு" அல்லது "ஸோயாபாக்" காக ஆகிவிடும்.

"ஓமப்பொடி" என்னும் உறைப்பு தின் பண்டம் செய்யும் விதம் கீழ்வருமாறு:—

கடலைமா $1\frac{1}{2}$ பவுண்டு, ஸோயா மா அரை பவுண்டு, அரிசிமா முக்கால் பவுண்டு, ஓமம் முக்கால் அவுன்ஸ், உப்பு ஒரு அவுன்ஸ் இவைகளை கொஞ்சம் தண்ணீருடன் சேர்த்து கெட்டியாக்க வேண்டும். 4 அவுன்ஸ் நெய்யைச்சேர்த்து நன்றாகப் பிசைந்து "ஓமப்பொடி" செய் யும் பாத்திரம் மூலம் நெய் அல்லது தேங்காய் எண்ணெ கொதிக்கும் சட்டியில் பிழிந்து வழக்கம் போல் தயார் செய்ய வேண்டும்.

இவைகள் தயார் செய்வதில் ஸோயாமா அதிகமாக உபயோகப் படுத்தப் பட்டால் ருசி கெட்டு போய் விடுமாதலால் மொத்த மாவில் நான்கு அல்லது ஐந்தில் ஒரு பங்குக்கு மேல் சேர்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஸோயாமா புதிதாகத் தயாரிக்கப் பட்டதாக இருக்க வேண்டும்.

ஸோயாமா தயாரிப்பதற்கு, முதலில் ஸோயாவை வெயிலில் ஒன்றிரண்டு நாள் காயவைத்து உமியை போக்கி யந்திரத் தின் மூலம் அரைக்க வேண்டும்.

## ஸோயா காப்பி

ஸோயாபீனை நன்றாக உலரவைத்து காப்பிக்கொட்டை மாதிரி வறுத்து அறைத் தால் காப்பிப் பொடியை ஒத்த நிறமும் வாசனையும் வரும்.

இதன் மூலம் காப்பி தயார் செய்து சாப்பிட்டால் ஊக்கமும், வளர்ச்சியும் உண் டாகும். காபி, டீ, முதலியவைகளைவிட இது சிறந்தது.

## ஸோயா ரொட்டியும், பிஸ்கத்தும்

அளவு கொஞ்சமாக ஸோயா மாவை யும் கோதுமை மாவையும் சேர்த்து தயா ரிப்பதனால் ஸோயா ரொட்டி ஏற்படுகிறது. பிஸ்கத்துக்கு வேண்டிய அளவில் இவ்வி ரண்டையும் சேர்த்து தயாரித்தால் ஸோயா பிஸ்கத்து உண்டாகிறது.

ஆகையால் தென்னிந்தியாவில் உபயோ கப் படும் அநேக விதமான மாவுகளுக்கு பதிலாகவும், அவைகள் கூடவும் பல வித மான தின்பண்டங்கள் தயாரிப்பதற்கு ஸோயாபீன் உபயோகமாகிறது.

ஆனால் அதை உபயோகப் படுத்துவதற்கு முன்பு அதை நன்றாக ஊறவைத்துக் கழுவவேண்டும். பச்சைபயிறு, உளுந்து இவைகளைப் போல ஸோயாவை பச்சையாக உபயோகப் படுத்தக் கூடாது.

ஸோயா மூலமாகத் தயாரிக்கும் பண்டங்கள் எண்ணை ஜாஸ்தி இருப்பதினாலும், ஸோயாமா சீக்கிரம் ஜீரணமாகக் கூடியதாயில்லையாகையாலும், அதை மற்ற மாவுடன் கலக்கும் போது முறையே 1, 4, 5- என்ற விகிதா சாரப்படி சேர்க்க வேண்டும்.

ஸோயாபீனை அதிகமாக உபயோகப் படுத்தக் கூடாது. ஏனென்றால் அதிகமாக உபயோகப் படுத்தினால் அது சீக்கிரம் ஜீரணசக்திக்கு வராமல் வயிற்று வலியை உண்டாக்கும்.

ஸோயாபீன் பக்குமாவதற்கு அது நல்லதாயிருந்தால், மற்ற சாதாரண பயிறுகளையெல்லாம் விட சீக்கிரமாகவே பக்குவமாய்விடும். மஞ்சள் நிற ஸோயா தான் உயர்ந்த ரகமென்றும், அது 45 நிமிஷத்திலேயே பக்குவமாகி விடுகிறதென்றும் சொல்லப் படுகிறது.

## குந்தியும், கிருஷ்ணனும்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒருநாள் குந்திதேவியை நோக்கி "அத்தை! எத்தனையோ ஜனங்கள் என்னிடம் வரங்கள் பெற்று சுகமடைந்திருக்கிறார்கள். நீயும் ஏதாவதொருவரம் கேள்" என்றார்.

"அப்ப! எனக்கு என்ன வரம் வேண்டும்? நீ சௌக்கியமாக விருந்தாயானால் அதுவே போதும்" என்றாள் குந்திதேவி.

ஏதாவது ஒருவரம் கேட்டுத்தானாக வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிடிவாதம் செய்தார்.

"கிருஷ்ணா! வரம்கேட்பதானால் நான் என்னைச்சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் கேட்பேன்" என்றாள் குந்திதேவி.

"தாராளமாகக் கேள், தருகிறேன்" என்றார் பகவான்.

"எனக்கும் என்னைச் சேர்ந்தோருக்கும் சதா சர்வகாலமும் துக்கத்தைக்கொடு" என்று குந்திதேவி வரம் கேட்டாள்.

கிருஷ்ணபகவான் இதைக்கேட்டு ஆச்சரியங்கொண்டு "என்ன இத்தகைய வரம் கேட்டாய்?" என்று வினவினார்.

"ஏன் கிருஷ்ணா! இதிலென்ன ஆச்சரியம்? துக்கம் வந்த காலத்தில் தானே உன்னை நினைக்கமுடியும்?" என்று குந்திதேவி பதில் கூறினாள்.



# குழந்தை வளர்ப்பும், நமது நிலையும்

டாக்டர் ஏ. ஜே. பாண்டியன்.

ஒவ்வொரு தம்பதிகளும் தாங்கள் வசிக்கும்படியான இடம் சிறியதாய் இருந்த போதிலும் அதைக் கூட்டிப் பெருக்கி, கண்ணுக்கு அலங்காரமாக்கிப் போதிய காற்றோட்டமும், வெளிச்சமும் வரும் வசதிகளை உண்டுபண்ணி, நித்திய ஸ்நானம் செய்து சுத்தமாயுள்ள உடைகளை அணிந்து தேகத்திற்கு ஆரோக்கியமான ஆகாரங்களை வேளா வேளையில் உண்டு, வீட்டு வேலைகளை முடித்து சற்று ஓய்விருக்கும் வேளையில் சங்கீதம், சித்திரம், காவியம், ஓவியம் முதலிய அருங்கலைகளை அப்பியசித்து நல்ல தேகப்பயிற்சியுடனும் தெய்வ பக்தியுடனும் உற்சாகமாய் இருந்து கொண்டு இல்லறத்தை நடத்துவார்களானால் அந்த நல்லறம் அவர்களுடைய இணையில்லா சந்ததி உற்பத்திக்கு இன்றியமையா சாதனமாக இருக்கும்.

இவ்வகையே குடித்தனம் நடத்துகையில் இடையில் இயல்பாய் ஏற்படும் சம்பவங்களை எவ்வகையில் கவனித்தல் அவசியம் என்று அறிவோம். ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாயிருக்கையில் "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற பிரகாரம் அவள் தன் இயல்புக்கு மிஞ்சினவைகளில் இச்சை கொள்ளாது, தனக்குக் கிடைத்தவைகளில் திருப்தி கொண்டு மன உல்லாச நிலையை மாறவிடாது எப்பொழுதும் சுறுசுறுப்போடும் முகமலர்ச்சியோடும் விளங்கி தன் இல்வாழ்க்கையை நடத்த வேண்டும். அதற்கு ஏற்ப கணவனும் அவளுடைய மனோபீஷ்டங்களைத் தெரிந்து யாதொருவிதக் கஷ்டமும் இல்லாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

சரீரத்தில் காயமுண்டானால் தழும்பு உண்டாகி உடல் மேனி குறைவதுபோல் மனதிற்கு அயர்ச்சி ஏற்பட்டால் கண்ணுக்குப் புலப்படாத தழும்பு ஒன்று உண்டாகிறது. இவ்விதம் பல தழும்புகள் உண்டாக உண்டாக கர்ப்பத்திலிருக்கும் சுக துக்க நிலை மாறுதல் அடையும்.

## குழந்தை வளர்ப்பு

குழந்தை பிறந்தபின் முதல் நான்கு மாதங்களில் அவ்வளவு இடையூறுகள் இல்லை. அதற்கு மேல் குழந்தைகள் வளர வளர ஆகாரத்தில் பலவித மாறுதல்களை ஏற்படுத்திவிடுகிறோம். அக்காலத்தில் குழந்தைகளுக்குப் பலவித ரோகங்கள் ஏற்படுகின்றன. அஜீரணத்தால் குழந்தை தன் உற்சாக நிலையை இழந்து வயிற்றுவலி தாங்க மாட்டாமல் காலையும் கையையும் உதறி சதா அழும். அதனால் குழந்தையின் குணத்தில் ஒரு சிறு மாறுதல் ஏற்படுகிறது. இவ்விதம் ஒவ்வொரு தடவையும் குழந்தை அழும்பொழுது அணு அணுவாய் அதன் குணத்தில் பல மாறுதல் அடைந்து விடுகிறது. தவழும் பருவத்திலும், பல் முளைக்கும் பருவத்தி

லும், ஓடியாடித்திரியும் பருவத்திலும் பற்பல மாறுதல்களை அடையும். கரப்பான் என்னும் வியாதி வருங்காலத்தில் அவை படும்பாட்டைச் சொல்லி முடியாது. அப்பொழுது குணம் மாறுதலை அடையும். சுரம் ஏற்பட்டாலும் மற்ற எவ்வித ரோகங்கள் உண்டானாலும் குழந்தைகளின் குணமும் மனப்பான்மையும் மாறுவது இயல்பு.

மக்களின் வாலிப காலத்தில் தான் நன்மை தீமைகளை அறிந்துகொள்ள முடியும். அறியாப்பருவம், முதுமைப் பருவத்திற்கு முந்தியதாதலால் திருத்தவேண்டியவைகளைத் திருத்திக் கொள்ளவும் இதுவே சமயம். அருங்கலைகளைக் கற்றுக் கொள்ளவும், அருங்குணங்களைத் தெரிந்து கொள்ளவும் இதுவே தருணம். ஆதலால் பெற்றோர்கள் இப்பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு நல்ல சகவாசத்தையும், தங்கள் தங்கள் காரியத்தில் ஊக்கத்தையும், கல்விப் பயிற்சியில் உற்சாகத்தையும், தெய்வ பக்தியையும், தீமையில் வெறுப்பையும் உண்டு பண்ணி இடைவிடாது பகவானை வேண்டிக்கொள்ள வேண்டும். இதுவே பெற்றோர்கள் முக்கிய கடமையாகும்.

“தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்றபடி பாலப் பருவத்தில் மனதைத் தெய்வத்தில் ஈடுபடுத்தி ஜெபம் பண்ண குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதே ஒவ்வொரு பெற்றோரின் கடமை.

இன்னமும் பெற்றோர்கள் சுய பாஷையில் குழந்தைகளுக்கு அபிமானத்தையும் தேச பக்தியையும் புகட்ட வேண்டும். நமது இந்தியா தேசத்தில் அநேக அரசர்களுடைய ஆட்சி மாறுதல்களால் ஏற்பட்ட நன்மைகளைவிட தீமை அதிகம். நமது பாஷையின் பெருமை குன்றி விட்டது. வைத்தியம், வாடகம், ஜாதகம், வான சாஸ்திரம், ரேகை சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம், முதலிய அரும் பெருங் கலைகளும் அவற்றின் பெருமையை இழந்து மங்கிக் கிடக்கின்றன. இன்னும் புண்ணிய வசத்தால் மீதியாகக் கிடப்பது நமது தேசத்துப் பெண்மணிகளின் கற்பு நிலைமை ஒன்றே.




பொங்கல் நடனம்.



ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மாள்,
ராமநாதபுரம் ஜில்லா போர்டு
அங்கத்தினர்.



சமுத்திர ஸ்நானம்

# ஸ்திரீகளின் நிலைமை.

ஸ்ரீமதி கிருஷ்ணவேணி.

ஆடவர்களுக்குச் சரி சமானமானவர்கள் பெண்கள் என்று வேதங்களும், சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும் கூறுகின்றன. ஆதிமூலரான ஸ்ரீமந்நாராயணன் மகாலக்ஷ்மியை தனது நாபிக்கமலத்தில் வைத்திருக்கிறார். அன்றி பரமேஸ்வரன் தன் மனைவிக்கு தன் உடலில் பாதியைக் கொடுத்து அர்த்தநாரி என்ற பெயருடையவராக விளங்குகிறார். சதுர்முகப் பிரம்மனோ என்றும் தன்பத்தினியான சகல வித்தைகளுக்கும் ஆதியான சரஸ்வதியை தன் நாவிலேயே வைத்திருக்கிறார்.

இவைகளினால் நமக்குத் தெரிவது யாது? ஸ்திரீகளின்றி தேவர்களே தமது காரியங்களை நடத்த முடியாதெனில், கேவலம் அவர்களுக்கு முன் கிருமிகளைப் போன்ற மானிடர்கள் ஸ்திரீகளின் உதவியின்றி யாது செய்ய முடியும்?

ஸ்திரீகளின் பெருமையை யறியாத நம்மவர்களில் பெரும்பாலோர் தங்கள் அடிமையைப் போல் அவர்களை நடத்துவது மிகவும் பரிதபிக்கத்தக்கதாக இருக்கிறது. ஸ்திரீகளுக்கு கல்வியும், ஞானமும் அவசிய மற்றது என்றும், அதனால் நன்மை விளையாதென்பதும் சிலரது கருத்து. ஸ்திரீகள் வீட்டு வேலை செய்வதற்குத்தான் பிறந்திருக்கிறார்கள் என்றும் சிலரது எண்ணம்.

முற்காலங்களில் நம் நாரீமணிகளுக்குக் கொடுத்து வந்த சுதந்திரம் இப்பொழுதில்லாததால் அவர்கள் படும்பாடு சொல்லொணாததாகும். அதற்காகவே நம்மவர்களில் சிலர் விழித்துக் கொண்டு தங்களாலான முறைகளில் நமது தேச முன்னேற்றத்திற்கும், நமது நாட்டு நாரீமணிகளின் முன்னேற்றத்திற்கும் பாடு பட்டு வருகின்றனர்.

நமது நாட்டுப் பெண் மக்களின் நிலைமையை நினைக்கின் நெஞ்சம் குமுறுகின்றது. ஏராளமான தான தருமங்கள் நடத்தி தம் தம் கணவர்களுக்கு நற் கீர்த்தியும் பேரும் புகழும் கொடுத்து தாங்களும் உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்த நம் பெண்மணிகள், இப்பொழுது மிகவும் கஷ்டப்படுவதை நோக்குங்கால் யார் தான் மனம் வருந்தார்?

பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அவர்களுக்குச் சரியான முறைகளில் கல்வி கற்பித்தால் ஆண்களைவிட நல்ல நிலைமையிலிருப்பார்கள். அவர்கள் உதவியும் ஆலோசனையும் இல்லாமல் எந்த நற்காரியமும் செய்ய முடியாது.

ஸ்திரீகள் உத்தியோகங்கள் செய்வதற்கும் தகுதி யுடையவர்களே. இப்பொழுது நாம் பெண் டாக்டர்கள், பெண் வக்கீல்களைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் இத்துறைகளில் தேர்ச்சி பெற்றிருப்பது பாராட்டத் தக்கது. பெண்கள் பொது வேலைகளுக்கு லாயக்கில்லை என்றும், அவர்கள் போட்டி வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தும் என்றும், அதிகமான வேலை செய்ய அவர்கள் தக்கவர்கள் அல்லவென்றும் சிலர் கருதுகின்றனர். அவ்வாறு நினைப்பது நன்றன்று.

சிறு வயதிலேயே கலியாணம் செய்யப்பட்டு கணவனை யிழந்த பெண்களின் கணக்கு சொல்லி முடியாது. இவர்களையேனும் நல்ல பள்ளிகளில் சேர்த்து நல்வழிக்கு வரும்படி செய்துவிடலாம். ஆனால் சில பெண்மணிகள் தமது கணவன் இருந்தும் தங்களைப் பாதுகாப்பாற்றாமல்—தனது வேலையில்லாத் திண்டாட்டத்தாலோ அன்றி வேறு காரணங்களாலோ—கைவிட்டுவிடப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களின் உதவியாலாவது, பந்துக்களின் உதவியாலாவது பிழைக்க நேரிடுகிறது. அந்தோ பரிதாபம்!

படிப்பினால் பெண்களுக்கு கர்வம், அகங்காரம் முதலிய தீய குணங்கள் போய் நற்குணங்கள் உண்டாகின்றன. அவர்களும் எல்லாவித வேலைகளை செய்வதோடு தமது 'கற்பு' என்னும் பெரியதொரு குணத்தைக் கைப்பிடித்து தமது கணவர்களைக் கடவுளைப் போல் மதித்து வருவார்களாயின் யாதொரு குறையும் ஏற்படாது. ஆடவர்களும் பெண்களைத் தமது அடிமைகளென்று மதியாமல் அவர்களை அப்பொழுதுக்கப்பொழுது சந்தோஷப்படுத்திவந்து நல்ல வார்த்தைகளால் நன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும்படி செய்தால், பாரதத்தாய் சந்தோஷமடைவாள். இன்னும் சில வருஷங்களில் அநேக நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு ஸ்திரீகள் நல்ல ஸ்தானத்தை அடைந்து அதனால் தம்மைக் கடைபிடித்தவர்களுக்கு நல்ல கீர்த்தியைக் கொடுப்பார்கள் என்பது உண்மை.

# அன்னாம்

ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி

ஆதிகாலத்தில் இந்துக்கள் தங்கள் நாகரிகத்தை கடல்கடந்து அயல்நாடுகளுக்கும் பரப்பிவந்தார்கள் என்பதற்கு இன்னும் அத்தாட்சியாயிருக்கும் தேசங்களில் அன்னாம் தேசமும் ஒன்றாகும். இதன் சரித்திரமே வெகு நூதனமானது. ஆனால் இத்தேசத்தின் சரித்திரத்தை இன்னும் பூராவாக நம்மால் உணர முடியவில்லை. போதியசான்றுகளும், சிலாசாசனங்களும் மலைகளிலும், காடுகளிலும் புதைந்து மறைந்து கிடக்கின்றன. சுமார் 5000 வருஷங்களுக்கு முன்னரே கங்கைக்கரையினின்றும் ஆரியர்கள் அன்னாமுக்குவந்து குடியேறினர். அது பலமாறுதல்களுக்குட்பட்டு சைனாவின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு சக்கிராதிபத்தியமாயிருந்தது. இன்று அன்னாம் பிரஞ்சு அதிகாரத்துக் குட்பட்ட ஒரு காலனியாக இருந்து வருகிறது. இதன் விஸ்தீரணம் சுமார் 52,100 சதுர மைல்கள், ஜனத்தொகை சுமார் அறுபது லட்சம்; இரண்டாயிரம் பேருக்கு மேற்பட்ட ஐரோப்பியர்களும் அந்நாட்டில் இன்று வசித்துவருகிறார்கள்.

## அரசியல்

அன்னாம் இப்பொழுது ஒரு சுதேசமன்னரால் ஆளப்பட்டு வருகிறது. அவருக்கு யோஜனைகூற ஒருமந்திரி சபையும் உண்டு. சுதேசமன்னர் தன் இஷ்டப்படி செய்ய முடியாது. அவரது வேலைகளை மேற்பார்வையிட பிரஞ்சு சர்க்கார் ரெஸிடென்ட்-சுப்பிரியர் என்ற ஒரு உத்தியோகஸ்தரை அன்னாமில் நியமித்திருக்கிறார்கள். அவரது அதிகாரத்துக்குட்பட்டே சுதேசமன்னர் தன் காரியங்களைச் செய்து வரவேண்டும்; பிரஞ்சு உத்தியோகஸ்தர்களே அநேகமாக உள்நாட்டு ஆட்சியையும் நடத்தி வருகிறார்கள். இந்த நாட்டின் தலைநகரம் ஹியு. இங்கே பிரஞ்சு ராணுவம் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கிறது. சுதேச நீதி ஸ்தலங்களிலிருந்து பிரஞ்சு உயர்தர கோர்ட்டுகளுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.



அன்னாமிய மாதர் வீட்டுக்குள் அகலமான சராய் அணிந்து மார்பை மூட ஒரு துண்டு கட்டிக் கொள்ளுகிறார்கள். முதுகும், கைகளும் மூடப்பட்டிருக்கவில்லை.



அனாமி ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை முதுகோடு சேர்த்துக் கட்டித் தூக்கிச் செல்லுவார்கள்.

## வியாபாரம், கைத்தொழில்

இத்தேசத்தின் முக்கிய விளைபொருள் நெல். சோழம், பருத்தி, கரும்பு, வெற்றிலை, தேக்கு, ரப்பர், காப்பி முதலியனவும் பயிர்செய்யப் படுகின்றன. குவாங்னாம் மாகாணத்தில் தங்கம், செம்பு, ஈயச்சுரங்கங்களும், துரான் நகருக்குஅருகில் நிலக்கரியும், இன்னும் அநேக பாகங்களில் உப்பளங்களும் இருக்கின்றன. இப்பொருள்களில் பிரான்சுடனும் இதர ஐரோப்பிய நாடுகளுடனும் சுமார் கோடி பிராங்கு மதிப்புள்ள வியாபாரம் நடந்து வருகிறது. பிரஞ்சு சர்க்கார் சுங்கம் வசூலிக்கிறார்கள்.

அன்னாமின் முக்கியநகரங்கள் ஹியூ, பின்தின், துரான், குயி-னான், க்ஸா யான்தே. கடைசி மூன்று நகரங்களும் துறைமுகப் பட்டணங்கள்.

## ஜனங்கள்

அன்னாம் மக்களில் பெரும்பான்மையோர் அனாமிகள்; தவிர சீனர்கள், சம்பகர்களும் இங்கு இருக்கிறார்கள். காட்டு மிராண்டி ஜாதியினரும் பலர் மலைப் பிரதேசங்களிலும், வனங்களிலும் வசித்து வருகிறார்கள். காட்டு மிராண்டி ஜனங்கள் எல்லாரையும் மோயி என்ற பொதுப் பெயரால் அழைக்கிறார்கள்.

சீனர்களே வியாபாரத்தை நடத்தி வருகிறார்கள். அனாமிகள் அவர்களை "மாமா" என்று அழைக்கிறார்கள். இருந்த போதிலும் அனாமியர்களே ஆதிக்கம் வகித்து வருகிறார்கள். ஆண், பெண் இரு பாலாரும் ஒரு மாதிரியான உடையே அணிகிறார்கள். உடையிலும், மற்றும் வெளித்தோற்றத்திலும், ஆடவரும், ஸ்திரீகளும் அநேகமாக ஒரேமாதிரியே இருக்கிறார்கள். இருவரும் பனைஓலையால் அல்லது வைக்கோலால் செய்யப்பட்ட குல்லாய்களையே அணி

கிறார்கள். வீடுகள் ரொம்பவும் சிறியவைகளாகவே யிருக்கின்றன. கடைகளில் மாதர்களே எல்லா வியாபாரமும் செய்து வருகிறார்கள். சந்தைகளுக்குப் போக பெரிய கூடைகள் இரண்டை ஒரு தடியில் போட்டு தங்கள் தோளில் தூக்கிக் கொண்டு போவார்கள். வீடுகளிலும் சில்லரைக் கடைகளை நங்கையர் வைத்து வியாபாரம் செய்கிறார்கள். அவர்களிடம் சுத்தமில்லை. வெற்றிலை போட்டுக் கண்ட இடங்களிலெல்லாம் துப்புவார்கள். பல்லுக்கும் கலர் பூசிக்கொள்வார்கள்.

மார்க்கெட்டில் மாதர் கூட்டம் தான் எங்கு பார்த்தாலும் தென்படும். ஸ்திரீகள் வாயாடிகளாம். படகுக்காரர்கள் அவர்களைக் கண்டு அஞ்சுவார்களாம். மார்க்கெட்டுக்குக் கூடைகளைத் தூக்கிச் செல்லும்போது மாதர்கள் ஒரே வரிசையாகப் போகமாட்டார்கள். ஒருவர் பின்னொருவர் பல விவஹாரங்களைப் பற்றியும் கூச்சல் போட்டு பேசிக் கொண்டே போவார்கள். சில சமயங்களில் தங்கள் குழந்தைகளைக்கூட கூடைகளில் போட்டு மார்க்கெட்டுக்குக் கொண்டு போவார்கள். சிறுமிகள் கல்யாணம் ஆவதற்குமுன் வீட்டில் இருந்து காரியங்களை கவனிக்கிறார்கள். சிறு பையன்கள் நீர் எருமைகளை மேய்த்து வருவார்கள். ஒரு சிறுவன் பெரிய மந்தையை சாமர்த்தியமாய் நடத்தி வருவான். விவசாயத்திலும், நாற்று நடவு ஸ்திரிகளே செய்கிறார்கள்.

படிப்புக்கு இங்கு அதிக கௌரவம் அளிக்கப்படுகிறது. கற்றோருக்குச் சிறப்பு அதிகம். பள்ளிக்கூடம் போவதில் சிறுவர்களுக்கு ஆனந்தமே.

## மதம்

இத்தேசத்தில் புத்தமதம், டாய்மதம், கன்பியூஷியன்மதம் என்ற மூன்றுமதங்களும் நிலவுகின்றன. இருந்தபோதிலும் மதவித்தியாசங்கள் அவ்வளவு தூரம் பாராட்டப்படவில்லை. எல்லாத்தெய்வங்களையும் எல்லோரும் பொதுவாகக் கும்பிட்டுவருகிறார்கள். நல் தேவதைகள், துஷ்டதேவதைகளில் நம்பிக்கையுண்டு. புலியைக்கூட இவர்கள் கும்பிடுகிறார்கள். பெரியவர்களும் வயது வந்தவர்களுமே



மோயிப்பெண் தான் வேலைக்குப் போகும்போது தன் குழந்தைகளையும், இதர கருவிகளையும் சுமந்து செல்லுகிறாள்.





குடும்பத்தை நடத்துகிறார்கள். அவர்களுக்கு மரியாதை அதிகம். தாய்க்கும் மரியாதையும் கௌரவமும் அதிகம். புத்திரசந்தானம் அவசியமென்று கருதப்படுவதால் ஒருவன் பலதாரங்களை மணக்கும் வழக்கம் இருந்துவருகிறது.

## விழா

டெட் என்று சொல்லப்படும் புது வருஷக் கொண்டாட்டமே முக்கியவிழா. அதையொட்டி பத்துநாட்கள் கேளிக்கைகள், கூத்துகள், களியாட்டங்கள், விருந்துகள், பாட்டுக்கச்சேரிகள் முதலியன நடைபெறும்.

## சம்பகர்கள்

இவ்வகுப்பாரில் ஒருபகுதியார் சிவமதத்தையும், மற்றொருபகுதியார் முகமதிய மதத்தையும் தழுவிநடந்து வருகிறார்கள். இருந்தபோதிலும் வகுப்புப் பிணக்குகள் இல்லாமல், ஒருவர் தெய்வங்களை மற்றவர் இகழாமல் மரியாதைசெய்து ஒற்றுமையாகவே வாழ்ந்துவருகிறார்கள். இரு மதகுருக்களும் மற்றவர்களின் மதச்சடங்குகளில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர். மதவெறி கிடையாது.

## ஸ்திரீ சுதந்திரம்

இவர்களில் ஸ்திரீயே உன்னதஸ்தானம் வகித்துவருகிறாள். தங்களுக்கிஷ்டமான வரனைத் தேடிக்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. தான் விரும்பும் மாப்பிள்ளைக்கு அவள் தன் தாய்தந்தையர்மூலம் சில பலகாரங்களையும், வெற்றிலை பாக்கையும் அனுப்புகிறாள். அவன் இவளை மணந்து கொள்ள விரும்பினால் பலகாரத்தில் கொஞ்சம் சாப்பிட்டால்போதும். இல்லையானால் அவற்றைத் தொடக்கூடாது. பின்னர் தான் மலடு அல்லவென்று அவள் நிரூபிக்க அவனுடன் வாழ்ந்து வரவேண்டும். சில சமயங்களில் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் நன்றாக வளர்ந்தபின்தான் கல்யாணம் தம்பதிகளுக்கு நடைபெறும்.

## கல்யாணச் சடங்கு

பெண் ஒரு குடிசைக்குள் இருப்பாள். புருஷன் வெளியிலிருந்துகொண்டு நகைகள், ஆடுமாடுகள், நிலபுலங்கள் அவளுக்கு இனாமாகத் தந்து தன்னை மணந்துகொள்ளும்படி இரு நண்பர்களைவிட்டுக் கேட்கச் சொல்லவேண்டும். அவள் பின் சம்மதம் என்று சொல்லுவாள்.

விவாஹரத்து வெகுசுலபம். விவாஹரத்து ஏற்பட்டால் சொத்துகள் அவளுடையதே. குழைந்தைகளும் அவளுடன் தானிருந்து அவளது மதத்தைத் தான் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். வாரீசுபாத்தியதை ஸ்திரீகளின்வழியே நடக்கின்றது. வாரீசுவிஷயத்தில் புருஷனுக்கு ஒரு பங்குமில்லை.

பெண்கள் வெகு அழகாகவும், நல்ல தேகக் கட்டுடையவர்களாகவும் இருக்கிறார்கள். சிறுபெண்களை குறிகாரிகளாக ஆக்கும் வழக்கமுண்டு. குறிகாரியிடத்தில் அவர்களுக்கு பயமும் பக்தியும் அதிகம்.

மோயி என்ற காட்டுஜாதியினர் பல அநாகரிக பழக்க வழக்கங்களைக் கையாண்டு வருகின்றனர். அவர்கள் நாகரிகம் பெறுவதற்கான முயற்சிகள் ஒன்றும் தீவிரமாக நடக்கவில்லை.

# ஓ ஞாயிற்றுக்கிழமையே !

திரு. வி. ஆர். மயிலேறு, எம். ஏ.

வாரத்திலுள்ள எல்லா நாட்களையும்விட எனக்கு ஞாயிற்றுக்கிழமை தான் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அன்று தான், அதுவரை உலர்ந்தமுகம் மலர்ந்து அழகுடன்விளங்குகிறது. "திங்கட்கிழமை" முதல், ஆர்வத்துடனும், ஆசையுடனும் எதிர்நோக்கி, உவகையுடன் வரவேற்கும் நாள் "ஞாயிறே". அது வரும் வரையில் இந்த உலகம், சுவையின்றி இருக்கிறது போல் தோற்றுகிறது. சனிக்கிழமை மாலையிலேயே "ஞாயிற்றுக்கிழமை"க்குறிய சந்தோஷக்குறிகளும், உணர்ச்சிகளும், மனதில் தோன்ற வாரம்பிக்கின்றன. ஏதோ ஒரு பெரிய பளுவை தோளினின்றும் கீழே இறக்கிவைத்தால் போலிருக்கும். போன ஜன்மத்தில் ரயில்வே ஸ்டேஷனிலோ, அல்லது மளிகைக்கடையிலோ, மூட்டை சுமந்து வழக்க மிருந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் இந்த உபமானம் என் மனதில் வருகிறது உடனே! ஜன்மாந்திரியம்! ஆபீஸிலிருந்து "சனிக்கிழமை" வீட்டிற்கு வந்ததும், ஏதோ ஒரு பெரிய சொத்து மறுநாள் கிடைக்கப் போவது போலும். இல்லா விட்டால், நெடுநாள் பிரிந்திருந்த ஓர் நண்பனை மறுநாள் காணப் போகும் போது ஏற்படும் உணர்ச்சிகளெல்லாம் மனதில் எழுகின்றன. அன்று இரவு தூங்கும்போது மறுநாள் சீக்கிரம் எழுந்திருக்கவேண்டுமே என்ற கவலை சிறிதுமின்றி நிம்மதியாய் உறங்கலாம்; இன்பக் கனவுகள் கண்டு மகிழலாம்; ஆபீஸர்களும், மானேஜர்களும், ஹெட் கிளார்க்குகளும் இல்லாத ஓர் உலகத்தில், பூங்காவனங்களில், பசும்புற்றரையில் படுத்து புரளுவது போலெல்லாம் அன்று தான் சொப்பனம் காணலாம்.

மறுநாள் தான் மகிமைதங்கிய, மாட்சிமை பொருந்திய அத்திருநாள். காலையில் 5-30 மணிக்கு சாதாரணமாய் அடிக்கும் "அலாரம்" கடியாரத்தை, சட்டென நிறுத்தி, மறுபடியும், போர்வையை நன்றாக இழுத்து மூடிக்கொண்டு படுத்துறங்கும் நாள் இதுவே. கிழக்கு வெளுத்து, சூரியன் உதித்து, நன்றாக மேலே ஏறி காயத் தொடங்கினாலும், உங்கள் மனைவி காப்பி ஆறிப்போகிறது என்று பலமுறை சொன்னாலும் ஊ! ஊ! என்று மட்டும் சொல்லி விட்டுத் திரும்பிப்படுத்துத் தூங்கும் தினம் இதுவே! ஹே! "ஞாயிற்றுக்கிழமையே" உன்னை பணிகின்றேன்! இது சூரியன் நாளல்லவா, அதுதான் அவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! ஏது பாரதியார் மாதிரி பேச போகிறதே! போதும், போதும். அதிகம்வேண்டாம். நீ இருக்கும்வரை ஆபீஸ் ஆத்மாக்களாகிய எங்களுக்கு என்ன குறை! ஞாயிற்றுக்கிழமைக்கு ஜே! (எல்லோரும் சொல்லுங்கள்.)

ஆனால்! ஐயோ! இப்பொழுதா அதைப் பற்றி நினைக்கவேண்டும் - பின்னென்ன செய்து தொலைப்பது - ஞாயிற்றுக்கிழமை இந்த சுகங்களெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே, மறுநாள் திங்கட்கிழமை யல்லவா, அந்த பாழாய்ப் போன ஆபீசு! விட்டேன் விட்டேன்! நல்ல வேளை இங்கே ஒருவருமில்லையே!



அந்த ஹெட் கிளார்க் காதில் விழுந்தால் போச்சு, தொலைந்தது. போகவேண்டுமே! கடவுளே! காலண்டரில் இந்த திங்கட்கிழமை என்று ஏன் ஏற்படுத்தி யிருக்கிறாய்? அதைப்பார்த்தாலே எனக்கு எரிச்சலா யிருக்கிறது. அது "Monday" என்று மண்டையிலடித்தாற்போல் என்னைப் பார்த்து கேலி செய்வது போலிருக்கிறது. வாரத்திலுள்ள எல்லா தினங்களும் என்னருமை "ஞாயிற்றுக்கிழமை"யாயிருக்கக் கூடாதா! மறுபடியும் பள்ளிக்கூடத்துப் பையனாயிருக்கக் கூடாதா என்று கூடத் தோன்றும் சிலசமயங்களில். "லீவ்", மூன்று மாதம் விடுவார்கள்! ஊம்! என்ன செய்வது! அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தது! மறுபடியும் என்று காண்போம், "ஞாயிற்றுக்கிழமை"யை என்று பல்லைக்கடித்துக்கொண்டு, காத்திருக்கவேண்டியதுதான்! வெந்ததும் வேகாததுமாய் சோற்றை வயிற்றில் அடைத்துக்கொண்டு, பொத்தான் போட்டதும் போடாததுமாய், ஒரு செருப்பை காலில் மாட்டிக் கொண்டும், இன்னொன்றை கையில் எடுத்துக்கொண்டும், மனைவி மடித்துக்கொடுத்த வெற்றிலையை போடக்கூட நேரமின்றி பஸ் ஏறிப்போகவேண்டும் இன்னும் ஆறு! நாட்களுக்கு! என்ன செய்வது!

# பெல்ஜிய மன்னர் மறு மணம்

லியபால்டு மன்னர் மீண்டும் விவாகம் செய்துகொள்வது பற்றி அவருக்கும் அவரது சர்க்காருக்கும் தகராறு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவருக்கும் 22 வயதான அடிலெய்ட் சீமாட்டிக்கும் விவாகம் நடைபெறுமென சீக்கிரத்தில் ஒரு அறிக்கை வெளியாகுமென நம்பப்படுகிறது. ஆனால் மன்னரின் தூண்டுதலின் பேரில் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் இவ்வதந்தியை மறுக்கிறார்கள். ஹாப்ஸ்பர்க் வம்சத்தைச் சேர்ந்த ஒரு மங்கையை மன்னர் மணந்தால் பெல்ஜியம் அதிக சக்தி பெற்று விளங்குமென சர்க்கார் கருதுகின்றனர். ஆனால் மன்னரோ சமீபத்தில் ஒரு கோர விபத்தில் மாண்ட தமது முதல் மனைவியைப்பற்றி இன்னும் துக்கித்துக்கொண்டு மறுமணம்புரிய இஷ்டமில்லாதவரா யிருக்கிறார். அவர் தமது சிம்மாசனத்தைத் துறந்து ஆறு வயதான தமது குமாரனுக்கு முடிசூட்டக்கூடுமெனவும் சொல்லப்படுகிறது.

# மத குருக்களின் போக்கு

– ஸ்ரீமதி காந்தா.

எட்வர்ட் சக்கிரவர்த்தி பட்டத்துறவுக்கு காண்டர்பரி ஆர்ச்சிபிஷப்பும் மதத்தலைவர்களில் வேறு சிலரும் ஜவாப்தாரிகளென்ற அபிப்பிராயம் பொதுவாக இருந்து வருகிறது; மாஜி மன்னர் எட்வர்டின் பக்தி ஆசாரக் குறைவும், மத சமூக அரசியல் கட்டுப்பாடுகளை கிஞ்சிற்றும் மதிக்காது சுயேச்சையாய் இருப்பதும், நடப்பதும், பல பிரபல பாதிரிமார்களுக்குப் பிடிக்கவில்லை யென்றும், அவர் மாதாகோயிலுக்குச் செல்லுவதில்லை யென்றும், இதைக்கண்டு பாதிரிகள் வெறுப்பு அடைந்ததே மன்னரை பட்டந்துறக்கும்படி செய்ததற்கு ஆதிகாரணமென்றும் ஆங்கிலேயப் பத்திரிகைகள் சிலவும், பிரபலஸ்தர்கள் பலரும் எழுதியும் கூறியும் வருகிறார்கள். முக்கியமாக உலகத்திலேயே தலை சிறந்து விளங்கும் எழுத்தாளராகிய திரு. எச். ஜி. வெல்ஸ் என்பவர் இவ்வாறு மாஜி மன்னரை அவதூறாகப் பேசுபவர்களை சாட்டைகொண்டு அடித்தாலும் பரவாயில்லை யென்று கூறுகிறார். இங்கிலாந்து தேசத்தின் மிகவும் நெருக்கடியான ஓர் நிலைமையில் தனது சாமர்த்தியத்தாலும், ராஜதந்திரத்தாலும், ஏகாதிபத்தியத்தைக்காத்து நிலை நாட்டிய மாஜி பிரதம மந்திரி திரு. லாயிட் ஜார்ஜும் பாதிரிகளின் மனப் பான்மையைக் கண்டித்து வின்சர் பிரபுவுக்குத்தன் அனுதாபத்தைத் தெரிவிக்கிறார்.

இந்தியாவில் இருக்கும் நமக்கு உள்ளுக்குள் நடந்ததென்ன வென்பது திட்டமாகவும், தெளிவாகவும் தெரியாது. இந்த அபிப்பிராயத்துக்கு ஆதாரமில்லை யென்று நினைக்கும்படி பட்டந்துறக்க வைத்த பின்னும் பாதிரிமார்கள் நடந்து கொள்ளவில்லை. எட்வர்ட் அரசர் பட்டத்தைத் துறந்து விட்டுப் போய்விட்டார். அவரது முடிவு சம்பந்தமான பேச்சை அத்துடன் நிறுத்திவிடுவதே விவேகம்; யோக்கியப் பொறுப்பும், ஒழுங்கும் உள்ள எவரும் அவ்வாறே செய்வார்கள். ஆனால் காண்டர்பரி, யார்க் ஆர்ச்சி பிஷப்புகள் தங்கள் அபவாதச் சங்கை ஊதுவதை நிறுத்துவதாகக் காணோம். பிரசங்கம் செய்ய வாய்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், அவர்கள் மாஜி அரசரைத் தாக்கிப் பேசுவதற்கு உபயோகித்து வருகிறார்கள். இராஜ பக்தியைப் பற்றிப் பிரமாதமாக நமக்கு எடுத்துக்கூறும் இவர்கள் இராஜ பக்தி இதுதான் போலும்!

என்ன தவறு செய்து விட்டார் எட்வர்டு? தான் காதலித்த ஒருவளை மணம் செய்ய விரும்புகிறார். அது பாதிரிகளுக்கு பிடிக்கவில்லையாம். ஏன் இந்த இரைச்சல்? எவ்வளவு காலந்தான் இந்த அக்கிரமத்தைப் பொது ஜனங்கள் சகித்துக் கொண்டிருப்பார்கள்? பொறுமைக்கும் ஒரு எல்லை யில்லையா? பாதிரிமார்களுடைய ஆதிக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ள ஒரு கோஷ்டி இங்கிலாந்தில் கிளம்பி யிருக்கிறது; பிரபல ஆசிரியரான மிஸ்டர் வெல்சும் கிளர்ச்சியை ஆரம்பித்து விட்டார். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும்; ஒரு அரசன் கண்ணியமாக தன் பதவியை தியாகம் செய்த பின் துயர்ந்து தூற்றுதல் அழகல்ல, முறையல்ல, நியாயமல்ல. காண்டர்பரி, யார்க்கு ஆர்ச்சி பிஷப்புகள் அளவுக்கு மிஞ்சிப் போவதால், அவர்கள் ஜனங்களுக்குத் தங்களிடத்திலும், மதத்தினிடத்திலும் உள்ள பக்தியையும், விசுவாசத்தையுமே குறைத்துக் கொள்ளப்போகிறார்கள். மன்னர் எட்வர்டின் தியாக ஒளி சற்றும் மங்காது பிரகாசித்துக் கொண்டே யிருக்கும்.

# ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி.

"கண்ணன்"

**த**மிழ் நாட்டில் ஆடம்பரமின்றி ஸ்திரீகளின் க்ஷேமத்துக்காக சதா சர்வகாலமும் உழைத்து வரும் உத்தமகுணத்தலைவி ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி யென்பது யாவருக்கும் தெரியும். தான் செய்யும் அரிய பெரிய வேலைகளைப் பற்றிப் பிரசாரம் செய்து கொள்ளவோ, அல்லது தான் பெரிய தியாகி, தலைவி என்ற எண்ணம், தன் கௌரவம் சற்று மின்றி "கருமமே கண்ணாயினார்" என்றபடிக்கு, ஆக்கவேலைகளில் கண்ணும் கருத்தும் செலுத்திவரும் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியம்மாளுக்குத் தமிழ் நாடு ரொம்பவும் கடமைப்பட்டுள்ளது. அவர்களது வாழ்க்கையும், எல்லோரிடத்தும் அன்பாகவும், ஆதரவாகவும் பேசி நடந்து கொள்ளும் தன்மையையும், உதவி நாடிச் செல்லும் திக்கற்ற மாதர்களிடம் அவர் காட்டும் அன்பும், கவலையும் போற்றற்குரியது. இன்னும் அவரிடத்துள்ள குணாதிசயங்கள் பல பல. அவர்கள் தன் சுயமுயற்சியால் மட்டுமே தான் இன்று இந்திய சமூகத்தில் வகித்து வரும் உன்னத பதவியை அடைந்தார். இன்று தமிழ் நாட்டு ஸ்திரீகளுக்குள் ஒரு முத்துப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி 1886ம் வருஷம் ஜூலை மாதம் புதுக்கோட்டையில் ஒரு மத்திய வகுப்பைச் சார்ந்த ஹிந்து உயர்குடும்பத்தில் பிறந்தார். அவர் தந்தை புதுக்கோட்டை ராஜாவின் கலாசாலையில் முதலில் ஆசிரியராயிருந்து பின்னர் புதுக்கோட்டை சமஸ்தான கல்வி இலாகா அதிகாரியாக ஆனார். அவர் வாக்குவன்மை மிக்கவர். நாடகம், சங்கீதம், விருந்துக் கச்சேரி முதலியன அவருக்கு ரொம்பப் பிரியம். தன் பங்களாவில் அடிக்கடி கச்சேரிகள் நடத்துவார். அவர் மனைவிக்குப் படிப்பு இல்லை யானாலும் சிறந்தகுணவதி. தெய்வபக்தி, நன்னடக்கை, தன்னடக்கம், தயாளம், ஆசாரசுத்தம் முதலிய நற்குணங்கள் உடையவள். குடும்ப நிர்வாகத்தில் கவலை கொண்டு சாமர்த்தியமாக நடந்து வந்தாள். தன் கணவனின் ஷோக்குகள் அவளுக்குப் பிடிக்காது. இருவருக்கும் வெவ்வேறு ஜாதியினராய் இருந்த போதிலும் காதல் மணம் நடந்தது. தம்பதிகள் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் நேசித்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு மொத்தம் நான்கு குழந்தைகள் பிறந்தன. மூத்தகுமாரிதான் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி. இவருக்கு வேறு இருசகோதரிகளும், ஒரு சகோதரனும் உண்டு. ஆனால் இவருடைய சகோதரர் பி.ஏ., பி.எல்., பாஸ் செய்து சமூகவேலையில் ஈடுபட்டு, நற்கியாதி பெற்று நல்ல வாலிப பருவத்திலேயே அகால மரணமடைந்தார். சகோதரி ஒருவரும் கல்யாணமாகி ஒருவருஷத்தில் இளவயதிலேயே இறந்து போனாள். எஞ்சியிருப்பவர் ஸ்ரீமதி நல்ல முத்து ராமமூர்த்தியும், முத்துலக்ஷ்மி யம்மாளும் தான். ஸ்ரீமதி நல்ல முத்து அம்மாளும் உயர்தரப்பட்டங்கள் பலபெற்றிருக்கிறார்கள். அவைகள் எம்.ஏ., எல்.டி., பி.எஸ்ஸி. டி.டி., எம்.இ.எஸ்., முதலியன.

## தந்தையின் சத்தியகுணம்

தந்தையார் கல்வி இலாகா தலைமை உத்தியோகஸ்தராகவிருந்த காலத்தில் திவானாக இருந்து வந்தவருக்கு அவ்வளவு படிப்புப் போராது. ஆங்கிலம் அவருக்குத் தெரியாது. அடிக்கடி தன் வேலையைச் செய்வதில் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியின் தந்தையின் உதவியை நாடுவதுண்டு. அந்த திவான் லஞ்சம் வாங்குவார்.

அது அவருக்குப் பிடிக்கவில்லை. அதை அவர் கண்டித்தார். அதனால் திவான் இவர் மீது வெறுப்பு அடைந்தார். சத்தியவானாகிய அய்யர் அப்பேர்பட்ட திவானிடத்தில் தன்னால் உத்தியோகம் செய்ய முடியாதென்று கூறி தனது 43வது வயதிலேயே வேலையினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டார். இதனால் திடீரென்று வருமானத்தில் குறைவு ஏற்பட்டது. அநேகம் செலவுகளை குடும்பத்தில் குறைக்க வேண்டியிருந்தது. ஜீவனம் கொஞ்சம் கஷ்டமாகவே ஆயிற்று. தாயார் சற்றும் மனங்கலங்காமல் தான் அணிந்திருந்த நகைகளை எல்லாம் விற்றுகுடும்ப நிர்வாகத்தை கவனித்து நடத்தி வந்தாள்.

## கல்வி

முத்துலக்ஷ்மி அம்மாளுக்கு மூன்று அல்லது நான்குவயது இருக்கும்போதே அவ்வூரிலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப் பட்டார். இருந்தபோதிலும் அவர் கல்வி வளர்ச்சியில் தாயாருக்கு சிரத்தை கிடையாது. "பொண்ணுதானே, படிப்பு அவசியமில்லை" யென்று கருதினார். வயதான பெண் பள்ளிக்கூடம் செல்வது தவறு என்று அவர் தாயார் நினைத்தார். பையன் படிப்பில் கவலை காட்டினாரே தவிர முத்துலக்ஷ்மியின் படிப்பில் அந்த கஷ்ட ஜிவனதிசையில் கவலை அவளுக்கில்லை. இதைப்பற்றி தாய்தந்தையர் அடிக்கடி வாக்குவாதம் செய்வார்கள்.

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மிக்கு சுமார் 11 அல்லது 12 வயது ஆனவுடன் அவர் தாயார் பள்ளிக்கூடம் அனுப்ப மறுத்து விட்டார். அப்பொழுது அப்பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயராயிருந்த தெலுங்க பிராமணர், குழந்தை ஏன் ஸ்கூலுக்கு வரவில்லையென்று விசாரிக்க முத்துலக்ஷ்மியம்மாளின் வீட்டுக்கு வந்தார். தாயார் சொன்னதைக் கேட்டு, தான் முத்துலக்ஷ்மிக்கு இலவசமாகக் கல்வி போதிப்பதாகவும், பெண்களுக்கும் கல்வி அவசியம் என்பதையும் விளக்கிக்காட்டினார். அவரது அனுதாபத்தையும், வாதத்தையும் முத்துலக்ஷ்மியம்மாள் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் தனக்காக பரிந்து பேசியதை இன்னும் அவர் மறக்கவில்லை. அந்த உபாத்தியாயரும் இப்பொழுது உயிருடன் இருக்கிறார். வயது வந்தும் பள்ளிக்கூடம் போவதைப்பார்த்து அநேகர் ஏளனம் செய்வார்கள். பள்ளிச்சிறார்களும் பரிகாசம் பண்ணுவார்கள். ஆனால் முத்துலக்ஷ்மி அவைகளைச் சற்றும் சட்டை செய்யவில்லை. கல்வி கற்பதில் ஆரம்பமுதலே மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தார். அவரது தாயே புருஷக் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடச் சம்பளம், பிரைவேட் டியூஷன் முதலிய வசதிகள் உவந்து கொடுத்தபோதிலும், பெண்களின் கல்வியில் ரொம்பவும் வெறுப்புக் காட்டி வந்தாள். படிக்கக்கூடாதென்றும் நினைத்தாள். இவ்விடையூறுகள் முத்துலக்ஷ்மியின் ஊக்கத்தை சற்றும் தளர விடவில்லை.

அவர் தந்தை தீவிர சீர்திருத்தவாதி. பெண்கள் உயர்தரக் கல்வி கற்கவேண்டும் என்று வாதிப்பார். அவருக்கு ஊரிலும் கௌரவமும், செல்வாக்கும் அதிகம். தன் 70வது வயதில் புதுக்கோட்டை சட்டநிரூபண சபைக்கு அவர் உப அக்கிராசனராகக்கூட தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரே தன் மூத்த புதல்வியின் கல்வியில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். ஸ்ரீமதி ரெட்டியும் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் பிரத்தியேகமாகப் படித்து பாஸ் செய்து விட்டார்.

உடனே மகாராணியின் பெண்பாடசாலைக்கு 100 ரூபாய் சம்பளத்தில் தலைமை உபாத்தியாயினி வேலை அவருக்கு கொடுக்க சர்க்கார் முன் வந்தார்கள். வீட்டின் பணநிலையும் ரொம்பவும் மோசமாகவிருந்ததால் அவரது தாய் தந்தையர்கள் அவ்வேலையை ஒப்புக்கொள்ளுமாறு முத்துலக்ஷ்மியைக் கேட்டுக்





கொண்டனர். ஆனால் முத்துலக்ஷ்மி தன் தந்தையுடன் தனக்கு உயர்தரக் கல்வியளிக்க ஏற்பாடு செய்யுமாறு விநயத்துடன் போராடினார். பக்கத்தில் வேறு ஸ்திரீகள் கலாசாலையில்லாததால் மாணவர்களுக்கென்று நடத்தப் பட்டு வந்த சர்க்கார் இண்டர் மீடியேட் கலாசாலையிலேயே தன் புத்திரியையும் சேர்த்துக் கொள்ளுமாறு காலேஜ் பிரின்ஸிபாலை அவர் தந்தை கேட்டார். வைதீகரான அந்த பிரின்ஸிபாலும், இதர ஆசிரியர்களும் இதைக் கண்டு திடுக்கிட்டுப்போனார்கள். "புருஷாள் பள்ளிக்கூடத்தில் பெண்ணைச் சேர்ப்பாளோ, நன்னாயிருக்கு கலிகாலம்" என்றெல்லாம் சொல்லி முத்துலக்ஷ்மியைச் சேர்ப்பதற்கு ஆட்சேபித்தனர். ஆனால் அப்பொழுது மகாராஜாவாக விருந்தவர் ஐரோப்பாக் கண்டம், இங்கிலாந்து முதலிய விடங்களைச் சுற்றிப்பார்த்து வந்தவர். பரந்த நோக்கமுடையவர். வைதீக பிட்சுக்களின் எதிர்ப்புக்குச் சரியான சாட்டை கொடுத்து முத்துலக்ஷ்மியைக் கலாசாலையில் சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவிட்டார். முத்துலக்ஷ்மி அக்கல்லூரியில் சேர்ந்து தன் புத்திசாலித்தனத்தினாலும், வல்லமையினாலும் மாணவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுடைய அன்பையும், ஆசியையும் பெற்றார். 1905ம் வருஷம் இண்டர் மீடியேட் பரீட்சையில் ரொம்ப அதிக மார்க்குகள் பெற்று பாஸ் செய்தார்.

போதிய வசதிகள் இல்லாததாலும், தேகப் பயிற்சி இன்றியும், பரீட்சைக்காக அதிக சிரமப் பட்டு படித்ததனாலும் அவர் உடல் நிலைசற்று தளர்ந்தது. எனவே ஒரு வருஷம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

முத்துலக்ஷ்மியை வைத்தியக் கல்லூரியில் சேர்க்கும்படி சிலர் அவர் தந்தைக்கு யோசனை கூறினார்கள். அதன்படியே சர்க்கார் கொடுத்த ஸ்காலர்ஷிப்பின் (உபகாரச் சம்பளம்) உதவியின் பேரில் சென்னை வைத்தியக் கல்லூரியில் 1907ம் வருஷம் ஜூலை மாதம் சேர்ந்தார். அவர் சேர்ந்த வருஷத்தில் வேறு இருமாணவிகளும் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தனர். ஆனால் மறுவருஷமே மற்ற இருவரும் பரீட்சையில் தவறியதால் படிப்பை விட்டுவிட்டனர். முத்துலக்ஷ்மியோ விடா முயற்சியுடனும், ஊக்கத்துடனும் பாடங்களில் கவனம் செலுத்தி ஐந்து வருஷப் படிப்பையும் ஐந்து வருடங்களிலேயே முடித்து எல்லாப்பரீட்சைகளிலும் மேன்மையாகப் பாஸ் செய்தார். வைத்தியம், ரணசிகிச்சை, பிரசவ சாஸ்திரம் முதலியவற்றில் மேன்மையான தேர்ச்சியுள்ளவராக இருந்தமைக்காக அநேகம் தங்க மெடல்களும், சர்ட்டிபிக்கேட்டுகளும் அவருக்கு வழங்கப்பட்டன. தென்னிந்தியாவில் எம். பி. சி. எம்., பட்டம் பெற்ற முதல் மாது ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியே. ஐந்து வருடங்களுக்குள் அவ்வளவு மேன்மையாக பாஸ் செய்ததைக் கண்டு அக்காலத்தில் ரணசிகிச்சை தலைமை ஆசிரியராகவிருந்த கர்னல் நிப்ளாக் என்பவர் பெரிதும் வியந்து கூறினார். ரணசிகிச்சைப் பரீட்சையில் 100க்கு 100 மார்க்குகள் முத்துலக்ஷ்மி பெற்றார். பிரசவசாஸ்திரத்தில் அவருக்கிருந்த ஞானத்தைக் கண்டு கர்னல் கிப்போர்டு அந்தப் பாடசம்பந்தமான தங்க மெடல்களை எல்லாம் அவருக்கு அளித்த தன்றி ஸ்திரீ வைத்தியர்களை சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் நியமிக்கவேண்டும் என்றும் சிபார்சு செய்தார். அது ஒரு புதுமையே.

## உத்தியோகம்

1912 வருஷம் வைத்தியப்பட்டம் பெற்றவுடன் சர்க்கார் பிரசவ ஆஸ்பத்திரியில் வைத்தியராக நியமிக்கப்பட்டார். மற்ற ஆஸ்பத்திரிகளிலும் நிபுணர்களிடம் அனுபவத்தில் தொழில் கற்றார். முத்துலக்ஷ்மியின் தீட்சண்யத்தையும், சாமர்த்தியத்தையும் அக்காலத்திலிருந்த ஐரோப்பிய ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர்கள் கூடபுகழ்ந்து பேசினார்கள்.

### விவாஹம்

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மிக்கு பத்து வயதிருக்கும் போதே விவாஹப் பேச்சுகள் நடந்தன. கல்யாணமும் நிச்சயமாய்விட்டது. நல்ல காலமாக அவரது அத்தைக்கு தேக அசௌகர்யம் ஏற்பட்டு அதிகமாய்ப் போய்விட்டதால் கல்யாணமும் நின்று போய்விட்டது. மறுபடியும் அவருக்கு 14 வயது முடிந்தவுடன் கல்யாண ஏற்பாடுகள் நடந்து மணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் தாய்தந்தையர் வற்புறுத்தினார்கள். ஆனால் அவர் வெகு தைரியமாக தான் தன் கல்வியை முடித்தால்தான் மணம் செய்து கொள்ளப்போவதாகத் திட்டமாய்த் தெரிவித்து விட்டார்கள். பின்னர் அவர்கள் தொந்திரவு இல்லாது கல்வியை முடித்து சொந்தமாகத் தனியாக வைத்தியத் தொழில் புரிந்து வந்தார். இந்த மாகாணத்திலேயே ஸ்திரீ டாக்டர் முத்துலக்ஷ்மி ஒருவர் தான் அக்காலத்தில். அதிலும் வெகு தேர்ச்சியும் பெற்றவராயிருந்ததால் அவர்களது உதவியை நாடி மாகாணமெங்கு மிருந்தும் ஜனங்கள் வருவார்கள். ஏழை பணக்காரர் இருவகுப்பாரும் அவரிடம் சிகிச்சை பெற்றனர். இருந்தாலும் மணம் ஆகாமலிருந்தது ஒரு குறையாகவே இருந்து வந்தது. தனது தொழிலும், பொது வாழ்விலும் தனக்கேற்பட்டுள்ள வெற்றிக்கும், புகழுக்கும், பொதுநல ஊழியத்தில் ஆர்வமுள்ளவரும், தேசபக்தி மிகுந்தவருமான தன் கணவரின் உதவியும் ஆதரவும் ஒரு முக்கிய காரண மென்று ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியே கூறுவார்கள்.

### டாக்டர் சுந்தர ரெட்டி

ஸ்ரீமான் சுந்தர ரெட்டியார் தன் சுயமுயற்சியாலும் உழைப்பாலும் உன்னத நிலையடைந்தவர். அவர் உயர் குடும்பத்தில் பிறந்தவர். அவரது தாய் மாமன் 'திவான் பகதூர் சுப்பராயலு ரெட்டியாரே மாண்டேகு சீர்திருத்தின்படி ஏற்பட்ட அரசியலில் சென்னை மாகாணத்தில் முதல் மந்திரியாயிருந்தவர். அவர் மாமன் தன் மருமகனை மெட்ரிகுலேஷன் பாஸ் செய்த உடனேயே கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினார். ஆனால் சுந்தர ரெட்டியார் தான் கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டபின்னரே மணம் செய்து கொள்ளப் போவதாகப் பிடிவாதமாய்க் கூறினார். அதனால் மாமன் கோபம் கொண்டார். அவர் வீட்டில் மேலும் வசிக்க சுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் காலை அவர் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தன் மாமனுக்கு மட்டும் ஒரு கடிதம் எழுதிவைத்து விட்டு வீட்டை விட்டு கட்டின வேஷ்டியுடன் புறப்பட்டுவிட்டார். கடிதத்தில் தனக்கு வயது பதினாறு ஆகிவிட்டதாகவும், தனக்கு சுயமாகப் பிழைக்கத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அன்று வீட்டை விட்டுக் கிளம்பியவர் பலவிதக் கஷ்டங்களையும் அனுபவித்து தன் உயர்தரக் கல்வியையும் முடித்துக் கொண்டு இங்கிலாந்து சென்று, அங்கும் நாலு வருடங்கள் வைத்தியக் கல்லூரியில் பயின்று எப். ஆர். ஸி. எஸ். என்ற உயர்ந்த வைத்திய பட்டத்தைப் பெற்று சென்னை வைத்தியக் கல்லூரியில் அதுவரையில் ஆங்கிலேய ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர்களே பார்த்து வந்த அனாட்டமி ஆசிரியராக அமர்ந்தார். இதற்குள் அவர்பட்ட கஷ்டங்கள் எண்ணத் தொலையா. ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியும், திரு. ரெட்டியும் ஒருவரை ஒருவர் சந்திக்கச் செய்தது அவர்கள் தாய் தந்தையரே. திரு. சுந்தர ரெட்டி நற்குண சீலரென்றும், உத்தம பிரம்மச்சாரியென்றும் அவரைத் தன் மகள் மணந்து கொள்ளுதல் சாலவும் சிறந்ததென்றும் முத்துலக்ஷ்மியின் தந்தையார் கூறினார். தாயும் இந்த விவாஹத்தை ஆதரித்தாள். முதலில் திரு. ரெட்டியை முத்துலக்ஷ்மியம்மாள் சந்தித்த போது அவருக்கு வயது 26. திரு. ரெட்டிக்கு 38 வயது. கல்யாணம் 1914ம் வருஷம், ஏப்ரல் மாதம் நடைபெற்றது. அவரின் தன்மை





யைச் சரிவர உணரும் பொருட்டு, நிச்சயதார்த்தம் ஒரு வருடம் முன்னரே ஆகியிருந்தபோதிலும், கல்யாணம் 1914ல் தான் நடைபெற்றது. மணம் செய்து கொள்ளுமுன் தனது பொதுச் சேவைக்குத் தடை செய்யாது உதவியளிக்க வேண்டும் என்று தன் கணவனை உறுதி கூறச் சொன்னார். அவரும் உறுதி அளித்து இன்று வரையும் முத்துலக்ஷ்மியம்மாளின் பொதுக் கார்யங்களுக்கு தானும் உதவியாகவே இருந்து வருகிறார். தம்பதிகளின் குடும்ப வாழ்க்கை ரொம்பவும் சந்தோஷகரமானதே.

இவர்களுக்கு இரு புதல்வர்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கு வயது இப்பொழுது 21. இவர் எம். ஏ. ஆனர்ஸ் பாஸ் செய்து விட்டு சீமையில் உயர்தரப்படிப்புப் படித்து வருகிறார். மற்றவருக்கு வயது 17. இவர் இண்டர் மீடியேட் வாசித்து வருகிறார்.

### பொதுச் சேவை

தன் தொழிலைக்கவனித்துக் கொள்ளுவது தவிர ஆரம்பமுதலே ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ஏழைப் பெண் மக்கள், குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்தியில் அக்கறை காட்டிவந்தார். அவர்கள் விதவைகள் விடுதி (Widow's home) பெண் கல்வி நிலையங்கள் (Adult Women's Education centres)சேவ ஸாதனம் (Seva Sadan) முதலிய ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கான வேலைகளில் தீவிர பங்கு எடுத்துக் கொண்டார். இன்னும் அநேக சிசு சம்ரக்ஷண சங்கங்களின் நிர்வாக சபைகளில் அங்கத்தினராக இருந்து வந்தார். கர்ப ஸ்திரீகளின் பராமரிப்பு, பிரசவம், சிசுவளர்ப்பு முதலிய விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் அநேக பிரசுரங்களை வெளியிட்டிருக்கிறார்.

1925ம் வருஷம் சர்க்கார் உதவிச் சம்பளம் பெற்று இங்கிலாந்துக்கு உயர்தர வைத்தியம் கற்கச் சென்றார். அங்கு குழந்தைகள், ஸ்திரீகள் சம்பந்தமான வியாதிகளைத் தீர்க்கும் நூதன முறைகளைக்கற்றார். லண்டனில் சமூகசேவை செய்து வந்த எல்லா ஸ்தாபனங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார். தான் இந்தியாவுக்குத் திரும்பும் மார்க்கத்தில் பாரிஸ் மாநகரில் நடைபெற்ற சர்வதேச ஸ்திரீகள் மஹாநாட்டில் இந்தியாவின் சார்பாகப் பிரசன்னமாயிருந்து பலதேச மாதர்களில் தலைசிறந்தவர்களை யெல்லாம் சந்தித்தார். அவர் இந்தியாவுக்குத் திரும்பியவுடனே அவரது நண்பர்களும், சக ஊழியர்களும், இந்தியமாதர் சங்கத்தாரும் அவரை சட்டசபைக்குச் செல்ல வேண்டு மென்று மிகவும் வற்புறுத்தினார்கள். இந்தியமாதர் சங்கத்தார் அவரையே தங்கள் பிரதிநிதியாக சென்னை சர்க்காருக்கு சிபார்சு செய்தார்கள். அவரும் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டுப் பின் சென்னைச் சட்டசபையின் உப அக்கிராசனராக ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். சட்டசபையில் ஸ்தானம் வகித்த முதலாவது இந்தியமாது ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியே. சட்டசபையில் அவர் இருந்து வரும்போது பெண்கள் கல்வி அபிவிருத்தி, சிசுசம்ரக்ஷணைக்கான உதவிகள், பள்ளிச்சிறுமிகளின் தேகசுகாதார அபிவிருத்தி, பிரசவ உதவி, முதலியவற்றை அதிகரிக்கக்கூடிய அநேக சட்டங்களை தன் சாமார்த்தியத்தாலும், ஊக்கத்தாலும் நிறைவேற்றினார். தேவதாசி மசோதா முதலியன பற்றியும் எல்லோரும் உணர்ந்ததே. தான் சட்டசபையில் செய்த சேவைகளைப்பற்றித் தானே, "என் சட்டசபை அனுபவம்" என்று ஒரு சிறு புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார். அதில் பூரா விவரங்களும் காணலாம். அப்புஸ்தகம் ஆங்கிலத்திலுள்ளது.

இந்தியாவின் கல்வி நிலையைப்பற்றி விசாரணை செய்ய 1928ம் வருஷம் நியமிக்கப்பட்ட ஹார்ட்டாக் கமிட்டியின் அங்கத்தினராக அவர் இருந்து பெண்கல்வி அபிவிருத்திக்காக செய்த வேலை மிகவும் பாராட்டத்தக்கது. அக்

கமிட்டியின் யாதாஸ்தில் பெண்கல்வி விஷயமாக உள்ளபாகத்தை எல்லோரும் மெச்சியிருக்கிறார்கள். அக்கமிட்டியின் அங்கத்தினராக 10 மாதங்கள் மிகுந்த சிரமத்துடன் இந்தியா வெங்கும் சுற்றிப்பார்த்து ஆங்காங்குள்ள பெண்கல்வி ஸ்தாபனங்களை யெல்லாம் பார்வையிட்டார்.

சென்னை சிசு உதவிச் சங்கத்தின் **(Children's Aid Society)** கௌரவக் காரியதரிசியாக 4 வருஷங்கள் உழைத்து வந்தார். அச்சங்கத்தின் வளர்ச்சிக்கான காரியங்களைத்தன் உத்தியோக காலத்தில் பல செய்ததுமன்றி வேறு சில சிபார்சுகளும் செய்து வைத்தார். அவைகளை அவருக்குப் பின் வந்த நிர்வாகஸ்தர்கள் அனுஷ்டானத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டமறுப்பியக்க காலத்தில் அவரது சகாக்கள் அநேகம் பேர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு விட்டார்கள். அச்சமயம் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி இந்த அனாதைச் சிறுமிகளைத் தானே கவனித்து வரவேண்டியிருந்தது. எல்லா வேலைகளையும் தானே கவனிக்க நேரிட்டதால் அவருடல் நிலை கெட்டது. இருந்த போதிலும் சேவையை அவர் விடவில்லை.

1930ம் வருஷத்தில் லாகூரில் நடைபெற்ற ஐந்தாவது அகில இந்திய மாதர் மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். அம்மஹாநாட்டின் வரவேற்புத் தலைவராகவும், உப அக்கிராசனராகவும் 1935ம் வருஷம் வரை இருந்து வந்தார். இப்பொழுது அதன் போஷகராக இருக்கிறார். அகில ஆசியா மாதர்கள் மஹாநாட்டின் வரவேற்புக் கழகத்தலைவியாகவும் ஸ்ரீமதி சரோஜினிதேவிக்கு பதிலாக அவர் சிறையிலிருந்தபோது தேர்ந்தெடுக்கப்பட்டார். 1935ம் வருஷம் அவரது தேகநிலை அவ்வளவு சரியாயில்லாததால் அம்மஹாநாட்டு சம்பந்தமான வேலைகளில் அவரால் ஈடுபட முடியவில்லை. ஸ்திரீகளின் கல்வி, சுகாதார, சமூக முன்னேற்ற சம்பந்தமான வேலைகள் எல்லாவற்றிலும் முத்துலக்ஷ்மியம்மாள் பங்கெடுத்து வந்தார். அவர் சம்பந்தப்படாத ஸ்தாபனங்கள் ஒன்றுமே இல்லை யென்று கூறலாம். இந்தியமாதர் சங்கத்தின் அங்கத்தினராகவும், அதன் உப அக்கிராசனராகவும், கௌரவக் காரியதரிசியாகவும், பல வருஷங்கள் இருந்து மாதர்களின் அரசியல் பொருளாதார முதலிய உரிமைகளைப்பெற ஸ்ரீமதிகள் ஜீனாராஜதாஸா, கஸின்ஸ் முதலியவருடன் அரும்பாடுபட்டு அநேக காரியங்களைச் சாதித்தார். பெருத்த வருமானம் வரும் வைத்தியத் தொழிலையும் புறக்கணித்துவிட்டு இது போன்ற சமூக சேவையில் ஈடுபட்டுவந்தார்.

**லோதியன் கமிட்டி** இந்தியாவுக்கு வந்தபோது ஸ்திரீகளின் ஓட்டுரிமைக்காக அவர் எவ்வளவோ பாடுபட்டார். அரசியல் சம்பந்தத்தில் அவர் பழுத்ததேசீய வாதியாயிருந்த போதிலும், சமய சந்தர்ப்பங்களும், ஸ்தாபனங்களும் அவரை சில சமயங்களில் சர்க்கார் கமிட்டிகளுடன் ஒத்துழைக்கச் செய்தன. வேறு கதியில்லாமல் தன் மனதுக்கிஷ்டமில்லாது இருந்தபோதிலும், பொது நலத்தை யுத்தேசித்து அப்பணிகளில் அவர் ஈடுபட்டு மெச்சத்தகுந்த நன்மைகளை மாதர் உலகுக்கு அளித்துளர். இந்தியாவின் அரசியல் சீர்திருத்தத்தைப்பற்றி விசாரணை செய்த ஜாயின்ட் பார்லிமெண்டு கமிட்டிமுன் ஸ்ரீமதி ரெட்டியும் சீமைக்குப் போய் சாட்சியும் கொடுத்துவிட்டு, அப்படியே அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் இந்தியாவின் நன்மைக்காக அநேக சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவரது சொற்பொழிவுகளைக் கேட்க ஆசை கொண்ட பலசங்கங்கள் அவரை அழைத்தன. ஆனால் அவரால் செல்ல முடியவில்லை. இந்தியாவுக்கு 1933ம் வருஷம் செப்டம்பர் மாதம் திரும்பி வந்துவிட்டார்.

1930ம் வருஷம் ஔவை ஆசிரமத்தை நிறுவினார். இன்றும் அதன் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.





## தியாகம்

இவருக்கு தன் தொழிலில் சுமார் 1500 ரூபாய் முதல் 2000 வரை வருமானம் வந்தது. ஆனால் இவர் பொது ஊழியத்தில் ஈடுபட ஆரம்பித்தவுடன் வருமானம் குறைந்தது. அதைச் சற்றும் அவர் பொருட்படுத்த வில்லை. பொது ஜனசேவையே அவருக்கு மேன்மையாகப்பட்டது. 1930ம் வருஷம் சர்க்கார் மஹாத்மா காந்தியடிகளைச் சிறையிட்டபோது அதைக் கண்டிருக்கும் பொருட்டு சென்னைச் சட்ட சபையின் உப அக்கிராசனர் பதவியை ராஜிநாமாச் செய்தார். அந்த உத்தியோகத்துக்கு 500 ரூபாய் சம்பளமுண்டு. அநேகம் பேர்கள் சிறை சென்ற காலத்தில் அவர் வெளியிலிருந்து அத்தியாவசியமான சேவைகளைச் செய்து வந்ததை பலகாங்கிரஸ்தலைவர்களும் இன்னும் புகழ்ந்து கூறுகிறார்கள். காங்கிரசின் சார்பாக சட்டசபைக்கு நிற்கும்படி வெகுகாலத்துக்கு முன்னரே கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. சென்ற வருஷம் நவம்பர் மாதம் காங்கிரசின் சார்பாக சென்னை நகர சபைக்கு ஆல்டர் மேனாக நிறுத்தப்பட்டு போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்டார். அவரது ஆடம்பரமற்ற தேசசேவையையும், தேசபக்தியையும் நாடு நன்கு உணர்ந்திருக்கிறது. ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டிக்கு தீர்க்காயுளும், திடகாத்திரத்தையும் மென்மேலும் பராசக்தி தந்தருளுமாறு நாம் பிரார்த்திக்கிறோம். அவர்கள் பல துறைகளிலும் செய்து வரும் தன்னல மற்ற தூயசேவைகளை நாம் மனமாறப் போற்றி வாழ்த்துகின்றோம்.

# வைத்தியப் பகுதி

## சூரிய வெளிச்சமும், தூயகாற்றும்.

"சுகுமாரி"

பழையகாலந்தொட்டு, சூரியவெளிச்சம், தூயகாற்று இவற்றின் ஆரோக்கிய உபயோகங்கள் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தபோதிலும், கொஞ்சகாலத்திற்கு, அவைகளுடைய உண்மையான மதிப்புத் தெரியாமல் அவைகளுக்கு பதிலாக மருந்துகள் உபயோகப் படுத்தப்பட்டன. அதிர்ஷ்டவசமாக இவைகளுடைய உபயோகம் மறக்கப்படாமல், கொஞ்சகாலமாக, இவைகளிலிருந்து மிகவும் இலகுவாக சௌகரியங்கள் அடையலாம் என்னும் உண்மைக்கு புத்துயிர் உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அநேக பெரிய நகரங்களில் ஜனங்களின் வெளிச்சம், காற்று சௌகரியத்திற்காக ஆபாசமான தெருக்களெல்லாம் எடுக்கப்பட்டு, மிகவும் விசாலமான தெருக்களாக்கப்பட்டிருக்கின்றன. பார்க்குகளும், மற்றும் இதர பொது இடங்களும் இதற்கு அனுகுணமாக இருக்கின்றன. தற்கால நாகரிக வீடுகள் பெரிய ஜன்னல்களை அதிகமாகயுடையனவாகக் கட்டப்படுகின்றன. தற்கால உடைகள்கூட காற்றோட்டத்திற்குத் தகுந்தபடி உடுக்கப்படுகின்றன.

18 வது நூற்றாண்டில் லார்டு மான்போடோ என்னும் ஸ்காட்லந்து தேசத்திய ஜட்ஜ் ஒருவர் "காற்று ஸ்நானம்" செய்துவந்தார். அவர் ஒவ்வொருநாள் காலையிலும் நான்கு மணிக்கு எழுந்திருந்து அறையில் எல்லா ஜன்னல்களையும் திறந்து வைத்துக்கொண்டு நிர்வாணமாக உலாவுவார். இதைத்தான் அவர் "காற்று ஸ்நானம்" என்பார். இதேமாதிரி, தன் அழகிய பெண்களையும் நிர்வாணமாக மேல்மாடியில் "காற்றுஸ்நானம்" செய்யும்படி வற்புறுத்தினார். அதே 18 வது நூற்றாண்டில் பெஞ்சமின் பிராங்க்லின் என்பவர் சிலசமயங்களில் நிர்வாணமாகத் தன் வேலைகளைச் செய்வதுண்டு.

### சூரிய ஸ்நானம்

சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் ரிக்லி என்பவர் ஆஸ்திரியாவில் டிரிஸ்டி என்னுமிடத்திலும், மற்றும் சில இடங்களிலும், "வெளிச்சத்தில் ஸ்நானம்" செய்வதையும், "காற்றில் ஸ்நானம்" செய்வதையும் ஏற்படுத்தினார். வெளிச்சமும், காற்றும் ஜீவனுக்கு முக்கிய ஆதாரம் என்று அவர் கூறுவார். இப்பொழுது அநேக டாக்டர்கள், க்ஷயரோகம், வாதம், சோகை, முதலிய வியாதிகளுக்கு "சூரிய ஸ்நானம்" செய்யும்படி சிபார்சு செய்கிறார்கள்.

வியாதிகள் இருட்டிலிருந்து உண்டாகின்றன. அதிகமான வெளிச்சம் ஒரு மனிதனின் மீது பட்டுக்கொண்டிருந்தால் அவன் மிகவும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம். சூரிய வெளிச்சம் நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்தது. சூரிய கிரணங்கள் தாவர வர்க்கங்களுக்கும், மிருக ஜந்துக்களுக்கும் மிகவும் அவசியமாக இருக்கின்றன. நாம் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ வெளிச்சம் இல்லாமல் உயிர் வாழமுடியாது. சில சமயங்களில் மனிதன் வெளிப்படையான வெளிச்சமில்லா



மல் வாழ்கிறான். ஆனால் உண்ணும் உணவின் மூலம் வெளிச்சம் கிடைக்கிறது. ஆகாரத்தில் சூரிய கிரணங்கள் அடங்கியிருப்பதென்பது சாதாரண உண்மையே. வெளிச்சத்தில் போட்டு முளைக்கப்பட்ட உருளைக்கிழங்கு விதைகள், சூரிய வெளிச்சத்தில் வெளிப்படுத்தப்படாத விதைகளைவிட, அதிகமான லாபத்தைத் தருகின்றன. சூரிய வெளிச்சத்தால் 'ஐரிஸ்' என்னும் ஒரு விதமான செடியை, பூக்கள் பூக்காத காலத்தில் பூக்க வைக்கலாம். இச் செடியின் தழைகள் வாடியவுடன் அதன் கிழங்கை சூரிய வெளிச்சத்தின் முன் சில வாரங்கள் வைத்து, மறுபடியும் வளர வைத்தால் அது அகாலத்திலும் பூக்கும். அக்கிழங்குகள் சூரிய வெளிச்சத்தில் கிடந்து கிரணங்களைக் கிரகித்துக் கொள்கின்றன. இம்மாதிரியாக அதிகப்படியான சக்தியை தழைகள் மூலம் கிரகித்துக் கொண்டு அவைகள் பூக்க ஆரம்பிக்கின்றன.

### உபயோகங்கள்

ஆகையால் வியாதிகளைப் போக்குவதற்கு மட்டும் 'சூரிய ஸ்நானம்' சிபார்சு செய்யப்படுவதுமன்றி, வியாதிகள் வராமல் தடுப்பதற்கும், தேகத்தை பலப்படுத்தி கொள்ளுவதற்கும் சிபார்சு செய்யப்படுகிறது.

1835-ம் வருஷத்தில் ரோஸன்பாம் என்பவர் கண் நோய்க்கும், கழுத்தில் உண்டாகும் கண்டமாலை என்னும் நோய்க்கும் "சூரிய ஸ்நான"த்தை சிபார்சு செய்தார். 1919-ம் வருஷத்தில் ஹல்டசின்ஸ்கி என்பவர், வியாதி யெல்லாம் சூரிய வெளிச்சத்தால் சொஸ்தமாகுமென விளக்கிக் காட்டினார். அப்பொழுது பிரான்ஸில் பாரி, லா பியரி, லே காம்டி முதலியவர்கள் சூரிய கிரணங்களால் புண்களுக்கு சிகிச்சை செய்தார்கள். 1902-ல் டாக்டர் ஓ. பெர்னுடு என்பவர் ஸெயின்ட் பாரிட்ஸில் ரண வியாதிகளுக்கு சிகிச்சை செய்ய சூரிய வெளிச்சத்தை உபயோகித்து வந்தார். சூரிய வெளிச்சத்தின் மதிப்பும், உபயோகமும் மிகவும் பெரிய பெரிய டாக்டர்களால் போற்றப் பட்டிருக்கிறது என்பதற்கு இன்னும் அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

உலகம் முழுவதிலும் நிர்வாணமாகத் திரியும் மிருகங்கள் மிகவும் ஆரோக்கியமாகவும், வலிமையுள்ளனவாகவும் இருக்கின்றன. ஆனால் எங்கே நிர்வாணத்தை உதறித்தள்ளி உடை உடுத்துகிறார்களோ, அங்கே, வியாதிகளும், மரண விகிதமும், க்ஷீணதசையும் அதிகரிக்கின்றன.

"சூரியஸ்நானத்தில்" முக்கியமான ஒரு சௌகரியமென்னவென்றால் அவைகள் சாதாரணமான ஏழைகளுக்கும் கிடைக்கின்றன.

### அனுசரிக்க வேண்டிய முறைகள்

ஒவ்வொரு நாளும் "சூரியஸ்நானத்திற்கு" முன்பு கொழுப்பு சேராத எண்ணையைத் தேகத்துக்கு உபயோகப் படுத்த வேண்டும். முதல் நாள் ஐந்து நிமிஷத்திற்கு தேகத்தின் கொஞ்சபாகந்தான் சூரிய வெளிச்சத்திற்கு வெளிப்பட்டிருக்க வேண்டும். இப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக தேகத்தின் சுற்றுப் புறமும், உடலும் சூரிய வெளிச்சத்திற்கு வெளிப்பட்டு, இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின் தேகம் முழுவதையும் வெளிக்காட்டலாம். மத்தியான நேர சூரிய வெளிச்சம் கூடாது. முதலில் ஒவ்வொரு பத்து நிமிஷத்திற்கும் பாவனைகள் மாற வேண்டும். முதலில் புதிதாக அல்லாதவர்கள் கூட இம்மாதிரி செய்தால் நலம். புதிதாக ஆரம்பிப்பவர்கள் தங்கள் தலையை அதிகமாக வெயிலில் காட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"வெய்யில் ஸ்நானம்" ஆரம்பித்து விட்டால் எல்லாவித அதிருப்திகரமான நோய்களெல்லாம் ஒழிக்கப்பட்டு, தேகம் பலமாகவும், புத்துயிர் பெற்றும் விளங்கும்.

# கண்ணன் காதலி

'மைதிலி'

கண்ணன் காதலி! காதலனாகிய கண்ணனையே நினைந்துருகி, அவனது கல்யாண குணங்களைச் செவிக்கினிய சங்கீதத்திலமைத்துப் பாடித் தன்னுயிரையே அவனுக்கர்ப்பணம் செய்த மகா உத்தமி. இந்திராதி தேவர்களாலும் தரிசிக்க முடியாத நவநீதனுக்கே தன்மனதைப் பறிகொடுத்துக் கடைசியில் அவனடி சேர்ந்து இன்புற்றவளப் பெண்மணி. கலியுகத்தின் கலியைத் தீர்க்க அவதரித்த ஆரணங்கு. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த அப்பெண்மணியே இராஜபுதனத்தின் திலகமாகிய மீராபாய். அவள் இவ்வுலகை நீத்துப் பலநாட்களாயினும், அவளுடைய குறையாத பக்தியினாலேற்பட்ட அழியாப் புகழ் தற்காலப் பெண்களுக்கோர் வழிகாட்டியாக நிற்கின்றது.

பாலியத்திலேயே கோபாலன் வயப்பட்டாள் கண்மணி. மீராவின் அன்னை தெய்வபக்தி மிகுந்தவள். அன்னையின் அருங்குணம் புதல்வியினிடம் மிகுந்திருந்தது. ஒரு நாள் அரசிளங்குமரி மீரா வசிக்கும் வீதி வழியாக ஓர் விவாக ஊர்வலம் சென்றது. அரண்மனையிலுள்ளோரெல்லாரும் இவ் விநோதத்தைப் பார்க்கச் சென்றனர். மீராவின் தாயோ தன் இஷ்ட தெய்வமாகிய கிருஷ்ணமூர்த்தியைப் பூஜித்துக் கொண்டிருந்தாள். ஊர்வலத்தின் ஒலியைக்கேட்ட மீரா தன் தாயை நோக்கி, 'அம்மா எனக்கு நாயகனாக வரப்போகிறவர் யார்?' என்று வினவினாள். அப்பொழுது குணவதியாகிய மீராவின் அன்னை அளித்த பதிலே மீராவை மாதவனுடன் பிணைக்க மூலகாரணமாயிருந்தது. 'கண்ணே, இதோ இங்கு வீற்றிருக்கும் விமலனே உன் நாயகன்' என்று தான் பூஜித்து வரும் ஸ்ரீகிருஷ்ண விக்ரஹத்தைக் காண்பித்தாள். சிறுமி மீராவின் உள்ளத்தில் தெய்வ அன்பு என்னும் விளக்கு ஏற்றப்பட்டது. கண்ணனின் மேல் குறையாவன்பு கொண்ட மீரா தான் அப்பொழுதே கேசவனின் மனைவியாய் விட்டதாக எண்ணினாள். அக்காலத்திய வழக்கப்படி புதுமணப் பெண்கள் செய்வதுபோல் முகத்தை மூடிக் கொண்டாள்.

அச்சுதன் பால் அவள் கொண்ட அன்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. கமலக் கண்ணன்மேல் தனக்குள்ள காதலை அவள் வெட்கம் சிறிதுமின்றி யாவரிடமும் கூறலானாள். கடவுளின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு வெட்கப்படுவதேன்? சிறுமி மீராவின் பெற்றோர் அவளுடைய உள்ளத்தின் தன்மையை அறியவில்லை. எங்கும் நிறைந்து, ஏகமேவத் வீதியாய் விளங்கும் ஏதுகுலதிலகனுக்குத் தன்மனதைப் பறிகொடுத்த மீராவிற்கு விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன. மீராவிற்கோ இவ்வுலகத்தின் நினைவே இல்லை; கண்ணனைப் பற்றியே சிந்தனை. திருமணமும் நடந்தது. மீராவை நாயகியாகப் பெறும் பாக்கியத்தைப் பெற்ற மீவார் அரசகுமாரன் மீராவைத் தன்னாட்டிற்கு அழைத்துச் செல்லும் பொருட்டுச் சித்தூருக்கு வந்தான். மீரா அவன் வந்தவுடன், சம்பிரதாயப்படி அவனை மும்முறை வலம் வருவதற்குப் பதிலாகத் தன்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட வேணுகான லோலனின் சிலையை மும்முறை வலம் வந்தாள். தன் கணவனைக் கவனித்தாளில்லை. தன் மாமனகத்திற்குப் போகும் வேளை வந்தவுடன் தன்னாருயிர்ச் சிலையைக் கையிலெடுத்துக் கொண்டு "என்னாதனை (கிருஷ்ணனை) விட்டு ஒரு க்ஷணமேனும் பிரிந்திரேன். அவனையும் உடன் அழைத்துச் செல்வேன்" என்று பிடிவாதம் செய்தாள். அவளுடைய பெற்றோர் அவள் துயருறச் சகியாராதலின் அச்சிலையையும் அவளுடைய ஸ்திரீதனத்திலொன்றாகக் கொடுத்தனுப்பினார்கள்.

தன்னடியார்கள் தன்னடியைச் சேருவதற்கு முற்றிலும் தகுதியுடையவர்களா என்று ஆராயவே, எம்பெருமான் சோதனை என்னுமோர் கருவியை வைத்திருக்கிறான் போலும். தன்னடியார்களை நன்றாகச் சோதித்து அவர்கள் தன்னிடம் வர பூரணயோக்கியதையுள்ளவர்களா என்பதை அண்ணல் நன்கறிகிறான். மீரா இவ்விதிக்கு விலக்கானாளில்லை. மாமியினகம் சேர்ந்ததுமே மீராவின் துன்பங்கள் ஆரம்பமாயின. ஒரு நாள் இருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடைபெற்றது.

மாமி: மீரா, புதிதாக மணம் செய்து கொண்ட பெண்கள் துர்க்கையைப் பூஜிப்பதே எப்பொழுதும் நடந்துவரும் சம்பிரதாயம். ஆகையால் நீயும் அவ்வாறே செய்வாயாக.

மீரா: அம்மா, என்னுடலையும், உயிரையும் கண்ணனிடம் ஒப்புவித்து விட்டேன். ஆதலின் தாங்கள் சொற்படி நடக்க வியலாது.

மாமி: மீரா, ருக்மணியும், கோபியரும், கிருஷ்ணனை அடைவதற்கு முன் துர்க்கையையே பூஜித்தார்கள். ஆதலால் வழக்கத்தின்படி நடப்பதே அழகு.

மீரா: நான் கண்ணனைப் பல நாட்களுக்கு முன்னமேயே அடைந்து விட்டதால் எனக்குத் துர்க்கையைப் பூஜிக்க வேண்டியதவசியமில்லை.

மீரா தனியாக ஒரு அறையில் விடப்பட்டாள். 'இனிது, இனிது, ஏகாந்தமினிது' என்றவாறு அவள் தன் காதலனைக் குறித்துப் பாடியும், அவனைப் பற்றியே ஸ்மரித்துக்கொண்டும் சந்தோஷமாகக் காலத்தைப் போக்கினாள். மீரா சாதுக்களுடன் சேர்ந்து பாண்டுரங்கனைப் பஜிப்பதையே விரும்பினாள். ஒரு நாள் அவள் மைத்துனி, மீரா சாதுக்களின் சேர்க்கையை விரும்புவதைப் பற்றி அவளை இகழ்ந்தாள். "சாதுக்களை விரும்பாதவர்களுக்கு நரகம் என்று அறிந்து கொள்ளம்மா" என்று மீரா புன் சிரிப்புடன் கூறினாள்.

"என் மாமியோ கொடியள், என்
மைத்துனியோ பிடிவாதக்காரி,
இத்துன்பத்தை யான் எவ்வாறு
சகிப்பேன்?

மீரா கிரிதனுக்காகவே இவ்வுலக துன்
பங்களைச் சகித்துக் கொள்கிறாள்.

என் காதலாகிய விருக்ஷத்தை நட்டு,
அதற்கு என் கண்ணீரையே பாய்ச்
சுவேன்.

நான் உலகத்திற்குப் பயப்படவில்லை;
என்னை யார் என்ன செய்யமுடியும்?
எதுவந்த போதிலும் மீராவுக்குக் கண்
ணன் மேலுள்ள காதல் குறை
யாது" என்று மீரா பாடலானாள்.

மீராவின் மாமனாகிய அரசன், மீராவின் பக்தியைத் தோற்றுவிக்கும் பஜனை முதலியவைகளை நிறுத்திவிட முயற்சித்தான். பக்தி ரஸம் பொங்கித் ததும்பும் பரிசுத்தமான இளமனதின் தன்மையை யறியாத அக் கொடியோன், மீராவுக்கு அவள் தாயின் மூலமாகவே விஷத்தை அனுப்பினான். விஷத்தைக் கையிலெடுத்தாள் மீரா. கண்ணீர் மல்கும் தன் தாயின் முகத்தை நோக்கினாள். 'அம்மா, உடல் அழியுந்தன்மை உடையது. கண்ணன் பொருட்டு இத்தேகம் அழிவதில் உனக்கென்ன வருத்தம்? மரத்தின் பழமானது எக்காலத்திலேனும் கீழே விழுந்தாக வேண்டும். அதுபோலவே நானும் கண்ணன் பாதத்தில் என்றைக்கேனும் விழுவேன். விரைவில் அவன் பாதம்அடைவதே என் விருப்பம். உலகமே ஓர் மாயை. ஆதலின் நீ வருந்துதலொழி' என்றாள் மின்னலனைய மீரா. இறப்பதற்கு அவள் சிறிதும் அஞ்சினாளல்லள். எங்கே தானிறந்துபட்டால் கண்ணன் வழிபாட்டிற்குக் குறைவேற்படுமோ என்பதே அவள் கவலை. அவ்வாறு குறைவேற்படாமலிருக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சினாள். பிறகு, வியக்கத்தக்க அமைதியுடனும், அளவில்லா குதூகலத்துடனும் விஷத்தை யருந்தினாள் அணங்கு. ஆனால் ஆண்டவனின் சித்தம் வேறாக இருந்தது. மீரா உயிரிழக்கவில்லை. முன்னிலும் அதிகமான தேஜஸுடன் விளங்கினாள் மீரா. கண்ணன் பால் அவள் கொண்ட அன்பு அதிகரித்தது. 'அரசனே, என்னை உன் குடும்பத்திலொருவளாகப் பாவித்துக் கொள்ளாதே. நான் உன் மகனின் மனைவியல்ல; வேறொருவனுக்குரியவள்; என்றாள் மீரா தன் மாமனைப் பார்த்து.

மீரா சாதுக்களிடம் எவ்வாறு நடந்துகொள்கிறாளென்பதைப் பற்றி அறியும் பொருட்டு அரசன் சாரணர்களை நியமித்தான். ஒரு நாள் மீரா தன்னுயிரனைய சிலையுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கையில், சாரணர்களுளொருவன் அரசனிடம் சென்று, "மீரா துறவிகளுளொருவனோடு சரஸ வார்த்தைகள் பேசுகிறாள்" என்று கூறினான். ராணா வெகுண்டு, மீராவின் அறைக்குச் சென்றான். மீராவையும், கண்ணனின் உருவச்சிலையையுந்தவிர வேறொன்றையும் காணாதவனாய் ராணா வியப்புற்று நின்றான். அவன் உள்ளே நுழைந்தபோது மீராவின் அன்புப் பெட்டகமாகிய அச்சிலை தன் கைகளிலொன்றால் சதுரங்கக் கட்டையை நகர்த்துவதைக் கண்டான் ராணா. கொண்டான் வெட்கமும் வியப்பும். ஆனால் மீராவின் உண்மை நிலையை அவன் இன்னும் அறிந்தானில்லை. மீராவின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அச்சிலையானது பழைய சித்தூரில் ஒரு கோவிலில் வைக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் மீரா அசௌக்கிய முற்றிருந்தபோது வைத்தியர்களை நோக்கிக் கூறியதாவது: "உங்கள் மந்திரங்களும்;





மருந்துகளும் என்னேயைக் குணமாக்கக் கூடிய சக்தி வாய்ந்தவையல்ல. உங்களில் யாரேனும் ஸ்ரீகிருஷ்ணனை எனக்குச் சிகிச்சை செய்ய அழைத்து வந்தால் அப்பொழுது தான் நான் குணமடைவேன்." வேறொரு சமயம் ஒரு காமுகன் தீய எண்ணத்தோடு அவளிடம் நெருங்கியபோது, குணக்குன்றாகிய மீரா அவனுக்குப் புத்திமதிகள் கூறி "அப்பா அவனறியாது நடப்பதொன்றுமில்லை. நாம் புரியும் நற்செயல்கள், தீச் செயல்கள் இவைகளுக்குத் தக்கவாறு அவன் நமக்குப் பலன்களைத் தருகிறான்" என்றாள். உடனே அத்தீய மனத்தோன், வெட்கமுற்று, அவள் காலில் விழுந்து, அவள் மன்னிப்பைப் பெற்று, நன்னெறியாளனானான்.

அக்காலத்தில் டில்லியில் அரசுபுரிந்த அக்பர் சக்கிரவர்த்தி மீராவின் அழகையும், குண விசேஷங்களையும் பற்றிக் கேள்வியுற்று அவளைக்காண விரும்பி, தன்னன்பனான தானசேனனுடன் துறவியாக மாறுவேடம் பூண்டு, மீராவசிக்கும் மிடத்திற்கு வந்து சேர்ந்தான். மீராவின் அளவுகடந்த பக்தியையும், கண்ணன்மேல் அவள் இசைக்கும் இனிய கீதங்களையும் கேட்டு ஆனந்தபரவசனான அக்பர், அவளுக்கோர் வைரமாலையை அளித்தான். 'துறவிகளுக்கேன் வைர நகை' என்று அதை வாங்க மறுத்தாள் மீரா. ஆயினும் அக்பர் தான் அதை யமுனையில் நீராடுங்கால் கண்டெடுத்ததாகவும், அது மீராவின் கிரிதரனுக்கே உரியது என்றும் கூறியளித்தான்.

அக்பர் சென்ற பிறகு, மீராவிடம் ஓர் விலையுயர்ந்த ஆபரணமிருப்பதைக் கண்டு எல்லோருக்கும் அவள் நடத்தையைப் பற்றிச் சந்தேகமுண்டாகியது. ராணா அந்த நகையை வரவழைத்துப் பார்த்து, விசாரணையினால் அது சில வருஷங்களுக்கு முன் அக்பருக்கு ஒரு நகை வியாபாரியால் அளிக்கப்பட்டதென்பதை அறிந்தான். மீராவிடம் வந்துபோன சாது அக்பராகவே இருக்க வேண்டுமென்று யூகித்த ராணா மீராவை கொல்ல எண்ணம் கொண்டவனாய் ஒரு கொடிய நாகத்தை ஒரு பெட்டியில் வைத்து அதைச் சாளக்கிராமம் என்று கூறி மீராவுக்கு அனுப்பினான். ஆவலுடன் பெட்டியைத்திறந்த மீரா, புஸ்ஸென்று சீறி வெளிக் கிளம்பும் சர்ப்பத்தைக் கண்டாள். மிகுந்த அச்சங் கொண்டவளாய் துரோபதைக்குத் துயிலளித்த துவாரகாநாதனைத் துதிக்கவே, அக்கொடிய நாகம், அழகியதோர் சாளக்கிராமமாக மாறியது. கண்ணன் செயலை எண்ணி எண்ணி இன்புற்றாள் மீரா.

மீராவின் மாமன் அவளுக்கு மேலும் கெடுதிகள் பல புரியவே, மீரா அவைகளைச் சகிக்க முடியாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள். எங்கு போவதென்றறியாமல் அலைந்தாள். ஒரு சமயம் தன்னுயிரை விடுவதற்கு ஒரு நதியில் விழுந்தாள். ஆனால் அவள் எக்காரியத்திற்காக உலகில் பிறந்திருந்தாளோ அக்காரியம் முற்றுப் பெறாததினால் பகவான் அவள் இறவா வண்ணம் காப்பாற்றினார். கரையிலொதுக்கப்பட்ட மீரா, சிறிது நேரம் சென்றபின் எழுந்து அங்குள்ள இடைச் சிறுவர்களால் பிருந்தாவனமடைய வழி காட்டப் பெற்றுப் பிருந்தாவனத்திற்கு வந்து சேர்ந்தாள்.

பிருந்தாவன மடைந்த மீரா, அழியாப்

புகழ்படைத்த வல்லபாச்சாரியாரின் மகனாகிய ஜீவ கோசயரைப் பார்க்க விரும்பினாள். ஆனால் ஜீவகோசயரோ 'பெண்களொருவரும் என்னெதிரே வரலாகாது' என்று கூறிவிட்டார். மீரா மிக்க ஏமாற்றமடைந்தவளாய், "பிருந்தாவனத்திலுள்ள ஒவ்வொருவரும் பெண்ணென்றும், கண்ணன் ஒருவனே ஆணென்றும் எண்ணியிருந்தேன். ஆனால் இவர்கள் தவிர இன்னும் பாகஸ்தர்கள் பிருந்தாவனத்தில் இருக்கிறார்கள் என்று இப்பொழுதுதான் தெரிகிறது" என்று வயிற்றெரிச்சலோடு கூறினாள். தன்னைக் கிருஷ்ணனுக்குச் சமமாக நினைக்கும் கோசயரை அவமானப்படுத்தவே அவள் இவ்வாறு கூறியதால், கோசயர் மிக்க அவமானமடைந்து தானே மீரா இருக்கு மிடத்திற்கு வந்து அவளது மன்னிப்பைப் பெற்றார்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு மீரா தன்னாட்டிற்குத் திரும்பினாள். ஆனால் அங்கு அவள் சுற்றத்தார் அவளை வெறுக்கவே, தன்னின்னுயிர் நாதன் வசித்த இடமாகிய துவாரகைக்குச் சென்றாள். மீரா மீவாரை விட்டுப்போகவே, சாதுக்களும், பக்தகோஷ்டிகளும் மீவாருக்குச் செல்வதைத் தவிர்த்தார்கள். இவ்வாறு, தெய்வானுக்கிரஹம் பூரணமாகப் பெற்ற புனிதர்களது சேர்க்கையில்லாமல் போகவே நகரம் சோபையற்றிருந்தது. ராணா மீராவின் மேன்மையை அறிந்தான். மீராவை மீண்டும் அழைத்து வந்து விட ராணா பெரிதும் விரும்பினான். துவாரகைக்குப் பல தூதுவர்களை அனுப்பி மீராவைத் திரும்பும்படி வேண்டினான். ஆனால், மீரா தான் கண்ணன் அநுமதி பெற்றுவருவதாகச் செய்தி யனுப்பினாள். பின் துவாரகையிலுள்ள ரஞ்சிதனின் ஆலயத்தை அடைந்தாள். கண்ணனைக் கைகூப்பித் தொழுதாள். அவ்வாறு பிரார்த்தனையிலேயே ஈடுபட்ட அவளுடைய உயிர் சென்று கண்ணனை அடைந்தது: அண்ணல் அணங்கை ஆட்கொண்டான். அவள் உடல் மறைந்தது. அவளணிந்திருந்த ஆடைமட்டும் ரஞ்சிதனின் சிலையின் மேல் காணப்பட்டது. இச்செய்தி கேட்ட யாவரும் மீராவின் பக்தியை மெச்சினார்கள். மீராவின் முடிவை அறிந்த ராணா அளவற்ற துயரடைந்தான். தன் வாழ்வையே தனஞ்சயனுக் கர்ப்பித்த தையலாகிய மீராவின் உருவச் சிலையை இன்றும் உதயபுரியில் கோவிலில் வைத்துப் பூஜித்து வருகின்றார்கள்.








## சங்கீதவித்வான் ஜீ. எம். நாகராஜராவ்

சங்கீதம் மனதை உத்ஸாகப்படுத்துகிறது. எப்பேர்ப்பட்ட வருத்தத்தையும் போக்கும் வன்மையுள்ளது. சாரீரம் நன்றாக அமைந்திருப்பவர்கள் வாய்ப்பாட்டு கற்றுக்கொள்ளலாம், சாரீரம் இல்லாதவர்கள் வீணை, பிடில், புல்லாங்குழல் முதலிய வாத்யங்கள் கற்றுக்கொள்ளலாம். ஹார்மோனியம் என்பது ஒருவாத்யம். அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத்தான் அதன் அருமை புலப்படும். இந்த ஆர்மோனியம் வாசித்து நற்கியாதி பெற்றவர்களான ஸ்ரீமான்கள். பெருங்குளம் ஸ்ரீனிவாஸய்யங்கார், சுப்பரமண்யதீக்ஷிதர், திருச்செந்தூர் ஹரிஹரய்யர் முதலிய பெரியோர்கள் இதை வாசித்து நிரூபித்திருக்கிறார்கள்.

ஆகையால் எல்லாவாத்தியங்களும் சாதகம் செய்தால் ஒவ்வொன்றையும் வாசித்து திறமையைக் காட்டலாம். ஆர்மோனியத்தை யாரும் தூஷணை செய்யலாகாது. ஸ்ருதிபோட வேண்டு மென்றால் ஹார்மோனியம் தான் வேண்டியிருக்கிறது. தம்பூர், சரியாக அனுபோகம் உள்ளவர்கள் மீட்டினாலொழிய ஸ்ருதி கலைந்துவிடும். இப்பொழுது ஆர்மோனியம் தான் வேண்டியிருக்கிறது. சினிமாக்களிலும், நாடக மேடைகளிலும் பெடல் (கால்) ஆர்மோனியம் தான் அவசியம் வேண்டியிருக்கிறது. தற்காலத்தில் கர்னாடக சங்கீதம் போய் நவீன சங்கீதம் விருத்தியடையச் செய்ய வேண்டும்.

### தியாகராஜ கீர்த்தனை

ராகம் காம்போதி—தாளம் ஆதி

பல்லவி

1. ப மா க மா பா . பா . தபதா . தாநிதபதாப
   எவரிமா . ட . வி . ஞ . வோ . . . .
   மா ப ம பா த ப . த ஸ நீ தாபா . ப ம .
   ரா . . . . ஒ . . . . . . ஒ .
2. ப ம ப த நி த ப மா க . பா த ப தா . தா நி த பா த ப
   ஒ . எ வ . . . ரி . மா ட வி . ஞ . வோ .
   ம க ம ப ப ம ப த . ப த ஸா . ரி ஸ நி த
   ரா . . . . ஒ .

3. தபபமபதநிநிததபாமக . பாதப . தாநித
ஓ . . ளவரி . மாடவிஞு . . வோ .
பதாபதஸரிகமகரீ , காமாகாம , கரிஸாதாநிபா
ஓ . . ரா . . . . ஓ .
மா . பநிதாதநிபாதபமகபமகரி . கரிஸநிநிபாதாஸா
ஓ . இந்துலே . . . . . . வோ .
ஸரிகம பதமக பதரிஸநித . பா .
ஓ . . . பனி . ப . னீ .

4. பஸநீ (நி (தா) (ப) மகமபா . தஸரிகமகரீ
ள . . வ . . ரி . மா . ஞு . வோ .
காமாகாமா கரிஸாதாரீரிஸநீ .
ரா . . . . . . .
தபமா . தஸநீதநிபா . ஸா . ஸரிகமபதஸரி
ஓ . . இந் . து . . வோ . . . . .
கமகரிஸா . பதரிஸநித . பா
ஓ . . . யனி . . ப . னி (ஏ)
ஸரிகமபாதபமகபதஸரி . காமகரீகரிஸா
பதரிஸநிதபா (ஏவரி)

## அ—பல்லவி

(1) ஸாபாதாஸா . ரீ . ஸரிதா . மாகரி
அ . வ . னிலோ . கா . ர் . வேஷ .
மகரிஸா . தாரிஸநீதாபா .
ய அ அ அ . பௌருஷே .

(2) தாஸபதஸாஸநிதாதாநிதபா
ய . அவனிலோ . . . .
தஸஸரிகம . கா ஸரிகரிகமகரிஸா
கார்வேஷ . . . ய . . .
தஸஸரி கம . காஸரிகரிகமகரிஸா
கார்வேஷ . . ய . . .
ததஸரீஸநிதாபா , தாஸரிகரிரிகரிஸாஸ
பௌருஷே . . மஅ . . ந்நி .
ரிஸநிதபாத . பமகபாதஸதநீ .
சோ . . . . . த்யமெ .
நிததபமாகமபதஸநிநித . தபபம
ரு . க . லே . லாய் . ய . . (ஏவரி)





## சரணம்

(1) தநிதபாதாபாதாபதநித . நீ . நிதாநிதபா .
பக்தபாரா . தி . . . . ஞுடஞுசு .
பத . . தபபமமா .
பா . மா . .

(2) தநிதபாதா . கமபதபதநித . நீநிதாநிபா .
பக்தப . ரா . . தி . . ஞுடஞுசு .
நிததபமா கமபதரிஸநிதபாமபதா .
பா . . மா . பஅ . . க்தபாரா .
கமபதபதநிதநீநிதபா . . பதமா .
தி . . ஞுடஞுசு . பாம .
மபமநிதநி பாதபாதமாகாமப .
பாகவ . து . லு . . .
தாபாதஸாதாதா . தநிபா .
ஸே . . வி . ம் . சி .
மகபதஸா . ஸாரிகரீஸநிதாபாதா .
வியக்தா . ரூ . . . பு . டை .
ஸாஸநிதாதநிபா . தாநிதபாதபமாபமகா
ப . லி . . கி . ன . மு . க் . சட .
ரீகாரீகமகாமாகரிஸாரீகாரிகமகமாகமமபா .
யு . . . . க்த . . ம . . ஞு .
பமகரி . மகரிஸஸநிபாதஸா .
சு . . . கொஓ . . . ண்டி .
ஸாநிதபாதாநிதபாதப . மகமா . கமபதபா .
சக்திகல . . மஹா . . தேவுடு .
பாதஸநீதா . தநிதபதப . மாகாபாதா .
நீ . . வனி . . ஸந்தோ . . ஷமுதோ .
ஸாரிஸாரிஸநி . . நிபாதாஸா .
ன . . ஞும் . . டி .
பதஸாபதஸரிகாரிகமகரிமகரி .
ஸத்தாசித்துட . . . .
ஸாஸாரிகரிஸாரிஸநிதா . பதநிதபாதபமகமபா
கு . . த்யா . க . ராஜ . . ஞு . த
தாஸரிகரிஸரிகரிகரிஸ . . ஸாரிஸநிதாபாதா .
த . ஸத்யஸத் . . து . டௌ கொண்டி .
மகபாதஸதநீநிததபமா . கமபதஸநிநித
நிஇல . . . லோ . . . (ஏ)

# நீ எதற்கென்று வருந்துவாய்?

'சக்திதாஸன்'

**கா**லை மணி பத்தரை இருக்கும். 'மதராஸ் மெயில்' ஹௌரா ஸ்டேஷனை விட்டுப்புறப்பட இன்னும் பதினைந்து நிமிஷங்களே இருக்கின்றன. ஒரு யுவதி-ஒரு வயதான மாஜி சுமங்கலி-ஒரு வாலிபன் ஆகியோர் வண்டிக்குள் உட்கார்ந்திருக்கின்றனர். வெளியே ஒரு யுவன் நின்று கொண்டிருக்கிறான். அவன் யார்? அவனே சுதாமன். அவ்வாலிபன் கண்ணீர் வடிக்கின்றான். ஏன்? காரணமென்ன? தன் காதலியைப் பிரியவேண்டுமே என்ற துக்கந்தான். தன் காதலனைப்பிரிய வேண்டுமே யென்று அவளும் கண்ணீர் வடிக்கிறாள். ஒருவரை யொருவர் பிரிய மனமில்லாது பிரிகின்றனர்.

"அத்தான்!......கலியாணத்தன்று! கட்...டா....... யம் வந்து விடுங்கள்?" என்று தழுதழுத்த குரலில் கூறினாள் சரஸ்வதி. இது அந்த யுவதியின் பெயர். துக்கம் தாங்க முடியவில்லை. தொண்டையை அடைக்கிறது. அப்படியே சுதாமனின் தோள் மீது சாய்ந்தாள் சரஸ்வதி. காதலரைப் பிரிக்கும் துரோகிபோல் புகையை விட்டுக்கொண்டு புறப்பட்டது 'மதராஸ் மெயில்.' "அப்பா! கல்யாணத்தன்று.......கட்டாயம்......வந்துடு. உடம்பு ஜாக்......கிரதை." என்று அழுது கொண்டே கூறினாள் நாகலக்ஷ்மி என்ற அந்த மாஜி சுமங்கலி. இவள்தான் சுதாமனின் தாயார்.

"அண்ணா! போய் வருகிறேன்! நீ..." என்றான் கலியாணம் செய்து கொள்ளப் போகும் பாபு. இக்கலை காட்சிகளையும் எண்ணி எண்ணிப் பார்த்தபடியே தன் வீடு சென்று படுத்தான் சுதாமன்.

சுதாமன் தஞ்சை ஜில்லாவில் சித்தமல்லி என்ற கிராமத்தில் பிறந்தவன். கல்கத்தாவில் 'பிரெத்வேய்ட் அண்டு கம்பெனி'யில் நூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் செய்கிறான். சுதாமனுக்கு பாபு என்று ஒரு தம்பி உண்டு. அவனுக்குத் தஞ்சாவூரில் கல்யாணம். அதற்காகவே அன்று எல்லாரும் மதராஸ் மெயிலில் சென்றனர்.

சுதாமனுக்கு 'டை பாயிட்' சுரம். 'இரண்டு நாள் கழித்துப்போகலாம்' என்று டாக்டர் சொல்லிவிட்டார். கலியாண தினமோ குறிப்பிட்டாய் விட்டது. அதனாலேயே சுதாமனின் மனைவி, தாய், தம்பி, முதலியோர் முன்பே கிளம்பி விட்டனர். சுதாமன் மட்டும் இரண்டு நாட் கழித்து வருவதாகச் சொல்லிவிட்டான்.

சுரத்தோடு சுதாமன் மூட்டை முடிச்சுகளை யெல்லாம் எத்துக்கொண்டு டிராமுக்கு ஓடினான். அதனால் அவன் சுரம் திருப்பிக்கொண்டது. தன்னந் தனியாக வாடுகிறான். 'மதராஸ் மெயிலில்' பிரயாணம் செய்வோர்க்கு இது எப்படித் தெரியும்?

தஞ்சாவூரில் கல்யாணம் ஆகிறது. தாலிகட்டியாய் விட்டது. அப்பொழுதும் சுதாமன் வரவில்லை. வரவில்லையே என்று எல்லாரும் துடிக்கின்றனர்.



"தாலி கட்டியாகி விட்டதே! நேரமாகி விட்டதே! இலை போடவில்லையே" யென்று துரிதப்படுத்துகிறார்கள் புரோகிதர்கள்.

கலியாண தினத்தன்று மாலை ஐந்தரை அல்லது ஆறுமணியிருக்கும். நலங்கு ஊஞ்சல் முதலியன நடந்து கொண்டிருக்கின்றன. ஸ்ரீமதி சரஸ்வதி அதாவது மிஸஸ். சுதாமனே இதில் மிக ஊக்கமாக வேலை செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கிறாள். திடீரென்று அவள் முகம் மாறுகிறது. முகத்தில் ஏதோ கவலைக்குறி காணப்படுகிறது.

மனம் சஞ்சலப்படுகிறது. நெஞ்சு 'படக் படக்' என்று அடித்துக் கொள்கிறது. அவளது வலது புருவமும், தோளும் துடிக்கின்றன. கலகல வென்று கண்ணீர் விடுகிறாள். மெதுவாக அதை மறைக்க முயல்கிறாள். ஒரு விதச் சிரிப்புச் சிரிக்கிறாள். ஆயினும் அகத்தழகு முகத்தில் தெரிகிறது. அப்பொழுது தந்தியொன்று வந்தது: அதில்,

'சுதாமன் இறந்தார் இன்று மூன்று நாள்' என்று கண்டிருந்தது

இதைக் கேட்டதும் நாக சர்ப்பம் போலச் சீறினாள் சரஸ்வதி. மறு நிமிஷம் மூர்ச்சை யானாள். அந்த வீடு ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. மண வீடு இழவு வீடாயிற்று. எங்கு பார்த்தாலும் ஒரே அழுகை. அந்தக் காட்சியை நீங்களே நினைத்துப் பாருங்கள்.

'கணவனைக் காண்போம்' என்ற எண்ணத்துடன் வந்த சரஸ்வதியின் மனம் எப்படி யிருக்கும்? கலியாணஞ் செய்து கொண்டு திரும்பி அந்த ஊருக்குச் செல்லும் பொழுது தம்பியின் மனம் எப்படி யிருக்கும்? தான் சகோதரனுடன் சென்ற ஆபீஸுக்குள் நுழையும்பொழுது மனம் சகிக்குமா? பிள்ளையைக் காணாமல் பறி கொடுத்த தாய் எப்படிச் சகிப்பாள்?

கிளி என்றால் கிளி போல இருந்த சரஸ்வதி—பதினெட்டு வயது நிரம்பாத சரஸ்வதி—உலகம் அறியாத சரஸ்வதி—இன்பம் அறியாத சரஸ்வதி—வாழ்வின் இன்பத்தை நுகராத சரஸ்வதி—இன்று விதவை யானாள். வைதவ்யப்பேய் அவளைப் பிடித்துக் கொண்டது. மூடக்கட்டுகளுக்கு அவள் இரையானாள். சமூகத்தின் பெயரால் தன் அழகைத் தியாகம் செய்தாள். எல்லோரும் அவளை மொட்டையடித்து முக்காடிட்டு மூலையில் ஓர் அடுக்குத் தோசை முன் உட்கார்த்தி வைத்து விட்டனர். அந்தோ பாவம்! ஏ! சரஸ்வதி! இளம் பெண்ணே! நீ! இறந்து போன உன் காதலனை நினைத்துத் துக்கிப்பாயா? சமூகக்கட்டுப் பாட்டை நினைத்துத் துக்கிப்பாயா? உன் அழகெல்லாம் சமூகத்துக்குப் பலியிட்டதை நினைத்துத் துக்கிப்பாயா? உன்னை ஊரார் இகழ்வதற்கு துக்கிப்பாயா? எதற்கென்று நீ வருந்துவாய்?

இவை யெல்லாம் ஐந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த கதைகள். இப்பொழுது சரஸ்வதியின் தங்கைக்குக் கல்யாணம் சிறப்பாக நடக்கிறது. கலியாணத்தில் எல்லோருடனும் கலந்து காரியங்களைச் செய்ய சரஸ்வதிக்கு ஆசை. ஆனால் ஒருவரும் அவளை வெளியே வர விடுவதில்லை. எதிரே வந்தால் 'அபசகுனம்' என்று வைவர். சரஸ்வதிக்கு இப்பொழுது

வயது இருபத்திரண்டு. இப்பொழுது தான் அவளுக்கு உலகம் தெரிகிறது.

“நான் என்ன பாவம் செய்தேன்? என்னை ஏன் ‘முண்டைச்சி, கம்மனாட்டி’ என்று அழைக்கவேண்டும்? நான் ஏன் புனர் விவாகம் செய்து கொள்ளக்கூடாது? ஆண்கள் தான் நூறு வயது வரை பத்துமனைவிகளை விவாகம் செய்து கொண்டு பிரஜா விருத்தி செய்ய வேண்டுமோ! இதென்ன நியாயம்?

‘நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே
க்லீபேஷு பதிதே பதௌ!
பஞ்சத்ஸு ஆபத்ஸு
நாரீஷாம் அந்யோவிதீயதே!!’

என்று பராசரர் கூறுவதாகச் சூரி அய்யர் சொல்கிறாரே. பெண்களுக்கு ஐந்து வித ஆபத்துக்கள் வந்த காலத்தில் அவர்கள் பிற புருஷனை மணக்கலாம் என்றிருக்கிறதாமே! மல்லிகைப் பூவைக் கண்டால் சூடிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குங்குமத்தைக்கண்டால் இட்டுக்கொள்ள விரும்புகிறேன். பாக்கு வெற்றிலையைக் கண்டால் போட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இவையெல்லாம் செய்யக் கூடாதாம்.

ஐயோ! ஜகதீசா! என்னைப்போன்றவர்கள் எத்தனை பேர் இந்த மாதிரி வருந்துகிறார்களோ! இவர்களுக்கு விடியுங் காலம் உண்டா?” என்று சிந்தனையிலாழ்ந்தாள் சரஸ்வதி. ஒரு பெரிய அறையில் ஒரு மூலையில் படுத்திருக்கிறாள். ஆறு வருஷங்களுக்கு முன் தான் கல்யாணம் செய்து கொண்டபோது இருந்த சந்தோஷமும், பிறகு தன் மைத்துனன் கல்யாணத்துக்கு வரும்பொழுது ஹௌரா ஸ்டேஷனில் நடந்த சம்பவமும், கலியாணகாலத்தில் தான் குதூகலமாயிருந்தபொழுது தந்தி வந்ததும், பிறகு தனது நாடகத்தில் மாறுதல்—அதாவது அழகிய பெண் தெய்வம் போல் காட்சியளித்த அவள் வெள்ளைப் புடவை யுடுத்து மயிரிழந்த கோலமும், சினிமாப்படம் போல் அவள் மனக் கண் முன் நின்றன. சரஸ்வதி அசையவில்லை. அவள் உடலில் ஸ்மரணையில்லை. அவள் உடல் மெலிந்து எலும்புந்தோலுமாயிருந்தது. அவள் கண் மூடியிருந்தது. சமூகத்தின் பெயரால் வாழ் நாளை—யௌவனத்தை வீணாக்கிய யுவதி இனி இவ்வுலகுக்குத் திரும்பி வரமாட்டாள். வந்தாலும் மூடக்கட்டுள்ள இந்துசமூகத்தில் பிறக்கமாட்டாள். ஆம்! அதற்குச் சந்தேகமென்ன?

அவள் மாண்டதற்குக் காரணம் என்ன? இந்து சமூகம் தான். சரஸ்வதியின் தங்கை. அவள் தாலி கட்டிக்கொள்வதைப் பார்க்க ஆசையாயிராதா? அப்படிப் பார்க்க வந்த சரஸ்வதியை ‘முண்டை, அபசகுனம்!’ என்று கூறினால்—திட்டினால்—அந்த வார்த்தையை உணர்ச்சியுள்ள யாரால்தான் பொறுக்க முடியும். அந்தச் சொல் ரம்பம் போல் சரஸ்வதியின் மனத்தை அறுத்தது. அதனாலேயே அவள் இறந்தாள்.



பெய்ஸ்பூர் காங்கிரஸ் ஸ்திரீ தொண்டர் படை.



பெய்ஸ்பூர் காங்கிரஸ் ஸ்திரீ தொண்டர்கள் அணிவகுத்துச் செல்லும் காட்சி.



மாதவிக் கொடி

# மாதவிக் கொடி

## "புஷ்பலீலா"

மாதவிக் கொடி பேர்பெற்றது. சிறந்த மணம் மிக்க மலரினத்தைச் சேர்ந்தது. சிலப்பதிகாரம் முதலிய பழந் தமிழ் நூல்களும் மாதவிக் கொடியை வர்ணித்திருக்கின்றன. ஸ்ரீ ஆண்டாளும் திருப்பாவையில் 'மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்' என்று மாதவிக் கொடியைச் சிறப்பித்துள்ளார். வைத்தியர்களும் ஆயுர் வேதத்தில் இதன் உபயோகங்களை வருணித்திருக்கின்றனர். ஆனால் இக்காலத்திய வைத்தியர்களும் மற்றவர்களும் இம்மாதவியைப்பற்றி அவ்வளவாக ஒன்றுமே தெரியாதவர்களாயிருக்கின்றனர். சிலர் தங்கள் பூந்தோட்டங்களில் மாதவிக் கொடியினால் அழகான கொடி வீடுகளை அமைத்து ஆனந்த மடைகின்றனர். தமிழ் அகப்பொருள் நூல்களில் மாதவிப் பந்தல் காதலர்களின் மறையிடம். உஷ்ண தேசங்களில் கூட இம்மாதவிக் கொடி அதிகமாக வளரும். பெங்களூரிலும், அதை அடுத்த இடங்களிலும் இதை விஸ்தாரமாகப் பயிரிடுகின்றனர். ஜாதி, மல்லிகை இவற்றைப்போல் இது அவ்வளவாகப் புஷ்பிக்காது. ஆதலால் பெண்களுக்கு இம்மலர்கள் சுலபமாகக் கிடைப்பதில்லை. இம்மலர்களால் வாசனைத் திரவியங்களைச் செய்வோரும் அருமை.

மாதவி உறுதியான கொடியினத்தைச் சேர்ந்தது. இது மரங்கள் மீதும், தரை மீதும் விசாலமாகப் படரும். இதன் இலைகள் மரச் சம்பங்கி இலைகளைப் போல் இருக்கும். பூக்கள் எள் மலர்களை ஒத்திருக்கும். மாதவி வசந்த காலத்தில் மலரும். அதனால்தான் இதற்கு வாசந்தீ என்றும் ஓர் பெயர் உண்டு. வசந்த காலத்தில் மலரும் மல்லிகைப் பூக்களை மாதவீமலர் என்றழைப்பதுண்டு. இதன் வாசனையால் வண்டுகள் அதிகமாக மொய்க்கும். அதனால்தான் இதற்கு பிரமரோத்சவா, பிருங்கப்பிரியா என்னும் பெயர்கள் உண்டாயினபோலும். மாதவிமலரை மக்கள் அதிகம் விரும்புவார்கள். அதனால் தான் அநேக பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகட்கு மாதவி என்று பெயர் வைக்கிறார்கள். மலையாள தேசத்தில் இப்பெயருடைய பெண்கள் அநேகர் இருக்கின்றனர். கோவிலனது காமக்கிழத்தியின் பெயர் மாதவி என்பதும் குறிப்பிடத்தக்கது. இம்மாதவிக் கொடிக்கு சமஸ்கிருதத்தில் மாதவிகா, மாதவீலதா, அதிமுக்தா, புண்டக, சந்திரவல்லீ, சுகந்த, பத்ரலதா, பூமிமண்டபூஷணா, வாசந்ததூதா, காமூ, புஷ்பேந்த்ரம் என்னும் பல பெயர்கள் உண்டு. மலையாளத்தில் இதற்கு சீதம்பூ என்றும், கன்னடத்தில் அதிரி கண்டி என்றும், மஹாராஷ்டிரத்தில் மதுமாதவீ என்றும் மாதவியை அழைப்பார்கள்.

### இதன் குணங்கள்

மாதவி காரமாகவும், கசப்பாகவும் இருக்கும். கஷாயசத்து இறக்குவதற்குச் சிறந்தது.

நல்ல வாசனையைத் தரும். போதையை உண்டு பண்ணும் தன்மையுள்ளது.

இதை உபயோகித்தால் பித்தம், காசம், புண், நீர் வேட்கை, வீக்கம் முதலியன நீங்கும். மாதவியின் மணம் சீதளமானது. இது இருதயத்திற்கு வலிமையை உண்டு பண்ணும். கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். எல்லாருடைய மனத்தையும் தன் வசப்படுத்தும் தன்மை யுடையது மாதவி. ஜாதி மல்லியும் இப்படிப்பட்டதே.

மாதவியில் மதுரமும், சீதளமும் மிதமாக இருக்கும். முக்குற்றங்களையும் போக்கும். மாதவியின் வேர்களை உபயோகித்தால் பெண்களுடைய சரீர அழகு அதிகரிக்கும்.

[இந்தக் குணங்கள் பண்டை நூற்களில் கண்டவை.]

# அனந்தசயனம்

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

தமிழ் நாட்டின்கண் விளங்கா நின்ற அநேக திவ்விய புண்ய க்ஷேத்திரங்களுள் திருவண்ரம், திருவனந்தபுரம் எனப்படும் அனந்தசயனமும் ஒன்றாகும். இந்த ஊரில் உள்ள ஸ்ரீ பத்மநாபஸ்வாமி தேவலாயம் இந்நகருக்குத் திலகம் போல விருக்கிறது. அதிலுள்ள பெரிய ஸ்ரீபத்மநாபஸ்வாமி விக்ரஹத்தைப் பார்க்க மூன்று கதவுகள் உண்டு. தலைப்பக்கம் பார்க்க ஒரு கதவும், உடலைப்பார்க்க ஒரு கதவும், பாதங்களைப் பார்க்க ஒரு கதவும் உளவென்றால் அவ்விக்ரஹத்தின் பரிமாணத்தை ஊகித்துக்கொள்ளலாம். இக்கடவுளைத் தரிசித்தவர்கள் மிகவும் புண்யம் செய்தவர்கள் என்று கூறுவது மிகையாகாது. ஆதிசேஷனைத் தன் படுக்கையாகக் கொண்டு (அனந்தன்மேல் சயனித்திருப்பதால் அனந்தசயனம்) வத்சத்ஸ்தலத்தில் ஸ்ரீலக்ஷ்மீதேவியை யுடையவராய் தனது நாபிக்கமலத்தில் பத்மம் என்றழைக்கப்படும் தாமரையையுடையவராய் (பத்மநாபரென்று பெயரடைந்து) விளங்குகிறார். அவருக்கு அருகில் அநேக தேவதைகளும், நாரதர், தும்புரு போன்ற ரிஷிகளும் அவருக்கு வேலை செய்யக் காத்திருக்கிறார்கள். அவ்விடத்தைப் பார்த்தால் வேதங்கள் சாஸ்திரங்கள் முதலியவை கூறுவதுபோல் அந்தக் கடவுள் ஆதிசேஷன்மேல் படுத்திருப்பது வைகுண்டமோ என்று கூறும் படி யிருக்கிறது. இத்தேவாலயத்தினருகில் சுற்றியிருக்கும் மத்ஸ்ய, வராஹ, பாத, சங்க, சக்ர, பத்மனாப, தர்ம, அதர்ம மென்னும், எட்டு தீர்த்தங்களிலும் ஆதியனந்தத்திலிருக்கும் கங்கா தீர்த்தம், தாம்பிரபரணிகளில் ஸ்நானம் செய்து கடவுளை தியானிப்பாராகில் அவர்களுக்கு இகலோகத்தில் சர்வ சம்பத்தும், சுகமும் அடைவதுடன் பரலோகத்தில் முக்தியையும் அடைவார்கள் என்பதுண்மை.

திவாகரர் என்ற துளுவ பிராமணத் துறவி ஒருவர் இருந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் கற்று இடைவிடாது பகவானையே தியானித்து வந்தார். இவரது பக்தியைக்கண்ட கடவுள், பக்தருக்கு அன்பரானதாலும், பக்தரைக் கடைசி வரையில் பரீக்ஷித்து நிஜபக்தியுடையவர்களை எப்பொழுதும் தன் அருகிலேயே ஒரு இடத்தைக் கொடுக்கும் குணமுள்ளவராதலாலும், இவரைப் பரீக்ஷிக்கவும் தன் சுயரூபத்தைக் காட்டவும் நினைத்தார். ஆகையால் தான் ஒரு சிறுவனைப்போல ரூபங்கொண்டு அந்த ரிஷியின் முன் நிற்க அவர் கடவுள் என்று தெரிந்தும் குழந்தையைப் போல கூப்பிட்டார்.

அப்பொழுது கடவுளாகிய அச்சிறுவன் மிகவும் இனியகுரலுடன் "ஸ்வாமீ! நீர் என்னை மிகவும் அன்பாகக் கூப்பிடுவதால் நான் உமதாஸ்ரமத்திற்கு வருகிறேன். ஆனால் நீர் எப்பொழுது என்மேல் கோபிக்கிறீரோ அப்பொழுதே நான் அவ்விடம் விட்டு அகல்வேன்" என்றார். சரியென்று





ஸ்ரீ பத்மநாபஸ்வாமி

அந்த ரிஷியும் ஒப்புக்கொண்டார். இப்படி யிருக்க ஒரு நாள் கடவுள் தன் சுயரூபத்தை திவாகரருக்குக் காட்ட எண்ணி அவருக்கு கோபம் வரும்படி செய்தார். அவர் பூஜை செய்து கொண்டிருக்கும் பொழுது அவர் அருகில் வைத்திருந்த சாலிக்ராமத்தை வாயில் போட்டுக்கொண்டார். அப்பொழுது மகரிஷிக்குக் கோபம் வந்தது. உடனே சிறுவனை கடவுள் 'நீர் என்மீது கோபித்துக் கொண்டதால் நான் வேறிடம் செல்லுகிறேன்' என்று கூறிப்புறப்பட்டார். திவாகர ரிஷியும் கோபம் சாந்தி செய்துக் கொண்டு சிறுவனானவன் கடவுளைத் தவிர வேறல்ல வென்று தெரிந்து கொண்டிருந்ததால் அச்சிறுவனைப் பின் தொடர்ந்தார். அநேக நாட்களுக்குப் பிறகு ஊணுறக்க மின்றி அலைந்த பிறகு கடவுள் மிகவும் பரிதாபப்பட்டு தன் சுயரூபத்தை இங்கு காட்டி அவரை ஒரு வரம் கேட்கும்படி சொல்ல அந்தரிஷி மிகவும் பரிதபித்வராய் 'சுவாமி! என்னை மன்னிக் வேண்டும். நான் மிகவும் பாபமான கார யம் செய்துவிட்டேன்" என, கடவுள் "நான் உன்னை மன்னித்தேன். ஒரு வரப் கேள்" என, மிகவும் பிரம்மாண்டமான உருவத்துடன் கடவுள் படுத்திருந்ததா "சுவாமி நீர் அந்த ரூபத்துடனிருப்பதா சாதாரணஜனங்களுக்கு பூஜை செய்வது கஷ்டமாதலால் இதோ என் கையிலிரு

குத் தடியால் மூன்று முறையளக்கிறேன். அந்தப் பரிமாணத்தில் நான் வசித்தால் எல்லோரும் பூஜை செய்வதற்கு எளிதா யிருக்கும்" என்றார். கடவுள் அவ்வாறே ஒப்புக்கொண்டார். திவாகரர் அளந்த மூன்று தடியின் பரிமாணமே பகவானது தலை, நாபி, பாதங்களாய் விளங்குகின்றன. அவர் வந்து தங்கிய இடமே ஸ்ரீமந் நாராயணன் நரசிம்மாவதார மெடுத்ததாகவும் நித்திய நைவேத்தியங்கள் நரசிம்மருக்கு நடந்த பிறகு தனக்கு நடக்கவேண்டு மென்று திவாகரருக்குக் கூறினார்.

அந்நாள் முதல் இந்நாள் வரை அந்நக ரானது நாளுக்குநாள் செழித்து விளங்குகின்றது. இந்நகருக்கு அருகில் ஜனார்த் தனம் என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. இந்நகருக்கு மூன்று மைல்தூரத்தில் ஆதி யனந்த மிருக்கிறது. இங்கும் ஒரு பெரிய தொரு கோயில் இருக்கிறது. கன்னியா குமாரி என்ற திவ்யக்ஷேத்திரம் திருவனந்தபுரத்திற்கு சிறிது தூரத்தில் உளது. இங்குதான் மூன்று பெருங்கடல்கள் சேருமிடம்.

பாத்திரபத சுக்லசதுர்த்தசி தினம் யார் மிகவும் பயபக்தியுடன் இவரைப் பூஜித்து இவருக்கு அனந்த நோன் பு எனப்படும் கயிற்றை பூஜை செய்து அக் கயிற்றை தாமும் கட்டிக்கொள்ளுகிறார் களோ அவர்களுக்கு ஐசுவரியமும் சுக மும் உண்டாகும்.

இக்கோயில் சில நாட்களுக்குமுன் தான் ஹரி ஜனங்களுக்குத் திறக்கப்பட்டது. அவர்களும் சம உரிமையுடன் கோயிலில் போய் பகவானை தரிசிக்கலாம். மிகவும் புராதனமான இக்கோயில்களில் ஹரி ஜனங்களைப் பிரவேசிக்கும்படி செய்த திருவாங்கூர் மன்னருக்கும், கனம் திவான் சர். ஸி. பி. ராமசாமி அய்யருக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அத் தேசத்து மன்னரையும் மற்றுமுள் ளோரையும் அனந்தர் அனந்தகாலமும் காப்பாற்றும்படி நாம் வேண்டுகின்றோம். நம் தேசம் மிகவும் முன்னேற்ற மடைந்து வருகிற தென்பதற்கு வேறு அத்தாட்சி யும் வேண்டுமோ?





குகைக்கோயில்—பெங்களூர்.



பெங்களூரிலுள்ள லால்பாக் கண்ணாடி மாளிகை.



“ கிரஹலக்ஷ்மி” கங்கண பரிசளிப்பு விழாவின்போது கூடியிருந்த மாதர்கள்.

# மொல்ல ஜயந்தி

ஸ்திரீகளுள் கல்வி கேள்விகளில் தலை சிறந்து விளங்கியவர்கள் பலர் நம் நாட்டில் ஆதிகாலத்திலும் இருந்திருக்கின்றனர். சில நூற்றாண்டுகளுக்கு முன்னரும் இருந்திருக்கிறார்கள். இன்றும் அநேகரிருக்கிறார்கள். கலைத் தலைவியே சரஸ்வதி தேவியாகையால் ஸ்திரீ ரத்னங்கள் கல்வியுலகில் பிரகாசிப்பது கண்டு நாம் ஆச்சர்யம் கொள்ள வேண்டியதில்லை. அவ்வித நாரீமணிகள் இன்னும் அதிகமாக இல்லையே என்று தான் ஏங்க வேண்டும்.

ஆந்திரதேசத்திலே 16ம் நூற்றாண்டில் ஓர் ஜோதி ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. அதுதான் ஸ்ரீமதி மொல்லா. அவர் அக்காலத்தில் கல்வியில் தன்னிகரில்லையென விளங்கி வந்த ஸ்திரீ சிரோன்மணியாவர். அவர் இயற்றிய காவியங்களும், கட்டுரைகளும், இதர நூல்களும் ஆந்திரர்களால் இன்றும் பொன்னே போல் போற்றப் பட்டு வருகின்றன. ஆந்திர மேதாவிகளுள் தலை சிறந்தவர்களுள் ஸ்ரீமதி மொல்லாவும் ஒருவர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்னாரின் பிறந்தினக் கொண்டாட்டம் சில வருடங்களாக நெல்லூரில் கொண்டாடப்பட்டுவருகிறது. அவ்விழாவின் போது “ கிரஹலக்ஷ்மி” கங்கணமும் சிறந்த ஸ்திரீ மேதாவிக்கு சென்ற மூன்று ஆண்டுகளாக டாக்டர் கே. என். கேஸரி அவர்களால் அளிக்கப்பட்டு வருகிறது. “ கிரஹலக்ஷ்மி”க்கு கட்டுரைகளை எழுதியும், இன்னும் இதர வழிகளிலும் தன் கல்வித் திறமையை ஸ்தாபித்துள்ள ஒரு மாது சிரோன்மணிக்கு ஒவ்வொரு வருடமும் 116 ரூபாய் மதிப்புள்ள “ கிரஹலக்ஷ்மி” கங்கணம் வழங்கப்படுகிறது.

இதன் நோக்கம் ஸ்திரீகளிடையில் கல்வி பரவுதல் வேண்டுமென்பது மட்டுமன்று. மாதர்கள் கவி, காவியம், கதைகள், நாடகம் முதலியன எழுத வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் திறமையை எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டு மென்பதே. எதற்கும் உற்சாகம் வேண்டும். பிறர் ஊக்கமும் உற்சாகமும் அளித்தால் தான் சிறந்த புத்திமான்களும் தங்கள் வேலையை சிரத்தையுடனும், ஆர்வத்துடனும் செய்ய முடியும். அவ்வித உற்சாகத்தை தகுந்த ஸ்தரீ எழுத்தாளர்களுக்கு அளிக்க வேண்டு மென்பதே “ கிரஹலக்ஷ்மி” கங்கணம் அளிக்கும் திரு. கேசரி அவர்களின் நோக்கம். ஸ்திரீகள் தங்களது கல்வித் திறமையை பல வழிகளிலும் வெளிப் படுத்த வேண்டும். அவர்களது புகழும், பேரும் குடத்துக்குள் ஏற்றிய விளக்குப் போல் மங்கிப் போகாமல், குன்றின் மேலிட்ட விளக்குப் போல் ஜ்வலித்து உலகெங்கும் பரவ வேண்டும் என்பதே அவர் அவா. இதேமாதிரி தமிழ் மங்கையரின் கல்வி மாட்சியையும் ஸ்தாபித்து

முன்னுக்குக் கொண்டுவர வேண்டி வருடா வருடம் தமிழில் சிறந்து விளங்கும் ஸ்திரீ எழுத்தாளருக்கு 116 ரூபாய் பெறுமானமுள்ள கங்கணம் அளிக்க டாக்டர் கேசரி முன் வந்துள்ளார். இந்த அரிய சேவையை தமிழர்கள் உணர்ந்து அதைத் தங்கள் முன்னேற்றத்துக்காக பயன்படுத்திக் கொள்ளுமாறு நாம் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்த மொல்ல ஜயந்தியும், அதனையொட்டி "கிரஹலக்ஷ்மி" கங்கணப் பரிசளிப்பு விழாவும் கடந்த மூன்று வருடங்களாக நடந்து வருகிறது.

முதன் முதலாக 1934ம் வருஷம் ஆந்திர மாது கே. வரலக்ஷ்மி அம்மாள் இந்த கௌரவத்தைப் பெற்றார்கள். இவர்கள் தெலுங்கில் அநேக நூல்கள் இயற்றிப் பிரசுரம் செய்துள்ளார்கள். இவர்களது திறமையையும் பெருமையையும் ஆந்திர தேசம் புகழ்ந்து கொண்டாடுகிறது. இப்பொழுது இருந்துவரும் ஆந்திர நூல் வல்லார்களுள் ஸ்ரீமதி வரலக்ஷ்மியும் ஒருவர்.

1935ம் வருஷம் "கிரஹலக்ஷ்மி" கங்கணம் பெரும் பாக்கியம் பெற்றவர் ஸ்ரீமதி சிதாம்பாள். இவர்களும் தெலுங்கில், அநேக காவியங்கள், நாடகங்கள், நாவல்கள் முதலியன எழுதி யிருக்கிறார்கள். அவைகளும் மேன்மையானவை.

1936ம் வருஷம் டிசம்பர் மாதம் 27உ மூன்றாவது விழா நடை பெற்றது. இந்த வருஷம் "கிரஹலக்ஷ்மி" கங்கணம் பெற்றுக் கொண்டவர் ஸ்ரீமதி காஞ்சனபல்லி கனகம்மாள். இவர்கள் சிறந்த படிப்பாளி. மேரிராணி கலாசாலையில் ஆசிரியராகவும் வேலைபார்த்து வருகிறார். இப்பொழுது இருந்துவரும் ஆந்திர ஸ்திரீ எழுத்தாளர்களுள் இவர் சிறந்தவர் என்று சொல்லலாம். இவர்கள் அநேக நூல்கள் எழுதிப் பிரசுரம் செய்துள்ளார்கள். தான் பெரிய மேதாவியென்ற கர்வம் சற்றுமில்லாத உத்தமியாவார்கள் ஸ்ரீமதி கனகம்மாள். தானே, சிறந்த ஆந்திர கவிகள், வல்லவர்களுக்கு 116 ரூபாய் பெறுமான அநேக தோடாக்கள் முதலிய பரிசுகள் அளித்து அவர்களின் பெருமையைக்கண்டு களிப்படைவார்கள். இவ்வாறு ஒரு தலை சிறந்த வித்வான் மற்ற இதர வித்வான்களை மதித்து பூஜிப்பது வெகுதுர்லபம். என்வே இவரது எளிமையான தூய குணத்தைக்கண்டு இவ்வருஷ கங்கணம் ரூபாய் 500 ரொக்கமாக டாக்டர் கேசரியால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வருட விழாவுக்கு ஸ்ரீமதி பி. சேஷம்மாள் தலைமை வகித்தார். இவர் "ஹிந்து சுந்தரி" என்ற தெலுங்கு பத்திரிகைக்குக் கடந்த 33 வருஷங்களாய் ஆசிரியையாக இருந்து வருகிறார்கள். அவர்களது தலைமைப் பிரசங்கம் மிகவும் உருக்கமானதாகவும், ஆழ்ந்த கருத்துகளும், யோசனைகளும் செறிந்து விளங்கியது.

பிறகு ஆந்திரக் கவிச் சக்கிரவர்த்தி ஸ்ரீபாத கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். திரு. கேசரி அவர்கள் தான் "கிரஹலக்ஷ்மி" கங்கணம் வழங்குவதின் நோக்கத்தைப்பற்றித் தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக் கூறினார்.

திரு. ஸி. ராமச்சந்திரய்யா "கிரஹலக்ஷ்மி" பத்திரிகையின் நோக்கங்களைப் பற்றியும், அது எவ்வாறு ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்காக பாடுப்பட்டு வருகின்றது என்பது பற்றியும் ஒரு விரிவான பிரசங்கம் செய்தார். வேறு சில பிரமுகர்களும் பேசினபின் கூட்டம் வந்தனோப சாரத்துடன் இனிது முடிவடைந்தது.

இவ்விழா வருஷா வருஷம் நடைபெறும்.



# தரித்திரதேவதைக்குப் பலி

## பண்டிதை ரா. ரங்கநாயகி அம்மாள்

"பாக்கியம்! பாக்கியம்!!"

நடுப்பகல். சூரியனின் வெப்பமான கிரணங்கள் உலகத்தை வாட்டிக் கொண்டிருந்தன. உலகத்தில் நடைபெறும் தீமைகளைக் கண்டு சகியாமல் சூரியபகவான் உலகத்தை எரித்துச் சாம்பலாக்கி விடலாம் என்று எண்ணியது போலிருந்தது அன்றைய வெய்யிலின் கொடுமை.

குடிசையின் ஒரு மூலையிலிருந்து நோயாளியின் ஈனக்குரல் கேட்டது. உடனே வெளியிலிருந்த பாக்கியம் தன் காதலனிடம் சென்றாள். நோயின் வேதனையைச் சகிக்காமல் அவ்விளைஞன் தனது இரண்டு கைகளையும் மேலே தூக்கினான். பாக்கியம் தன் தலையைக் குனிந்து காட்டினாள். தன் மணாளன் படும் அவஸ்தையைக் கண்டு சகிக்காது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"பாக்கியம்! என்னால் இந்த வேதனை சகிக்க முடியவில்லை. கடவுள் எப்பொழுது இக்கொடிய துன்பத்தினின்றும் என்னை விடுதலை செய்வாரோ தெரியவில்லையே" என்று அதிகக் கஷ்டத்துடன் சொன்னான். பாக்கியம் தன் கணவனின் கைகளை எடுத்து முத்தமிட்டு, "தாங்கள் ஏன் இவ்வளவு அதைரியப் படுகிறீர்கள்? தைரியத்தைக் கைவிடாதீர்கள்! ஆ! தெய்வமே! இக்கால உலகப்போக்கு இத்தகையது போலும்! பல வீரர்களும், உதவியற்றவர்களும், திக்கில்லாதவர்களுமான மக்களிடம் கடவுளுக்கும் காருண்யமில்லையே! அப்படியிருக்க மானிடர்களைக் குறை கூற முடியுமா? இவர்களெல்லாம் சுயநல முடையவர்கள். கொடிய மிருகங்களை யொத்தவர்கள்."

கோவிந்தன்: பாக்கியம், அப்படிச் சொல்லாதே! நாம் நம்முடைய வாழ்க்கையில் அநியாயமோ, பாவமோ செய்யவில்லை. ஆனால் நாம் இப்பொழுது அநுபவிப்பதெல்லாம் நம்முடைய நன்மைக்கே!

பாக்கியம்: நியாயமா? இக்காலத்தில் உலகில் நியாயமான தரும வாழ்க்கைக்கு இடமுண்டா? நாம் நமது தரும சிந்தனைகளை விட்டு விலகி அருவருக்கத்தக்க துன்பங்களிலிருந்து வெளியே வர வேண்டும். இன்றேல் நம் இருவருடைய ஆத்மாக்களும் இவ்வநியாயமான கொடுமைகளையெல்லாம் சகித்து அழிய வேண்டியதுதான்.

கோவிந்தன்: பாக்கியம், நம் சுய மதிப்புகளை இழந்து அதர்மத்தின் சகாயத்தினால் நம் ஆத்மாக்களை ரக்ஷிக்கலாம் என்ற ஆசையை விட, இம்மாதிரியான கொடிய துன்பத்தால் இறந்து விடுவதே மேலானது.

பாக்கியம்: அன்பரே! சமூகம் நம் கௌரவத்திற்கு தகுந்த மரியாதை கொடுப்பதில்லை. சுய மதிப்பு என்பது இக்காலத்தில் கேவலம் நம்போன்ற ஏழைகளுக்கு ஏது? இத்துன்பமயமான ஜீவனத்தை இம்மாதிரி இன்னும் எத்தனை நாளைக்கு அநுபவிக்க முடியும்?

பாக்கியத்தின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. நோயாளியாகிய கோவிந்தன் ஒரு பதிலும் சொல்லவில்லை. அதிக விசனத்

துடன் பாக்கியத்தின் அழகிய முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். குடிசை முழுவதும் ஒரே இருள் மயமாயிருந்தது. அத்துன்பமே உருவங்களாகி வீற்றிருந்த அத்தம்பதிகளின் சுவாசங்கள் வெளிப்பட்டு ஆகாயத்தில் கலந்தன.

கோவிந்தன் அம்மௌன நிலைமையை பங்கம் செய்து "அதோ, அந்தச் சிறு பாத்திரத்தை விற்றால் ஒரு ரூபாயாவது கிடைக்கும். எனக்கு மருந்து அவசியமில்லை. அதற்கு அரிசி வாங்கி வந்து கஞ்சியாவது காய்ச்சிக்குடி. இன்னும் எத்தனை நாளைக்குப் பட்டினி இருப்பாய்? நானும் கொஞ்சம் கஞ்சி குடிக்கிறேன். உணவு இன்மையால் உன் முகம் வாடி வதங்கி விட்டது. கண்கள் குழிவிழுந்து விட்டன."

பாக்கியம் பதில் ஒன்றும் சொல்லாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டதால் பேசாமல் இருந்தாள்.

"பாக்கியம்! சமூகம் தரும வாழ்க்கையை ஆதரிக்காவிட்டாலும் சரிதான். நாம் மட்டும் உயிர்போகும் வரை நம்முடைய தருமத்தினின்று தவறி நடக்காமல் இருக்க வேண்டும். நமது பரிசுத்த வாழ்க்கையை நிலைநாட்டுவதற்காக நாம் நமது ஆத்மாக்களை தரித்திர தேவதைக்குப் பலி கொடுப்போமாக. நமக்கு இதைவிட மோக்ஷம் தரத்தக்க செயல் வேறொன்று மில்லை," என்றான்.

பாக்கியம் ஸ்தம்பித்து நின்று விட்டாள். அவளுடைய இருதயம் துடித்துக் கொண்டிருந்தது. அவள் துக்க ஆவேசத்துடன் தன் கணவனின் நெற்றியில் முத்த மிட்டாள். இருவரும் அப்படியே துன்ப சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

.... ....

பாக்கியம் மிராசுதாராகிய சுந்தரேசன் மாளிகையில் ஒரு அறையைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். இடையிடையே அவள் தன்னுடைய கிழிந்த துணியைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய சுருண்ட கூந்தல் வீசிக் கொண்டிருந்த சிறு காற்றில் நெற்றி மீது ஊசலாடிக் கொண்டிருந்தது. அவள் தரித்திர தேவதைக்கு அடிமையாய் விட்டாலும் அவளுடைய அழகு இன்னும் முழுவதும் அழிந்து விடவில்லை. அந்த அழகு அவளுடைய பதிவிரதாத்தன்மைக்கு யமனைப் போல் இருந்து வந்தது. பாக்கியம் துடைப்பத்தைக் கீழே போட்டு விட்டு "ஒரு பாத்திரந்தான் மீதியிருந்தது. அதையும் விற்று விட்டேன். இனி விற்பதற்கு என்ன இருக்கிறது? இந்த துரதிர்ஷ்டசாலியின் அழகுதான் கொஞ்சம் மிச்சமாயிருக்கிறது. அதில் தான் தருமமும், பதிவிரதாத் தன்மையும் இருக்கின்றன. இதையும் விற்க வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டதோ என்னமோ" என்று நினைத்தாள். அவளுடைய சரீரத்தில் மயிர் கூச்செறிந்தது. தன் நாயகன் தருமத்தை நிலைநாட்ட ஆத்மாக்களைத் தரித்திர தேவதைக்குப் பலியிடவேண்டும் என்று கூறிய வார்த்தைகள் தன் காதுகளில் ஒலித்தன. காதலைக்காக்கத் தற்கொலை செய்து கொள்வதா? அவளையறியாமல் ஓர் வகை மந்தஹாசச் சிரிப்பு சிரித்தாள்.

"என் இப்படிச் சோர்ந்து உட்கார்ந்து கொண்டாய்? இன்று இங்கே வருவதற்கு என் இவ்வளவு நேரமாயிற்று" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் பாக்கியம் திரும்பிப் பார்த்தாள். வீட்டு யஜமானனாகிய சுந்தரேசனைப் பார்த்ததும் பயந்து ஒரு பக்கமாக எழுந்து நின்றாள். சுந்தரேசன் பாக்கியத்தைப் பார்த்து "என் நான் கேட்ட கேள்விக்குத் தகுந்தபதில் அளிக்கவில்லை" என்றான்.

பாக்கியம் அவனை ஒரு தடவை வெறுப்பான பார்வையுடன் பார்த்துவிட்டுப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பணக்காரத்தன்மை என்னும் பேய் தன் பதிவிரதா தருமத்தை





யழிக்க வந்திருக்கிறதென்று நினைத்தாள். தன் கற்பைக் கடைத் தெருவில் பேரம் பேசும் ஒரு பொருள் என்று நினைத்து விலை பேசிய அவனை மனதிலேயே வைது கொண்டிருந்தாள். தன் காதலனின் வார்த்தைகள் அவள் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தன. அவளுடைய இருதயத்தில் உயிர் மீது விருப்பம், வெறுப்பு ஆகிய, இரண்டும் சண்டை செய்ய ஆரம்பித்தன. தன்னுடைய கற்பை இழந்தால் இருவருடைய ஆத்மாக்களும் பிழைக்கும் என்று அவள் நினைத்தாள்! கடைசியில் உயிர்மீது உள்ள வெறுப்பே ஜெயமடைந்தது.

அந்தத் தூர்த்தனாகிய சுந்தரேசன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கரன்ஸி நோட்டை எடுத்துப் பாக்கியத்திடம் நீட்டிக் கீழ் வருமாறு சொன்னான். "இதோ இதை வாங்கிக் கொள்! இது நூறு ரூபாய் நோட்டு! வெட்கப்படாதே! இதனால் உன்னுடைய தரித்திரம் நீங்கும்! இது எனக்கு ஒரு துரும்பு மாத்திரம்! உனக்குத் தேவையான பொழுதெல்லாம் கேட்டு வாங்கிக்கொள்."

பாக்கியம் கைகள் மூடிக்கொண்டன. அவள் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. பின்னர் அம்மூடிய கைகளாலேயே அந்த நோட்டை வாங்கிக் கொண்டாள். அவள் வாய் குழறக் குழற "உங்கள் இஷ்டப்படியே இன்று இரவு உங்கள் அறைக்கு வருகிறேன்" என்றாள்.

சுந்தரேசனுக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆனந்த பரவசனாகித் தன் அறையை அடைந்தான்.

.... .... ....

நடு நிசி. குடிசை நிசப்தமாயிருந்தது. ஆகாயம் முழுவதும் மேகங்களால் மூடப்பட்டிருந்தது. சந்திரனும், நக்ஷத்திரங்களும் உலகில் நடக்கும் அக்கிரமங்களைக் காணச்சகியாதவை போல் மேகங்களிடையே மறைந்து விட்டன. அத்தோட்டத்திலிருந்த செடி கொடிகளெல்லாம் நிசப்தமாயிருந்தன. அவையும் எதற்கோ பயந்து கொண்டிருந்தனபோல் விளங்கின. பாக்கியத்திற்கு இன்னும் தூக்கம் வரவில்லை. இடையிடையே நோயாளியின் பெருமூச்சு நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது.

பாக்கியம் மெதுவாக எழுந்தாள். விளக்கு ஏற்றினாள். கட்டில்மீது நோயால் வருந்திக் கொண்டிருந்த தன் நாயகனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது. ஒரு பெரிய மூச்சு விட்டாள். சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றாள். தன் நாயகனின் சப்தங்கள் அவள் காதுகளில் பிரதியொலி தந்தன. கடைசியில் திடமனதுடன் வெளியேறினாள்.

உலகம் முழுவதும் நித்திரா தேவதையின் வசப்பட்டிருந்தது. அந்த இருட்டில் பாக்கியம் நடந்து போய்க்கொண்டிருந்தாள். அருகே இருந்த நாய் ஒன்று ஆள் அரவம் கேட்டு "லொள் லொள்" என்று குரைத்தது. பாக்கியம் போய்க் கொண்டேயிருந்தாள்.

பாக்கியம் அந்த வீட்டின் தோட்டத்திற்குள் அடி யெடுத்து வைத்தாள். கால்கள் அவளை அறியாது தடைப்பட்டன. அந்த வீட்டின் மேல்மாடியின் அறை யொன்றில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவள் உடல் நடுங்கிற்று. அங்கே ஒரு செடியின் கீழ் உட்கார்ந்து கொண்டாள். அவள் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றலாயின. "இன்று வரை என்னுடைய கற்பைக் காப்பாற்றினேன். எல்லாவற்றையும் விற்று விட்டேன். ஆனால் கற்பை விற்க வேண்டிய சமயம் வரவில்லை. கால மாறுபாட்டால் இன்று அது கூடச் சம்பவித்து விட்டது. எனது கற்பையும்—விபசாரத்தையும் விற்றதினால் பெரும் பொருளைக்



159939

கொண்டு நான் காலக்ஷேபம் செய்ய வேண்டி வரும். ஆஹா! எத்தகைய வேலை செய்யப் புகுந்தேன். நாளை முதல் என் காதலனின் முகத்தை எப்படிப் பார்ப்பேன். என் கற்பை விற்று, என்னுடைய உயிரையும், என் காதலன் உயிரையும் காப்பாற்றுவதா?" அவளுடைய காதுகளில் கோவிந்தனின் சப்தங்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன. நோய் வாய்ப்பட்டு, படுக்கையில் இருக்கும் மெலிந்த சரீரம் அவள் கண்களுக்கு முன்னால் நிரிவதைப்போல் இருந்தது. அவளுடைய சரீரம் ஒருதடவை மயிர்க்கூச்செறிந்தது. அவள் தன் கணவன் படுக்கையின் சமீபத்தில் நிற்பது போலிருந்தது. அவன் சொன்ன சில வாக்கியங்கள் நினைவிற்கு வந்தன.

பாக்கியம் கீழ்வருமாறு யோசிக்கலானாள்: "அந்த மூர்க்கன்—இரக்கமற்றவன்—கொடும் பாவியாகிய சுந்தரேசனை ஒழித்து விட்டால் என்ன? சீ! அந்த ஆசையைவிட நாம் தற்கொலை செய்து கொள்வதே மேலானது. ஆனால் நோயாளியாகிய நம் கணவனின் கதி என்னவாகும். ஆ! எத்தகைய கொடிய வாழ்க்கை என்னுடையது."

ஓ! சமூகச் சீர்திருத்தக்காரர்களே! செல்வர்களே! அபாக்கியவதிகளான எத்தனை ஸ்திரீகள் இத்தகைய கொடும்பாவிகளிடம் அகப்பட்டுத் தற்கொலை செய்துகொண்டு இறந்தார்கள் என்பதை நீங்கள் அறியீர்களா? இவற்றைப்பார்க்க உங்களுக்குக் கண்களில்லையா?

.... .... ....

அதிகாலை சூரியோதய நேரம் சுந்தரேசன் கவலையுடன் தன் அறையில் உலவிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் கோபாவேசம் ததும்பிக் கொண்டிருந்தது. கீழ்வருமாறு நினைக்கலானான். "பெண்களை நேசிப்பவன் மகா மூர்க்கன். அவர்களுடைய மனம் சூதுக்கு இருப்பிடம். பிறரை மோசம் செய்வதே அவர்களுடைய சுபாவம். அந்த விஸ்வாச காதகியை............இருக்கட்டும். அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்கிறேன். என்னையே இப்படி மோசம் செய்வதா? இத்துடன் விட்டுவிடுவேனா? அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன். என்னுடைய தோட்டத்தில் வசித்துக் கொண்டு, நானே குடிசையையும் கட்டிக் கொடுத்தேன். கடைசியில் என்னையே பதம்பார்க்க வந்து விட்டார்கள்" என்று கைகளைப் பிசைந்து கொண்டு "அடேய் ராமா" என்று பலமாகக் கூவினான். உடனே "ஐயா!" என்று ஒரு வேலைக்காரன் வந்தான்.

சுந் : இன்று நம் வீட்டு வேலைக்காரி ஏன் வரவில்லை?

ராம : போய்ப்பார்த்து வருகிறேன் சாமி.

சுந் : அவளை இனிமேல் உள்ளே வர விடாதே. அவர்களை அக்குடிசையிலிருந்து வெளி யேற்றிக் குடிசையைத் தீயிட்டுக் கொளுத்திவிடு போ. இதைச் செய்துவிட்டு மறு வேலை பார்.

வேலைக்காரன் உத்தரவைப் பெற்று ஓடிச் சென்றான். "இன்றைக்கு என்னுடைய பெருமையையும் பாக்கியத்திற்குக் காட்டி விடுகிறேன்" என்று குதூகலத்துடன் சென்றான். பாக்கியத்திற்கும் இந்த வேலைக்காரனுக்கும் கொஞ்சம் திருவிளையாடல்கள் நடந்திருந்தன. அந்த வஞ்சத்தைத் தீர்க்க இதுதான் சமயம் என்று எண்ணினான். ஆனால் அவன் கொஞ்ச தூரம் சென்றானோ இல்லையோ இதற்குள் சுந்தரேசன் அவனை அழைத்து, "நீ போக வேண்டாம், நானே போகிறேன். அந்தத் துரோகிகளை நானே ஓட்டி விடுகிறேன்" என்றான்.

சுந்தரேசன் தன் வீட்டிலிருந்து தன் தோட்ட நெல் வயலுக்குள் புகுந்தான். நெற்பயிர்கள் தம் எஜமானரின் வருகையைக்கண்டு





தலை" வணங்கின. பறவைகளெல்லாம் இந்த சம்ஹார மூர்த்தியைக்கண்டு அங்குமிங்கும் ஓடி யொளிந்தன. சுந்தரேசன் வயலைத் தாண்டிக் குடிசையை அடைந்தான். "யாரங்கே" என்று தன் முழுபலங் கொண்டு கூவினான். ஆனால் அவனுடைய கேள்வி குடிசைக்குள் சென்று சும்மா திரும்பி வந்தது. குடிசையின் வாயில் மூடி யிருந்தது. அவன் தன் காலால் பலமாக ஓர் உதை உதைத்தான். அந்தப் படல் முறிந்து கீழே விழுந்தது.

ஓ! துஷ்ட சுந்தரேசா! நீ என்ன செய்யப் போனாய்? ஆதரவற்ற, உதவியற்ற—பலவீனர்களான—இத்துன்பமே உருவெடுத்த ஏழைத் தம்பதிகள் மீது உன் அதிகாரத்தை செலுத்த வந்தாயா? ஆ! உன் இருதயம் எத்தன்மையது? நல்லது உன் கோரிக்கை ஈடேறுமா என்பதைப் பார்ப்போம்.

"ஏய் விஸ்வாசபாதகர்களே! குடிசையை விட்டு வெளியேறுங்கள்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே அடி யெடுத்துவைத்தான். ஆ! கல்லைவிட மானிடன் மனம் கடினமா? ஓ! சுந்தரேசா! ஏன் பின் வாங்குகிறாய்? ஏன் உன் சரீரம் நடுங்குகிறது? உன் போன்றவர்களுக்குப்பய மென்பதொன்று இருக்கிறதா?

சுந்தரேசனின் கண்கள் இருண்டன. பயந்து ஒரு பெரிய கூச்சலிட்டான். கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் நன்றாக உற்றுப் பார்த்தான். அவன் எதிரில் இரண்டு சரீரங்கள் கட்டியணைத்தபடியே விழுந்து கிடந்தன.

நீயும் ஒரு மனிதன்தானா? உனக்குச் செல்வமும், அதிகாரமும் இருந்ததனால் நீ உனது சுயேச்சையால் இம்மாதிரி எத்தனை பரிசுத்த ஆத்மாக்களைப் பலி கொடுத்தனையோ? கொடுப்பாயோ? உன்னைப்போலவே எல்லாரும் மனிதர்கள் தான் என்பதை மறந்து விட்டாய்? எல்லாருக்கும் இருதயம் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

சுந்தரேசன் ஒரு பெரிய பெருமூச்சு விட்டான். அதன் பின்னர் அவன் இருதயத்திலிருந்த விஷ வாயு வெளியேறி விட்டது. அவன் கண்களில் நீர்ததும்பின. அவன் இருதயத்தில் கருணை என்னும் சூரியனின் ஒளி பிரகாசிக்கத் தொடங்கிற்று. அவன் ஆத்மா சுயநலத்திலிருந்து வெளியேறிற்று.

சுந்தரேசன் சிறிது நேரம் அசையாமல் நின்று கொண்டிருந்தான். பின்னர் அவன் அவ்விரு சரீரங்களையும் சுற்றி வலம் வந்து பாக்கியத்தின திருவடிகளுக்குச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். பாக்கியத்தின் அழகிய மென்மையான கைகளில் ஒரு கடிதம் காணப்பட்டது. சுந்தரேசன் அதை எடுத்துக் கொண்டு அதிவிரைவில் வெளிவந்து விட்டான்.

சுந்தரேசன் தனியாக ஒரு நதிக்கரையில் நின்று கொண்டிருந்தான். சூரியன் அன்று ஒளி குன்றி விளங்கினான். காற்று மெதுவாக அடித்துக் கொண்டிருந்தது. ஆற்றில் தண்ணீர்கூட மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. சுந்தரேசன் நதியைப்பார்த்து "ஓ! பரிசுத்தமான நதியே! பாக்கியமும் உன்னைப் போன்ற ஒரு பெரிய சுத்தமானவள். ஆனால் நான் அதில் விஷம் கலக்கலா மென்று எண்ணினேன். அவளுடைய துன்பவிளைவை அறிந்து நீ கூட அதிகமாக வருந்தியிருப்பாய். நீ என்னை மன்னிப்பாயாக. பாக்கியம் நீயும் என்னை மன்னிப்பாயாக," என்றான்.

சுந்தரேசன் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்க்க அதில் நூறு ரூபாய் நோட் ஒன்று இருந்தது. அது அவன் முன் தினம் அவளுக்குக் கொடுத்தது. அக்கடிதத்தில் கீழ்வருமாறு எழுதியிருந்தது:

எங்கள் எண்ணத்தையும்—கற்பையும் காப்பாற்றிக் கொள்வதற்காக இன்று நாங்கள் இருவரும்—ஒரு பெண்ணும்—நோயாளியாகிய அவன் கணவனும்—தரித்திர தேவதைக்குப் பலியானோம். இதிலுள்ள ஒரு நோட் ஒரு ஏழைப் பெண்ணின் கற்பை விலைக்கு வாங்குவதற்காக ஒரு தனவானால் கொடுக்கப்பட்டது. யாரேனும் இதைப்பார்த்தால் எரித்துவிட வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
**இரு தரித்திராத்மாக்கள்.**

சுந்தரேசன் சட்டைப்பையிலிருந்து தீப் பெட்டியை எடுத்து "இன்று முதல் நான் தரித்திரத்தை ஸ்வீகாரப்படுத்திக் கொள்ளுகிறேன். பாக்கியம்! உனக்குச் செய்த கொடுமைக்குப் பாத்தியமானவன் நானன்று. ஒரு வேளை நானும் உங்களைப் போன்ற ஒரு தரித்திரனாயிருந்திருந்தால் இத்தகைய அநியாயம், இழிசெயல், கொடுமையைச் சகிக்கமாட்டேன். இதோ பார். இந்த நிமிஷத்திலேயே நான் அந்தப் பிசாசை என் இருதயத்திலிருந்து ஓட்டிவிடுகிறேன்."

சுந்தரேசன் அக்கடிதங்களை நெருப்பு வைத்துக் கொளுத்தினான். வாயுபகவான் உடனே நோட்டைச் சாம்பலாக்கி, அதை அங்குமிங்கும் பறக்கச் செய்து விட்டான். அதிலிருந்து எழும் சிறு தூசியை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரேசன்!

## நடிகர் தற்கொலைச் சங்கம்

ஒரு நியூயார்க் செய்தி கூறுவதாவது:—

"சிக்கன அமுல் காரணமாகத் தங்கள் வேலையை இழக்கக் கூடுமென அஞ்சும் சில (நியூயார்க்) நடிகர்கள் ஒரு "தற்கொலைச் சங்கம்" ஸ்தாபித்திருக்கின்றனர். தங்களில் முதலில் யார் வேலையை இழக்கிறாரோ, அவர் நியூயார்க்கிலுள்ள தலைவர் ரூஸ்வெல்டின் வாசஸ்தலத்திற்கு முன்னிருக்கும் மைதானத்தில் தற்கொலை செய்து கொள்வதென அதன் அங்கத்தினர்களனைவரும் பிரமாண மெடுத்துக்கொண்டிருக்கின்றனர். சிக்கன அமுலைக் கண்டிப்பதே இதன் நோக்கம்.

சமீபத்தில் எட்வர்டு அப்பட் (28 வயது) என்ற நடிகர் தனது தாயாரின் வீட்டில் தூக்கிட்டுக் கொண்டு மாண்டார். இது பற்றி விசாரித்தபொழுது அச்சங்கத்தைப் பற்றிய விவரங்கள் வெளியாயின. அந்த நடிகரும் "தற்கொலைச் சங்க"த்தில் ஒரு அங்கத்தினராயிருந்தவராம்.



# இந்திய மாதர் சங்க வருஷ விழா

**மை**லாப்பூர் 'எவரஸ்டில்' இந்திய மாதர் சங்கத்தின் பத்தொன்பதாவது வருட கூட்டம் ராஜகுமாரி அமிர்தகவுரி தலைமையில் கூடியது.

### சங்க அறிக்கை

காரியதரிசி திருமதி லக்ஷ்மிபாய் பணிக்கர் 1934-36 வருஷ அறிக்கையைப் படித்தார். அதன் சாராம்சம்:

பெண்கள் கல்விக்காக சங்கக் கமிட்டிக் கூட்டம் 14 தடவை கூடிற்று. பல சிறுமிகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் தரப்பட்டன. இச்சங்கம் குழந்தை கலியாணத்தை தடுக்கவும், தேவதாசி முறையை ஒழிக்கவும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஹரிஜனச் சிறுமிகளுக்கும் ஸ்காலர்ஷிப்புகள் தரப்பட்டு தீண்டாமை ஒழிப்பிலும் பங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஓர் அனாதை ஆச்ரமத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. சர்க்கார் பண உதவி செய்யாததால் அதை நிர்வகித்து வரும் கஷ்டம் பெரிதாயிருக்கிறது.

ஏப்ரல் ஆரம்பத்தில் ரூ 3957 இருந்தது. இரண்டு வருஷங்களுக்கு வரவு ரூ 7839. செலவு ரூ 9053 ஆகும். 1936 மார்ச்சுமீ முடிவோடு ஔவை ஆச்ரமத்துக்காகவும் அனாதை விடுதிக்கும் ரூ. 7588 செலவிடப்பட்டது. சிறுமிகளைக் காப்பதற்காக ரூ 5433 செலவாயிற்று.

அடுத்தபடியாகத் திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் பேசுகையில் மேடி சங்கத்தைப் பாராட்டியும் அதன் வேலைத் திறமையைச் சிலாகித்தும் கூறினார்.

### தீர்மானங்கள்

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

இக்கூட்டம் ஆலயப்பிரவேச சம்பந்தமாக திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பாராட்டி மற்றவர்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறது.

சென்னையில் நான்கு பொதுத் தொகுதிகளில் ஒரு ஸ்திரீ அபேட்சகரையும் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப் படாததைக் குறித்து இக்கூட்டம் வருந்துகிறது.

குழந்தைகள் பிச்சை கேட்பதை கவுன்ஸிலும், சர்க்காரும் ஒழிக்காததைக் கண்டு இக்கூட்டம் வருந்துகிறது.

### ராஜகுமாரி வேண்டுகோள்

ராஜகுமாரி அமிர்த கவுரி பேசியதாவது:

பெண்கள் பொதுத் தொகுதிகளில் நிறுத்தப் படாததைக் குறித்து பெரிதும் வருத்த மடைகிறேன். ஆண்கள் பெண்கள் தவறுகளைத் திருத்த வேண்டும். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு பெண்களைத் தேர்தலில் நிறுத்தவேண்டும்.

இப்பொழுது பெண்கள் பிரச்சினை நாட்டின் பிரச்சினையாக உணரப்பட்டிருக்கிறது. முன்னர் பெண்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருந்திருக்கலாம். இப்பொழுது பெண்கள் முன்னேற வேண்டியதற்குப் போராட வேண்டியவர் களாயிருக்கிறார்கள். பெண்கள் தங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மரியாதைக்குத் தாங்களே தகுதியுள்ளவர்களாக இல்லாதவரையில் அவர்களுக்கு யாரும் மரியாதை செலுத்தப்போவதில்லை. இப்பொழுது பெண்களும் சமூக சேவை செய்வதில் பங்கெடுத்துக்கொள்ள முன்வருகிறார்கள். பெண்கள் இந்தியாவுக்கு சிலாக்யமான கொள்கையைக் கண்டுபிடித்துக் கொடுப்பார்களானால் அவர்கள் உலகத்துக்கே பெரும் தொண்டு செய்தவர்கள் ஆவார்கள்.

திருமதி. அம்முஸ்வாமிநாதன் வந்தனோபசாரங் கூறியபின், மங்களம் பாடப்பட்டு, கூட்டம் இனிது முடிவடைந்தது.

# இந்திய மாதர் சங்கம்

## இவ்வருஷ உத்தியோகஸ்தர்கள்

### அக்கிராசனர்

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி.

### உப அக்கிராசனர்கள்

ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதன்.

„ ராமஸ்வாமி சிவம்.

„ அம்புஜம்மாள்.

### கௌரவ பொதுக் காரியதரிசியும், பொக்கிஷதாரும்

ஸ்ரீமதி லக்ஷ்மிபாய் பணிக்கர்.

### கமிட்டி அங்கத்தினர்கள்

முனகல ராணி அவர்கள்.

ஸ்ரீமதி நாவஸிர் ஹுஸேன்.

„ பாலசுந்தரம் நாயுடு.

„ குஞ்சிதபாதம்.

„ கமலதாமோதரன்.

„ ராமத் உனிஸாபேகம்.

„ ஜி. விசாலாக்ஷி அம்மாள்.

# "கிரஹலக்ஷ்மி"க்கு பாராட்டு

## பத்திரிகை அபிப்பிராயங்கள்

### ஹிந்து

"இம்மாதம் முதல் "கிரஹலக்ஷ்மி" என்ற மாதர்களுக்கான மாதாந்த தமிழ்ப் பத்திரிகையை வெளியிடும் டாக்டர் கே. என். கேசரி அவர்களுக்கு எங்களது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்திரீகளுக்கென பிரத்தியேகமான பத்திரிகையில்லாத குறை வெகுநாளாக இருந்து வந்தது. அக்குறையை "கிரஹலக்ஷ்மி" நீக்கி விட்டது. அது வெகு அழகாகவும் நேர்த்தியாகவும் அச்சிடப்பட்டு இருக்கிறது. கட்டுரைகளும், வியாசங்களும் ரொம்பவும் பிரயோசனப் படுபவைகள். குறிப்பாக மன்னர் எட்வர்ட் முடிதுறவை "காதலின் வெற்றி" என்று மாதர்களின் மனப்பான்மையை வெளியிடும் இப்பத்திரிகை கூறுவது ரொம்பவும் கவனித்துப் போற்றற்குறியது. "பாரதியும் — மாதரும்" என்று ஸ்ரீமதி எஸ். கமலா எழுதியிருக்கும் வியாசமும் நன்றாக விருக்கிறது. டாக்டர் முத்துலக்ஷ்மியம்மாள் வைத்தியப்பகுதிக்கு எழுதியிருக்கிறார். வேறு முக்கிய வியாசங்களுள் "ஸ்திரீகளும் வரப்போகும் சீர் திருத்தமும்" என்ற வியாசம் மிகவும் பயன்படத் தக்கது. மேலும் பத்திரிகையில் சித்திரங்கள் செறிந்து கிடக்கின்றன. இப்பத்திரிகை நீண்ட காலம் தன் சேவையை செய்துவர வேண்டு மென்று நாங்கள் விரும்புகிறோம்."

### ஜஸ்டிஸ்

"கிரஹலக்ஷ்மி"யை நாங்கள் மனமார வரவேற்கின்றோம். இதன் முதல் இதழிலே மாதர்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதும் மிகவும் பலன் கொடுப்பதுமான அநேக கட்டுரைகள் மலிந்து பொதிந்து கிடக்கின்றன. சித்திரப் படங்களுக்கோ குறைவில்லை. பல வர்ணப்படங்களும் "கிரஹலக்ஷ்மி"யை அலங்கரிக்கின்றன. தமிழ் நாட்டில் இப்பத்திரிகை பொதுஜன ஆதரவை நிச்சயம் அடையுமென்று நாங்கள் நம்புகிறோம். இதன் பொறுப்பு இதன் ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணன், பி.ஏ., (ஆனர்ஸ்) அவர்கள் கையிலுள்ளது. முதல் இதழின் உன்னதத்தன்மைக்கும், வனப்புக்கும் நாங்கள் அவருக்கு எங்கள் மனப்பூர்வமான சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். "கிரஹலக்ஷ்மி" மென் மேலும் ஓங்கி வளர்ந்து தமிழ்நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்."

### இந்தியன் எக்ஸ்பிரஸ்

"திரு. எஸ். கிருஷ்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "கிரஹலக்ஷ்மி" என்ற ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகையின் முதல் இதழ் வரப் பெற்றோம். இது ஸ்திரீகளின் நன்மைக்கான அநேக வியாசங்களும், பல அழகிய வர்ணப்படங்களும் நிறைந்து விளங்குகிறது."

## சுதேசமித்திரன்

"ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு லோத்ரா பிரஸில் அச்சிடப்பட்டு வெளிவரும் "கிரஹலக்ஷ்மி" ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை. மாதர் முன்னேற்றத்துக்காக உழைப்பது. இதே பெயருடன் தெலுங்கில் ஒரு மாசிகை வெளிவருவது பிரசித்தம். தமிழ் நாட்டுப் பெண்டிருக்கும் பயன்படத்தக்க முறையில் ஒரு மாதப் பத்திரிகையை நடத்த வேண்டு மென்பது டாக்டர். கே. என். கேசரியின் அவா. இவ்வவாவைப்பூர்த்தி செய்யப் போதிய திறமை பத்திரிகையின் சொந்தக் காரருக்கும் ஆசிரியருக்கும் உண்டு. கிருஹ வைத்தியம், சிசு சம்ரக்ஷணம், கலைகள், கதைகள் போன்ற எல்லாத் துறைகளிலும் இப்பத்திரிகை சேவைசெய்யும். அழகிய காகிதத்தில் மூவர்ணப்படங்களுடன் பத்திரிகை மிளிர்கிறது. மேனாட்டுக் கட்டிடங்களுக் கொப்பான முறையில் பத்திரிகையின் அமைப்பு இருந்து வருகிறது. தமிழ் நாட்டார் இப் பத்திரிகையை பூரணமாக ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்."

## ஜனநாயகம்

"கிரஹலக்ஷ்மி" என்ற பெயர் கொண்ட உயர்தரத் தமிழ் மாத சஞ்சிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். பெண்சமூக முன்னேற்றத்தை யொட்டி பல அரியகட்டுரைகளுடனும், சித்திரப் படங்களுடனும், இச்சஞ்சிகை கண்களையும், மனதையும் கவரத்தக்கதாயிருக்கிறது.

சமையல் செய்யும் விதமும், காய்கறிகளின் உபயோகமும் பற்றிய வியாசங்களும் இதில் வெளிவந்திருக்கின்றன. அழகிய சிறுகதைகளும் உள்ளன. திரு. எஸ். கிருஷ்ணன் பி. ஏ. (ஹானர்ஸ்)யை ஆசிரியராகக் கொண்ட இச்சஞ்சிகை மாதந் தோறும் இன்னும் பல அரிய கட்டுரைகளுடனும், அறிவு புகட்டும் சிறு கதைகளுடனும், பெண் உலகிற்கு அவசியமான இதர விஷயங்களுடனும் வெளி வந்து, அரிய சேவை செய்யும் என நம்புகிறோம்.

தமிழ் நாட்டிலேயே, இது போன்ற சஞ்சிகை இதுவரை வெளிவராததால், தமிழ்ப் பெண்மணி யாவரும் 'கிரஹலட்சுமி' எனும் இம்மாத சஞ்சிகையை ஆதரித்து வளர்த்துத் தாங்களும் நலனடைய வேண்டுமென்பது நமது விருப்பம்."

## விடுதலை

"கிரஹலக்ஷ்மி" என்ற மாதாந்த தமிழ்ப் பத்திரிகையின் முதல் இதழ் வரப் பெற்றோம். இப்பத்திரிகை வெகு உன்னதமானது. இதன் நோக்கம் ஸ்திரீகள், கல்வி, அரசியல், மத, பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்காக எல்லா வழிகளிலும் சேவை செய்வது தான். முதல் இதழ் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு வெகு அழகான பல சித்திரங்களும், மூவர்ணப் படங்களும் நிறைந்து விளங்குகிறது. பார்வைக்குப் பத்திரிகை எவ்வளவு அழகாக இருக்கிறதோ அதே போல் முதல் மலரில் அடங்கியுள்ள கட்டுரைகளும், கதைகளும், பாட்டுகளும் மனதைக் கவர்கின்றன. மாதர்களுக்கு அத்தியாவசியமான வியாசங்கள் நிரம்பியதாய் இருக்கின்றன. தமிழில் இதுவரை இது போன்ற உயர்தரப் பத்திரிகை வெளி வந்ததில்லை யென்று கூறுவது





மிகையாகாது. முக்கியமாக தமிழ்நாட்டு ஸ்திரீகள் ஒவ்வொருவரும் இதைப்படிக்க வேண்டியது அவசிய மென்று கூறுவோம். இதன் ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணன், பி.ஏ., (ஆனர்ஸ்). பிரசுரகர்த்தா டாக்டர் கே. என். கேசரி. இவ்விருவர்களுக்கும் தமிழ் நாட்டினரின் வந்தனம் உரித்தானதாகும். "கிரஹலக்ஷ்மி" மென்மேலும் ஓங்கி தன் தூய சேவையை செய்து வருமாக."

## நவமணி

"பெண்ணுரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் தொண்டாற்ற எழுந்துள்ள "கிரஹலக்ஷ்மிக்கு" நாம் நல்வரவு கூறுகின்றோம். இந்தச் சித்திர மாதப் பத்திரிகை தோற்றத்தில் கண்கவர் வனப்பினதாய் விளங்குவது போலவே விஷயபுஷ்டி செறிந்த உள்ளுறையோடும் விளங்குகின்றது. இந்த முதற் சஞ்சிகையில் பெண்மணிகளின் அறிவுக்கு விருந்தாகும் பல கட்டுரைகளும் கதைகளும் பாட்டுக்களும் அணி செய்து நிற்கின்றன. இதை ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்."

## சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

"சென்னையிலிருந்து "கிரஹலக்ஷ்மி" என்ற பெயருடன் டாக்டர் கே. என். கேசரி ஒரு தெலுங்கு மாதப் பத்திரிகையை வெளியிட்டு வருகிறார். கட்டுரைகள், கவிதை, சித்திரங்கள், அச்சுவேலை, கட்டிடம் முதலிய எல்லாவற்றிலும் இப் பத்திரிகை உயர்வு அடைந்திருக்கிறது. இப்போது உயரிய தமிழ் மாதப் பத்திரிகையையும் அவர் ஆரம்பித்துள்ளார். மேற்சொன்ன நயங்களனைத்தும் இப் பத்திரிகையிலும் காணப்படுகின்றன. ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திரிகை தன் நோக்கத்திற்கும் பெயருக்கும் ஏற்றாப்போல் கிரஹலக்ஷ்மியாக விளங்குமாக."

## லோகோபகாரி

"சென்னை எழும்பூரிலிருந்து டாக்டர் கே. என். கேசரியால் வெளியிடப்படும் "கிரஹலக்ஷ்மி" என்ற மாதப் பத்திரிகையின் முதல் இலக்கம் வரப் பெற்றோம். இது இதன் பெயருக்கேற்பப் பெண்கள் நலத்தை நாடியதாகும். இதில் பெண்களுக்குப் பயன் விளைக்கத் தக்க பல அரிய கட்டுரைகளும், கதைகளும், குறிப்புகளும் நிரம்பியிருக்கின்றன. இரண்டு வர்ணப் படங்கள் உள்பட ஏராளமான படங்களும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. லோத்ரா அச்சுக்கூடத்திலிருந்து வரும் எல்லா வெளியீடுகளையும் போல இது உயர்ந்த காகிதத்தில் சிறந்த முறையில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த அழகிய பத்திரிகை நமது வீடுகள் தோறும் இடம் பெற வேண்டுமென்பது நமது விருப்பம்."

# வனஜாவின் விவாகம்

## ஸ்ரீமதி எஸ். ஆர். ஐயம்மாள்

அப்பொழுதுதான் தந்தி சேவகனை அனுப்பிவிட்டு தந்தியை பிரித்து வாசித்து மலர்ந்த முகத்துடன் ஹைகோர்ட் வக்கீல் ராமஸ்வாமி அய்யர், "கமலம், கமலம், ஓடிவா, ஓர் நல்ல செய்தி" என்று சொல்லிக்கொண்டே ஊஞ்சல் பலகை மீது அமர்ந்தார். அவர் மனைவி கமலமும் பின் கட்டிலிருந்து மறுக்ஷணமே அவ்விடம் தோன்றியவளாய் "என்ன, என்ன? நம் வனஜாவின் கலியாண விஷயம் தானே" என்று ராமஸ்வாமி அய்யரை ஆவலுடன் வினவினாள்.

அய்யர்: ஆமாண்டியம்மா! அந்த விஷயம் தான். சென்னையிலிருந்து வெங்கடராமய்யர் தந்தி அடித்திருக்கிறார். அவர் எழுதி இருந்த வரனை அழைத்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை வண்டியில் இவ்விடம் வந்து சேருகிறாராம். பிள்ளை பெண்ணை பார்க்க வேண்டுமென்கிறானாம்.

கமலம்: எந்த பிள்ளை? என்ன அந்த இன்கம்டேக்ஸ் இன்ஸ்பெக்டர்தானே? 80 ரூபாய் சம்பளம் என்றேளே அவன் தானே?

அய்யர்: ஆமாம் அவன் தான்.

கமலம்: சம்பாத்தியம் தான் போதவே போதாது..................

அதற்குள் அய்யர் குறுக்கிட்டு, "போடிபோ, வேலையில்லாத் திண்டாட்டமான இக்காலத்தில் இந்த வரன் உன் பெண்ணை ஒப்பி கலியாணம் செய்து கொண்டால் போதாதா. இல்லாவிட்டால் உன் பெண்ணை கலியாணம் செய்துக்கொள்வதற்கு ஐ.சி.எஸ். மாப்பிள்ளை காத்துக்கொண்டிருக்கிறான்" என்று பரிகாசமாக பதிலுரைத்தார்.

கமலம் முகத்தை சிடுத்துக்கொண்டு "உமக்கென்ன தெரியும்? வனஜாவின் குழந்தை பருவத்திலிருந்தே 'அவள் கையைபிடித்து பார்க்கும் ஜோசியாள் எல்லாம் வனஜா ரொம்ப யோகசாலி, அவளுக்கு பணக்கார ஆம்படையான் தான் வரப் போறான், பெரிய உத்தியோகஸ்தன் தான் வரப்போறான் என்று...............

அய்யர்: போடிபோ, ஜோசியர்கள் சொல்வதெல்லாம் பலித்து விடுமென்று குருட்டு நம்பிக்கை உனக்கு. நானும் மாப்பிள்ளை தேடுவதற்காக இந்த இரண்டு வருஷகாலமாக படும்பாடு பகவானுக்குத் தான் தெரியும். இந்த வரன் என்னமோ ரொம்ப யோக்கியனாம். வயது சிறியது, மேலும் உத்தியோகத்திலுமிருக்கிறான். ஸ்வாமி கிருபையால் இப்பயல் வந்து நம் வனஜாவைப் பார்த்து ஒப்பிவிட்டால் நம் பாக்கியம் தான்.

கமலம்: வேலைதான் ரொம்ப சின்னது.

மறுபடியும் பழையபடிக்கு ஆரம்பித்து "விட்டாயே. எல்லாம் ஒருங்க சரிப்படவே



சரிப்படாது. சொற்ப சம்பளமானால் தானென்ன? நமக்கிருப்பது ஒரு குழந்தை. எல்லாம் அவளுக்குத்தானே. பிள்ளை யோக்கியனாக விருந்தால் அதுவே போதும். மேலும் சர்க்கார் உத்தியோகம். நம் குழந்தையின் அதிருஷ்டம் நன்றாக விருந்தால் உத்தியோகமும் மேல் மேல் உயருகிறது. முதலில் நடக்க வேண்டிய காரியங்களுக்குச் சரியாக ஏற்பாடு செய்துக்கொள் போ" என்று சொல்லிக் கொண்டே மேலே பேச இடங்கொடாமல் ஆபீஸ் ரூமிற்கு போய் விட்டார் அய்யர்வாள்.

... ... ...

ராமஸ்வாமி அய்யர் திருச்சியில் பிரபல வக்கீல். கைநிரம்ப சம்பாதித்து வந்தார். தவிர பூஸ்திதியும் அவருக்கு ஏராளமாக விருந்தது. இவ்வளவிற்கும் அவருக்கிருப்பது ஒரே ஒரு பெண். வனஜா மிகவும் நல்ல பெண். கட்டழகி, சகல வித்தையிலும் நல்ல தேர்ச்சியை பெற்று வருகிறாள். அவளுக்கேற்ற மணாளனை தேடுவதில் தான் அய்யர் இரண்டு வருடங்களாகப் பிரயாசைப் பட்டுக் கொண்டிருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை காலை 'கமலவிலாஸில்' ஒரே தடபுடல். ராமஸ்வாமி அய்யர் நிமிஷத்திற்கொருதடவை வீதிக் கதவண்டை வந்து தன் விருந்தினர் வந்தனரா என்று எட்டி பார்ப்பதும், மறுநிமிஷம் வனஜாவின் அறைக்குள் சென்று வனஜா "ஈதினமே சுதினமூ" பாடணும் தெரியுமோனோ, மறந்து விடாதே. நெற்றிப் பொட்டை அழித்து சரியாக இட்டுக்கொள்" என்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (Instructions) கொடுப்பதும், அதற்குள் கூடத்தில் சேவகன் நாற்காலி முதலியவைகளை சரியாக (arrange) ஒழுங்கு செய்திருக்கிறானா என்றும் மேல் பார்வை பார்ப்பதுமாக ஓரிடத்தில் நிற்காமல் சக்கரம் போல் சுத்திய வண்ணமிருந்தார். கமலம் பெண்ணை நன்றாக அலங்கரித்து விட்டு அவளை வீணைக்கு ஸ்ருதி கூட்டி வைக்கும்படி சொல்லிவிட்டு, தான் சமையல் காரன் டிபன் டிபன் சரியாக செய்கிறானாவென்று மேல் பார்வை பார்க்க சமயலறைக்கு சென்றனள்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் 'கமலவிலாஸி'ற் கெதிரில் ஒரு கார் வந்து நின்றது. ஹேட், ஸூட், பூட்ஸ் எல்லாம் அணிந்த அப்டுடேட் வாலிபரொருவர் காரிலிருந்து இறங்கினார். வாசற்படியில் நின்றிருந்த ராமஸ்வாமி அய்யரை கண்ட வாலிபர் தொப்பியை தூக்கிய வண்ணம் "குட்மார்னிங் ஸார்" என்றார். "வரணும், வரணும்" என்றவாறு 32 பற்களையும் காட்டிய வண்ணம் நம் ராமஸ்வாமி அய்யர் அவ்வாலிபரை வீட்டினுள் அழைத்துச் சென்றார். நாற்காலியிலமர்ந்த பின் அவ்வாலிபர் "வெங்குட்டு மாமா தங்களுக்கு வாக்கு கொடுத்தவிதம் வர முடிய........." அதற்குள் அவசரக்காரரான ராமஸ்வாமி அய்யர், (That is alright) தெட்ஸ் ஆல்ரைட், தெட்ஸ் ஆல்ரைட். நம் குட்டிக்கு வீணை கற்றுக் கொடுக்க ஆரம்பித்து 5 வருஷங்கள்தான் ஆச்சுது பாருங்கள். ஆனால் இப்பொழுதே அவள் சங்கீதத்தை கேட்பவரெல்லோரும் அவள் சங்கிதத்தையும், குரலையும் ரொம்ப சிலாகிக்கிறார்கள். VI Form படித்துக் கொண்டிருக்கிறாள். எனக்கிருப்பது அவள் ஒரு குழந்தைதான்.

"கமலம், கமலம், கமலா, கமலா, வனஜாவை வீணை எடுத்து வந்து இரண்டு பாட்டுகள் பாடச்சொல், இவர் கேட்கட்டும்" என்று கூவினார். "டே சுப்பா, சீக்கிரம் காப்பி, பலகாரம்கொண்டுவாடா, எவ்வளவு நாழியடா செய்கிறாய்?" என்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தார் அய்யர். வந்தவர் அரை வார்த்தை பேசக்கூட சமயமேற்பட வில்லை. ராமஸ்வாமி அய்யர் பிறவியே சற்றுபேசும் ஸ்வாபவம். அதுவுமின்றி தமக்கு மாப்பிள்ளையாகப் போகிறவரை (future son-in-law) கண்டதும் அவருக்கு சந்தோஷத்தினால் தலை கால் தெரியவில்லை.

கமலம் கதவின் பின்னால் நின்று கொண்டு வாலிபரை பார்த்து பார்த்து "வனஜாவிற்கு ஏற்ற மணாளர் தான் இவர்" என்று மனமகிழ்ந்த வண்ணம் நின்றிருந்தனள். தன் கணவன் சொல்படி தக்ஷணம் வனஜாவை அழைத்து வந்து முதலில் வாலிபருக்கும், பின்பு அவளது தகப்பனாருக்கும் நமஸ்கரிக்கச் சொல்லி, அவள் கையில் வீணையைக் கொண்டுவந்து கொடுத்து தான் கதவின் பின் மறைந்தாள்.

வாலிபர் வெட்கத்துடன் "அட்டா இதெல்லாம் என்னத்துக்கு ................" அதற்குள் அய்யர் "அப்படி உண்டா, எல்லாம் தேவலை. கமலம், சீக்கிரம் சுப்பனை காப்பிபலகாரம் கொண்டு வரச்சொல். வனஜா! எங்கே சீக்கிரம் இரண்டு பாட்டு வாசிபார்க்கலாம். வீணையுடன் நீயும் பாடனும் தெரியுமா?" என்றார்.

வனஜாவும் பாய்மீது உட்கார்ந்து கொண்டு மனமார வாலிபரை கடைக்கண்ணால் கண்டு கண்டு களித்தவண்ணம் வெகு ரம்யமாக பாடலானாள். வனஜா வீணை வாசிக்கும் சாதுர்யத்தையும், அவளது குயிலினும் இனிய குரலையும், அவளது வனப்பையும் கண்டு வெகு ஆனந்தத்துடன் அவள் பாட்டிற்கு சரியாக தலையை அசைத்த வண்ணம் அவ்வாலிபர், "ஆகா, என்ன அழகு, என்ன இனிமையான குரல், என்ன காம்பீர்யம், இவளை மணந்து கொள்பவன் பரமபாக்கியசாலி" என்று யோஜித்தவாரிருந்தார்.

அடிக்கடி அவர்கள் இருவர் கண்களும் சந்தித்துக்கொண்டிருந்தன. அவர்களின் மனோபாவங்களை அவர்களறியா வண்ணம் கூர்மையாக கவனித்து வந்த ராமஸ்வாமி அய்யர் "தங்களுக்கு சங்கீதத்தில் ரொம்ப ஞானமுண்டு என்று தோன்றுகிறது" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

வாலிபர், "ஆமாம், எனக்கு சங்கீதத்தில் கொஞ்சம் ஞானமுண்டு. உங்கள் பெண் ரொம்ப நன்றாகத்தான் வாசிக்கிறாள். மேலும் அவளுடைய சாரீரம் ரொம்ப நயமாக விருக்கிறது," என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தார். அய்யருடைய உச்சி குளிர்ந்தது. வாலிபர் எவ்வளவு வேண்டாமென்று தடுத்தாலும் அவரை சைத்யோபசாரம் செய்து காப்பி, பலகாரம் சாப்பிடச் செய்தார்.

பின்பு வாலிபர் "நான் புறப்படுகிறேன். ரொம்ப நாழிகையாய் விட்டது. மாமா தங்களுக்கு ஒரு கடிதம் கொடுக்கச் சொல்லி என்னிடம் கொடுத்திருக்கிறார். அதைக் கொடுக்க மறந்தே போய் விட்டேன். மன்னிக்கவும்" என்று சட்டை





ஜேபியிலிருந்து ஒரு கவரை எடுத்து ராமசாமி அய்யரிடம் கொடுத்தார்.

கடிதத்தை வாசிக்காமலே அய்யர், "Thanks, That is alright, That is alright, தங்களுக்கு எப்பொழுது லீவு கிடைக்குமோ கூடிய சீக்கிரம் முகூர்த்தம் நிறைவேறினால் நன்மைதானே" என்று சிரித்தவண்ணம் கேட்டார்.

வாலிபருக்கு இப்பொழுது தான் அர்த்தம் விளங்கிற்று. தன்னுடைய வெங்குட்டு மாமா கடிதம் கொடுத்துவா என்று ஏமாற்றி தன்னை பெண் பார்ப்பதற்கு அவ்விடம் அனுப்பி இருக்கிறார் என்று யோசித்து, "அதனால் என்ன கெட்டுவிட்டது, பெண் மனதை கவர்ந்துவிட்டாள்" என்று யோஜித்த வண்ணம் "அதற்கென்ன, உங்கள் சௌகரியம்போல் முகூர்த்தம் நிஷ்கர்ஷை செய்யலாம். எனக்கு தாய் தகப்பனாரோ இல்லை. என் தமயனுக்கும், வெங்குட்டு மாமாவுக்கும் ஓர் கடிதம் போட்டு விட்டால் சரி தான். நாளை மத்தியானம்தான் வேலை சார்ஜ் வாங்கிக்கொள்ளப் போகிறேன். நாளைக்கு சாயங்காலம் 4 மணிக்கு வனஜாவையும் அழைத்துக்கொண்டு டீக்கு என் பங்களாவுக்கு வரவேண்டும். மற்ற விஷயம் நாளைக்கு பேசுவோம்" என்றான்.

அய்யர் "ஆனால் தங்களை இந்த ஊருக்கே மாற்றலாயிருக்கிறதா?"

வாலிபர் "ஏன், மாமா உங்களுக்கு தெரிவிக்கலையா? ஆமாம், என்னை இந்த ஊர் சப்கலெக்டராக போட்டிருக்கிறார்கள். நாழியாய் விட்டது. நாளைக்கு 4 மணிக்கு உங்களிருவரையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். "Good Morning" என்று சொல்லிக்கொண்டே அவசர, அவசரமாக வீதிக்குப் போய் காரில் ஏறிக் கொண்டு போய் விட்டார்.

ராமஸ்வாமி அய்யர் கொஞ்ச நேரம் ஆச்சரியத்துடன் ஸ்தம்பித்து நின்று விட்டார். பின்பு கையிலிருந்த கடிதத்தை பிரித்து படிக்கலானார்.

"நண்பன் ராமசாமிக்கு அநேக வந்தனங்கள். இப்பவும் எனக்கு திடீரென்று நேற்றையதினம் ஜுரம் வந்துவிட்டதால், நான் திருச்சிக்கு புறப்பட்டு வரமுடியவில்லை. பட்டாபியும் தனிமையாக பெண் பார்க்க வருவதற்கு சங்கோசப்படுகிறானதலால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் அவனையும் அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வருகிறேன். இக்கடிதம் கொண்டு வருபவன் என் மருமகன் விஸ்வநாதன் I.C.S. போன மாதம் தான் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தான். திருச்சி சப்கலெக்டராக நியமிக்கப் பட்டிருக்கிறான். திங்கட்கிழமை வேலை ஏற்றுக் கொள்ளப் போகிறான். அப்படியே கடிதத்தை உன்கையில் கூடிய சீக்கிரம் சேர்பித்து விடும்படி சொல்லி இருக்கிறேன். இவனுக்கு தான் என் மைத்துனன் பெண்ணை கொடுக்கவேண்டுமென்று யோஜித்திருக்கிறோம்.

அன்புள்ள நண்பன் வெங்குட்டு"

படித்து முடித்தவுடன் அய்யர் கலகலவென்று சிறித்தார். கமலமும் அவ்விடம் அப்பொழுதுதான் பிரவேசித்தவள், அவர் சிரிப்பைக் கண்டு "ரொம்ப நன்றாகவிருக்கு, தன்னைப்போல் எதற்கு சிரிக்கிறேள்? பிள்ளையின் அபிப்பிராயத்தை வந்து தெரிவிக்காமலே என்னமோ சிரித்

துக் கொண்டு நிற்கிறேனே. என் மனசு துடிச்சிண்டிருக்கு."

ராமஸ்வாமி அய்யர் "ஏண்டீ, துடிக்கணும், உன்னிஷ்டப்படி உனக்கு I.C.S., மாப்பிள்ளையே கிடைத்திருக்கும் பொழுது" என்று எல்லா விஷயங்களையும் விவரமாக சொல்லி முடித்தார்.

[கமலமும் உள்ளம் பூரித்த வண்ணம் "நீங்கள் சொல்லீட்டா ஆச்சா ஜோசியர்களின் பேச்சு பொய்யாகுமென்று. பொய்யானால்தான் என்ன? நம் குட்டியின் அதிருஷ்டம் பொய்யாகுமா" என்றாள். இதற்கு நான்காம் நாள் வனஜா, விஸ்வநாதனின் லக்னபத்திரிகையை போஸ்ட்மேன் கொண்டு வந்து கொடுக்க அதை பிரித்து வாசித்த வெங்கடராமய்யர் "அடடா" என்று தலையை சொறிந்தார்.

## மதிப்புரை

ஸ்ரீ ரமணதாஸ சதானந்தர் அவர்களால் எழுதப்பட்ட "ஸ்வயாம்புவல்லி அல்லது 81 திருடர்கள் மனமாற்றம்," "குடும்ப சுகம்," "கிருஷ்ண சரித்திரம்" என்ற நூல்கள் வரப்பெற்றோம். ரமணதாஸர் கா. சு. சேஷகிரி அவர்களின் "எல்லாம் நானே" என்ற பிரசுரமும் நமது பார்வைக்கு வந்தது. இப்பிரசுரங்கள் பொதுவாக பக்தியின் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன. விலையும் சொற்பமே. வேண்டியவர்கள் 138, ப்ராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீமான் பாகவத சுப்பராயாசார் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட "அனந்த சயனம்" என்ற நூலின் பிரதி ஒன்று வரப்பெற்றோம். பத்மநாப ஸ்வாமியின் வரலாற்றையும், அவர் எழுந்தருளியிருக்கும் திவ்ய க்ஷேத்திரமாகிய திருவனந்தபுரத்தைப்பற்றியும் விவரமாக கூறுகிறது. இந்நூலின் விலை அணா 4. வேண்டுவோர் ஜானகி விலாஸ் பப்ளிஷிங் ஹவுஸ், 2/8, சுந்தரமூர்த்தி விநாயகர் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

திரு. வ. என். நாகராஜனால் பதிப்பிக்கப்படும் "விமர்சனம்" என்ற மாதமிரு முறை வெளிவரும் பத்திரிகையின் முதல் இரு இதழ்களும் வரப்பெற்றோம். இதில் சினிமா முதலிய கலைகளைப் பற்றிய கட்டுரைகள் மலிந்துள்ளன. விவரத்திற்கு விமர்சனம் ஆபீஸ், 34, கிருஷ்ணப்ப நாயக்கன் அக்கிரஹாரம் ஜி. டி. மதராஸ் என்ற விலாசத்துக்கு எழுதவும்.



# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

### ஐந்து வருஷமாக தூங்கும் ஸ்திரீ.

அமெரிக்காக் கண்டத்தில், சான் பாலோ தேசத்தில் சான்டோ ஆன்ட்ரி என்ற ஊரில் 27 வயதுள்ள நீமியா போல்ட்ரின் என்ற மாது கடந்த ஐந்து வருடங்களாய் துயர்ந்து தூங்கிக் கொண்டேயிருக்கிறாளாம்.

அவள் தாயார் அவள் பக்கத்திலேயே இருந்துகொண்டு அவளுக்குவேண்டிய சிச்ருஷைகள் செய்து வருகிறாள். அவள் ஏழையாயிருந்த போதிலும் அயல் வீட்டார்களின் உதவியைக்கொண்டு தன் மகளுக்கு பணிவிடைசெய்து வருகிறாள். அநேகம் வைத்தியர்கள் நீமியாவின் தூக்க வியாதிக்குக்காரணம் கண்டு பிடிக்க முயன்றும் பயனில்லை. சில சமயங்களில் தன்னிருகைகளையும் தலைக்கு மேல் சுமார் 4 மணிநேரம் உயர்த்திய வண்ணமே அவள் தூங்குகிறாள்.

தற்சமயம் பிரேஸிலைச் சார்ந்த சில சாஸ்திர நிபுணர்கள் நீமியாவின் இந்த சமாதி நிலையின் காரணத்தை அறிய வேண்டி முயற்சி செய்து வருகிறார்கள். அவளுக்கு இந்த வியாதி ஏற்பட்டது குடும்ப நண்பரான ஒரு பாதிரியாரின் மரணத்துக்குப் பின்புதானாம்.

.... .... ....

### 15 பவுண்டு எடையுள்ள பூ

சுமத்திராவில் சுமார் பதினைந்து பவுண்டு நிறையுள்ள ஒருவகைப் புஷ்பம் இருக்கிறதாம்.

### தண்ணீர் சொட்டும் மரம்

தென் அமெரிக்காவில் பெரு என்ற தேசத்தின் காடுகளில் நூதனமான மரங்களிருக்கின்றன. அவை எந்தக் காலங்களிலும் குளிர்ந்தே இருக்கும். இதன் இலைகளிலிருந்து ஒரு வித தண்ணீர் எப்பொழுதும் கசிந்து கொண்டேயிருக்கும். சுமார் 15 காலன் நீர் ஒரு நாளில் வடியும் என்று சொல்லப்படுகிறது.

.... .... ....

### சைனாவின் நூதன கிராமம்

சைனா தேசத்தில் க்வீச்சோ மாகாணத்தில் டாட்டிங் ஜில்லாவில் ஒரு நூதன கிராமம் இருக்கிறது. அதில் உள்ளவர்கள் எல்லோரும் நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் தானாம். 180 வயதுள்ளவர் ஒருவர் இருக்கிறார். அவர் இன்னும் தன் ஜீவனம் நடத்துவதற்கு விரகு வெட்டி விற்றுவருகிறார். தான் இவ்வளவு காலம் ஜீவித்திருப்பதற்கு முக்கிய காரணம் அவர் போதியஅளவு நித்திரை செய்வது தானாம். சூரிய அஸ்தமனம் ஆனவுடன் தூங்க ஆரம்பித்து சூரிய உதயத்தின் போது அவர்படுக்கையை விட்டு எழுந்து விடுவாராம். அவ்வூரின் சீதோஷ்ணம் 40 டிகிரிக்குக் குறையாமலும், 60 டிகிரிக்கு மேல் போகாமலும் இருப்பதே அவ்வூர் ஜனங்களின் தேகசுகத்துக் காரணம் எனச்சொல்லப்படுகிறது.

.... .... ....

### கிளௌஸ்டர் குழந்தை ராக்ஷசன்

கிளௌஸ்டரில் நாலு வயதுகூட ஆகாத ஒரு சிறுவன் நிறையில் மிகவும் அதிக

மாகிக் கொண்டே வருகிறான். இவனுடைய தற்போதைய நிறை 150 பவுண்டுகள். இவன் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் மூன்றிலிருந்து நான்கு பவுண்டுகள்வரை அதிகமாகிக்கொண்டே வருகிறானாம். இவனது உயரம் நாலரை அடி.

... ... ...

## ராக்ஷச மனிதனா?

மேற்கு ஹங்கேரியைச் சேர்ந்த கபோஸ்வரத்தில் லாஜீ ஜாபோ என்றொரு மெலிய மனிதன் இருக்கிறான். அவன் ஆள் குள்ளமாகவும் மெலிந்தும் இருக்கிறானெனினும், தின்பதில் அவனுக்கிணையாகப் பெரியவர்களும் இருக்கமுடியாது. அவன் ஒரு நாள் ஒரு ஹோட்டலில் போயுட்கார்ந்து கொண்டு பின்வரும் சாப்பாடு கொண்டு வரச் சொன்னான். பொரித்த கூஸ்வாத்து; 6 தட்டுகள் ஆண் பன்றியிறைச்சி; 2 பவுண்டு பொரித்த கூஸ்வாத்து ஈரல்; 6 ரொட்டிகள்; அரை காலன் ஒயின்; 3-தட்டு மாமிசம். இதைக் கண்ட ஹோட்டல் சொந்தக்காரன் அவனிடம் சென்று, அவன் சிறிய ஆளாயிருப்பதைக் கண்டு "இவ்வளவையும் நீர் சாப்பிட்டு விட முடியுமா? அப்படி நீர் சாப்பிட்டு விட்டால் நான் உம்மிடம் சார்ஜ் ஒன்றும் வாங்குவதில்லை" என்று பந்தயம் கூறினான். இதைக்கேட்ட லாஜீ மகா சந்தோஷத்துடன் ஒரேமணி நேரத்தில் தின்று விட்டு, "இதேபோல இன்னொரு முறை யாரேனும் இவ்வளவையும் வாங்கிக் கொடுத்தால் தின்னத் தயார்! யாராவது வாங்கித்தருகிறீர்களா?" என்று கேட்டான். ஒருவரும் முன்வரவில்லை.

## உடைந்து போகும் மலை

நார்வே, ரேவன் பில்லைச் சேர்ந்த ஒரு பெரிய மலை அடிக்கடி பெயர்ந்து கடலில் விழுந்து, மலை குறுகிக்கொண்டே வருகிறது. கடந்த செப்டம்பரில் அப்படித்தான் மிகப் பிரமாண்டமான ஒரு பாறை சரிந்து விழுந்ததால் 70 பேர் உயிர் துறந்து விட்டனர். அந்த மலைப் பள்ளத்தாக்கில் குடியிருந்தவர்களெல்லாரும் கடந்த செப்டம்பரில் நடந்த விபத்துக்குப் பின் அந்த இடத்தைக் காலிசெய்து விட்டார்கள். அதன் பின் இப்பொழுது மீண்டும் அம்மலையில் ஒரு பகுதி சரிந்து கடலில் விழுந்ததால் கடல் நீர் பொங்கி அரை மைல் தூரம் வரை பூமிக்குள் வந்து விட்டது. இந்தச் சரிவைக் கண்டு பயந்து காட்டுக்குள் ஓடிய ஒரு ஸ்திரீ இதுவரை அகப்படவேயில்லையாம்.

... ... ...

## லாட்டரி போடப்பட்ட பெண்

பாரிசுக்கு அருகில் ஒரு விநோதக் கல்யாணம் நடை பெற்றிருக்கிறது. பியர்ரீ டுக்ராஸ் என்பவன் வேனால் என்னும் பெண்ணை லாட்டரியில் முதற் பரிசாகப் பெற்றுக் கல்யாணம் செய்து கொண்டான். அந்தப் பெண் மகா அழகி. நல்ல குடும்பத்தி லுதித்தவள். அவள் மீது பல வாலிபர்கள் காதல்கொண்டிருந்தனர். ஆனால், அந்தப் பெண் உதித்த குடும்பத்தில் ஸ்ரீதனம் போன்றதொரு தொகை வசூல் செய்வது வழக்கமாம். எனவே, அவள் காதலர்களுள் ஒருவன் அவளை லாட்டரி மூலம் பெறுவதென்றும், அவளை மணக்க விரும்புபவர்களனைவரும் லாட்டரிடிக்கட் பெறுவதென்றும், அந்தத்





தொகை அவளுக்குப் போய்ச் சேருவதென்றும், லாட்டரியில் முதல் பிரைஸ் விழப்பெற்றவன் அவளை அடைவதென்றும், ஒரு பேர்வழி கூறினான். எல்லாரும் அதற்கிணங்கினர். அனைவரும் லாட்டரி டிக்கட்டுகள் வாங்கியதன் மூலம் 10,000 பவுன் வரை அவளுக்குச் சேர்த்துக் கொடுத்தனர். முதல் பரிசு பியர்ரீ டுக்ராசுக்கு விழுந்ததனால் அவனே அவளை மணந்து கொண்டான். அவளும் அவனும் சிறு போதிலிருந்தே காதலர்களாம். அவ்விருவரும் லாட்டரி போடுவதற்கு முன்கூட, ஒன்றுகூடி மன்மதக் கடவுள் தங்கள் காதலுக்கு இடையூறு விளைவிக்காதிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, அவர்களுக்குச் சாதகமாகவே லாட்டரி முடியுமென்று நம்பியிருந்தனராம். அப்படியே அவர்கள் நம்பிக்கை நிறைவேறிற்று.

... ... ...

## நாட்டியத்திற்கு புறாக்களே உடை

நாகரிகம் முதிர்ந்த அமெரிக்காவில் ஆடைகளே இல்லாமல் நாட்டியம் ஆடும் வழக்கம் பரவி வருகின்றது. ஆனால், ஆடைகளுக்கு பதிலாக புறாக்களையே ஆடையாக உபயோகப் படுத்துகின்றனராம்.

... ... ...

## நாயின்மீது அன்பு

கலிபோர்னியாவில் ஒரு மாது தன் நாயை ஏதோ சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருந்தாள். ஆனால் முதலிலேயே அவள், நாய் இறக்குமானால் தானும் இறந்து விடக்கூடும் எனக் கூறினாளாம். ஒருவாரம் சென்று ஆஸ்பத்திரியில் நாய் இறந்துவிட்டது. இச்சமாசாரத்தை அம்மாதுக்குத் தெரிவிக்க வந்தவர், அவளும் இறந்திருக்கக்கண்டாராம்.

... ... ...

## நாயின் சமர்த்து

இங்கிலாந்தில் எக்ஸ்டர் என்னுமிடத்தில் ஒரு பெரிய கோவில் கட்டிவருகிறார்கள். அங்கு தச்சர்கள் பலர் வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு "டயம் கீப்பர்" ஆக இருப்பது ஒரு சிறு நாய். இந்த நாய் வெகு சாதுர்யமாகத் தச்சர்களிடம் வேலைவாங்குகிறது. கடிகாரத்தைப் பார்த்து நேரத்தையும் தெரிந்து கொள்ளுகிறது. அதிகாலையில் ஆலயத்தில் பிரார்த்தனை முடிந்ததும், ஆட்கள் வேலைக்குத் திரும்பிவர வேண்டிய நேரத்தில் வீடுவீடாகச் சென்று தச்சர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு வருகிறது. யாவரும் வேலை ஆரம்பித்ததும், நாய் ஓரிடத்தில் படுத்திருந்து கடிகாரத்தின்மீது கண்ணுங் கருத்துமாய் இருக்கிறது. சரியாகப் பகல் 12 மணியானதும், நாய் குலைத்து அவர்கள் யாவரையும் சாப்பிட அனுமதிக்கிறது. 1 மணி ஆனதும் மீண்டும் குலைத்துக் கொண்டே வந்து அவர்களை வேலைக்கு வரும்படி செய்கிறது. மாலையில் வேலை முடியும் தருணம் வந்ததும் மீண்டும் குலைக்கிறது. இவ்விதமாக அந் நாயே தச்சர்களுக்கு ஒரு "டயம் கீப்பர்" ஆக இருந்து நேரத்தை அறிவித்து வேலை வாங்கி வருகிறது. வேலை ஸ்தலத்தில் அந்நியர் எவரையும் பிரவேசிக்க அது அனுமதிப்பதேயில்லை.

# செய்தித்திரட்டு

## சர்வாதிகாரி முதன் முதலாக விமானமேறினார்

அயர்லாந்துதேச சர்வ அதிகாரியான டிவாலரா சென்ற நவம்பர் மாதம் 23ந் தேதியன்று தான் முதன் முதலாக விமானத்தில் ஏறினாராம், ஆச்சர்யமே!

... ... ...

## அன்னியருடன் விவாக சம்பந்தம் கூடாது

பிரஸிடென்ட் ரூஸ்வெல்ட் இப்பொழுது புதிதாக ஒரு சட்டம் பிறப்பித்திருக்கிறார். அதன்படி அமெரிக்க ஐக்கிய தேசத்து மக்கள் முன்போல் மற்ற அந்நியர்களுடன் விவாக சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது.

... ... ...

## கால் பந்து விளையாட்டால் விவாக ரத்து

வியன்னாவில் ஹெர்கார்ல் லட்ஸ் என்பவர் தன்மனைவி மீது விவாக ரத்துவழக்கு ஒன்று கொண்டு வந்தார். அவ்வழக்கின் சாராம்சம் என்னவென்றால், அவருடைய 28 வயதுள்ள அழகிய மனைவி, தன்வீட்டு வேலைகளை கவனியாமல் கால்பந்து விளையாடுகிறாளாம்.

மேலும் அவளுடைய கணவர் தன் சாக்ஷியத்தில், அவள் வீட்டு பணத்தையெல்லாம் கால் பந்து விளையாட்டிற்கு வேண்டிய பூட்ஸ் முதலியவைகளுக்குச் செலவழித்து வந்தாள் என்றும், அவள் கால் பந்து விளையாட்டு பழகிக் கொண்டிருக்கும்போது நடு இரவில் வந்தாளென்றும், தானே சமையல், வீட்டுவேலைகள், குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுவது முதலியவைகளைச் செய்யவேண்டியிருந்ததென்றும் கூறினார்.

விசாரணைக்கு முன்பு ஸ்ரீமதி பிராலட்ஸ் பத்திரிகை நிருபர்களிடம் சொன்னதாவது—"முதலில் என் புருஷர்தான் என்னை கால்பந்து விளையாட உற்சாகப்படுத்திவிட்டது. இப்பொழுது நான் அவ்விளையாட்டிற் காகவே உயிர் வாழ்கிறேன்."

... ... ...

## ஜான்ஸி ராணி

மிஸஸ் அன்ன பூர்ணபாய் தேஷ்முக் என்பவர் தலைமையில் கூடிய பம்பாய் ஸ்திரீகள் கூட்டத்தில், பிலிப்காக்ஸ் என்னும் ஐரோப்பியரால் எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்தில் ஜான்ஸி ராணியைப்பற்றி விஷமத்தனமாக எழுதியிருப்பது கண்டிக்கப்பட்டது.

... ... ...

## விமானத்தில் காதல் தகராறு

பாரிஸுக்கு வெளியே ஒரு மைதானத்தில் லாலீமாண்ட் என்னும் விமான



மோட்டி ஒருவன் இரத்தக் காயங்களுடன் கிடந்தான். அவனை ஜனங்கள் விசாரித்ததில், அவன் வெர்ஸேல்ஸ் நகருக்கு 2000 அடிக்கு மேல் பறந்துகொண்டிருந்ததாகவும், மற்றொரு விமானத்திலிருந்து ஒரு ஸ்திரீ ரிவால்வரால் இவனைச் சுட்டதால் இவன் கீழே இறங்கிவிட நேர்ந்தது என்றும் தெரியவந்தது. மற்ற விவரங்களை இவன் தெரிவிக்காததால் இது ஏதோ காதல் விவகாரம் என்று ஊகிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் ஸெக்வி என்னுமிடத்திற் கருகில் ஒரு விமானம் விழுந்தது. அதில் ஷ்மீடர் ஷஸ்லூ என்ற மாது சொல்ப காயங்களுடன் காணப்பட்டாளாம். லாலீமாண்டுக்குக் காயம் விளைவித்த குற்றத்துக்கு பதில் சொல்வதற்காக அவளுக்கு சம்மன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

... ... ...

## மரம், காகிதம் இவைகளுக்கு தீ பாதுகாப்பு

மரம், காகிதம் முதலிய சாமான்களைத் தீயினின்றும் பாதுகாப்பதற்காக இம்பீரியல் கெமிகல் இன்டஸ்டிரீஸார் ஒரு புது மாதிரியான ரஸாயனப் பொருளை உபயோகிக்கிறார்கள். அதனால் வார்னிஸ் செய்யப்பட்ட பொருள்கள் தீக்கு இரையாக மாட்டா.

இந்தப் புது மாதிரியான வஸ்துவிற்கு "பாஸ்போஸ்" என்று பெயர். இது பில்லிங்ஹாமில் வெகு நாளைய ஆராய்ச்சிக்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்டது.

பாஸ்போஸ் தீயை அணுகவிடாத ஒரு விதமான வாயுவைக் கிளப்பி தீயை மாத்திரம் தடுப்பது மல்லாமல், தீ எரிவதற்கு வேண்டிய காற்றையும் தடுத்து விடுகிறதாம்.

... ... ...

## மோக்ஷத்தில் இடம் கொடுத்தவர்

பெஸ்ஸரேபியாவிலுள்ள கிஸ்னி நியூ என்னுமிடத்தில் ஒரு சாமியார் சாதாரண குடியானவர்களை நூதனமான வழியில் ஏமாற்றி விட்டார் என்பது கீழ்க்கண்ட கதையிலிருந்து தெரியவரும்:—

குடியானவர்களை, தங்களுக்கு மேலுலகத்தில் இடங்கள் வாங்கும்படி அவர் வற்புறுத்தினாராம். இதற்காக அவர் ஒரு படம் தயாரித்து, அதில் சினிமா கொட்டகை மாதிரி இடங்களைப் பூர்த்திசெய்தார். அதிகமான விலை கொடுக்கத் தயாராய் உள்ளவர்களுக்கு அவர் சில இடங்களை ஒதுக்கி வைத்தார். "கடவுளுக்குச் சமீப"த்திலுள்ள இடங்களுக்கு, சாதாரண கட்டணத்தைவிட இருமடங்கும், ஆர்ச்சேஞ்சல் கேப்ரியலுக்குச் சமீபத்திலுள்ளவர்களுக்கு கொஞ்சம் குறைவாகவும் கட்டணம் வசூலித்தார். சாதாரண இடத்திற்கு விலை சுமார் ரூ. 25க்கு சமமானது.

அவர் சுமார் 200 இடங்களைப் பூர்த்தி செய்து விட்டார். போலீஸார் இவ்விஷயத்தை அறிந்து அவரைக் கைது செய்தனர். சில குடியானவர்கள் அவருடைய விடுதலைக்காக காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அச்சாமியாருக்கு இத்தண்டனையைவிட மேலான தண்டனையை அடையும்படிச் செய்யத் தயாராயிருக்கிறார்களென்று தெரிகிறது.

... ... ...

### கோடீஸ்வரர்கள் மனைவி

மிஸ் பெக்கி ஹாப்கின்ஸ் என்பவர் மாறி மாறி மூன்று கோடீஸ்வரர்களைக் கலியாணம் செய்து கொண்டவள். இப்பொழுது இவள் நான்காவது தடவையாக ஒருவரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாள். இப்பொழுது தான் முதல் தடவையாக தான் அவர் பேரில் காதல் கொண்டிருப்பதாக வெளியிட்டிருக்கிறார்.

மிஸ். ஹாப்கின்ஸ் கலியாணம் செய்து கொள்ளப் போகிறவரின் பெயர் மிஸ்டர் ஜாக்ஸன். இவர் ஒரு பெரிய பணக்காரர். இவர் தற்போதுள்ள மனைவியால் நிராகரிக்கப்படுவதற்கு முன்னதாகவே இக்கலியாணத்திற்கு சம்மதித்து விட்டார்.

மிஸ். பெக்கி தனக்கு தன்னுடைய மற்ற கணவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்திருப்பதாகத் தெரிவிக்கிறாள். அவர்களுடனெல்லாம் இன்னும் சிநேக பாவத்துடனேயே இருக்கிறாள்.

ஜாக்ஸனின் தற்போதைய மனைவிக்கு இவ்விஷயம் பத்திரிகைகளில் வாசித்த பிறகு தான் தெரியுமாம்.

... ... ...

### அழகிய அம்மாளாச்சி

வடராமனாதபுரம் ஜில்லா போர்டுக்கு காரைக்குடி ஸ்ரீமான் கே. பி. எஸ். வி. பழனியப்ப செட்டியார் அவர்களின் மனைவி ஸ்ரீமதி அழகிய அம்மாளாச்சி சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

... ... ...

### லண்டனில் லட்சம் நிர்வாணிகள்

உலகத்தில் இப்போது முப்பது லட்சம் நிர்வாணிகள் இருக்கிறார்கள். லண்டனில் மாத்திரம் லட்சம் நிர்வாணிகள் இருக்கிறார்கள். லண்டனில் இதற்காகப் பன்னிரண்டு சங்கங்கள் வேலை செய்கின்றன. ஒவ்வொரு சங்கத்திற்கும் சொந்த நிலமிருக்கிறது. இந்த நிலத்தைச் சுற்றி மதில் எழுப்பி நிர்வாண நிலையமாக வைத்திருக்கிறார்கள். நிர்வாண நிலையத்துள் போகிறவர்கள் அத்தனை பேரும் நிர்வாணிகளாகவே யிருக்கிறார்கள். நிர்வாண நிலயத்துள் பந்தாடுங் கோட்டமும், நீந்தி விளையாடக்கூடிய பொய்கையும், பூமாரி நீர் கொட்டுங்குளிக்குமிடங்களும் இருக்கின்றன.

... ... ...

### மின்சார சமையற்காரி

சமையற்காரிகள், ஆடைகளைக்கசக்கித் தோய்த்து, பின்னர் அவற்றை உலர்த்த வேண்டி அவர்கள் எடுத்துக்கொள்ளும் சரீரப் பிரயாசை இனித் தேவையில்லை. ஒருவகை மின்சாரக் கருவி யாதொரு பிரயாசையுமின்றி அந்த வேலையை இப்போது செய்கிறது. ஒருவித வாயு அல்லது காற்றினால் பலகாரங்களைச் சில நிமஷங்களுக்குள் நூதன சமையற் கருவிகள் தயாரிக்கின்றன. ஆகாரம் தயாரானதும், தயாராய் விட்ட விஷயத்தைக் காதுக்கினிய ஓசையைக் கிளப்பித் தெரிவிக்கின்றன.

... ... ...

### மின்சாரப் பணியாள்

சுவர்களில் வர்ணம் அடித்தல், செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல், கம்பளம், ஜமக்காளம் முதலியவற்றை நீரில் கழுவுதல், புழு, பூச்சிகளை நாசம் செய்தல் போன்ற பலவகைப் புதிய தொழில்களையும் இப்போது மின்சாரம் செய்கின்றன.



## *** கதம்பம் ***

### கணவனுக்கு நூதன தண்டனை

அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் ஒரு விநோதமான வழக்கு நடந்தது. ஸ்ரீமதி ரூபன்ஸ்டீன் தன் புருஷன் அவள் மீது பிரியம் இல்லாமல் இருப்பதாயும், அசட்டை செய்வதாயும், தன்னை வேடிக்கை நடக்கும் இடங்களுக்கு கூட்டிச் செல்வது கிடையாதென்றும் மாஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுத்தாள். அதை விசாரித்த மாஜிஸ்டிரேட் திரு. சபாட்டினோ கணவனுக்குச் சரியான தண்டனை விதித்தார். புருஷனை சாம்வேல், ரூபன்ஸ்டீனை சினிமாவுக்கு ஒரு குறிப்பிட்ட தினம் அழைத்துச் செல்ல வேண்டுமென்றும், காட்சி முடியும் வரை ரூபன்ஸ்டீன் கையை தன் கையோடு சேர்த்துக் கோர்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்றும் நீதிபதி தண்டனை விதித்தார்.

... ... ...

### உலோகங்களில் அடையாளம் செய்ய நூதனவழி

உலோக வஸ்துக்களில் எழுத்துக்கள் எழுதுவதற்கு நாம் சாதாரணமாக திராவகம் உபயோகிப்பது வழக்கம். திராவகம் உபயோகிப்பதனால், அது உலோக வஸ்துக்களைத் தின்று எழுத வேண்டிய இடங்களில் அடையாளம் செய்து விடும். ஆனால், இதற்குப்பதிலாக, திராவக சம்பந்தமில்லாத தண்ணீர் ஒன்று இவ் வேலைக்கு உபயோகப்படுகிறது.

இது 'காப்பர் ஸல்பேட்' துண்டுகளும் உப்பு ஜலமும் சேர்ந்தது. இந்த உப்பு தண்ணீர், 10 கிராம் உப்பை 40 கியூபிக் சென்டி மீட்டர் ஜலத்தில் கரைத்து மேற்சொன்ன கட்டிகள் 12 கிராம்களைக் கலந்தால் இவ்விசித்திர ஜலம் உண்டாகிறது. இரண்டு அவுன்ஸ் ஜலத்தில் ஒரு டீஸ்பூன் அளவு உப்பையும், 'காப்பர் ஸல்பேட்' துண்டையும் கரைத்தாலும் மேற்சொன்ன திராவகத்தைச் செய்யலாம்.

... ... ...

### ஸினிமாவுக்கு மீன் கட்டணம்!

அலாஸ்காவில் பீதல் நகரத்தில் ஒரு ஸினிமா இருக்கிறது. இதற்குப் பிரவேசக் கட்டணம் மீன்களாம்! இதை ஆதரிப்பவர்கள் அநேகமாக எல்லோரும் எஸ்கிமோக்களே. அந்த மீன்கள் நாய்களுக்கு ஆகாரமாயிருப்பதால், பிறகு அவைகள் நாய் சொந்தக்காரர்களுக்கு விற்கப்பட்டுவிடுகின்றன.

... ... ...

### எரி மலைகள்

இவ்வுலகத்திலேயே சுமார் 600 அல்லது 700 எரி மலைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவைகளில் 270 இன்னும் தீ கக்க கூடியவைகளாயிருக்கின்றனவாம்.

... ... ...

### குதிரை "பஸ்"

1833ம் வருஷத்திலேயே லண்டனில் "பஸ்" என்னும் போக்கு வரவு சாதனம் இருந்ததாம். ஆனால், அப்பொழுது பஸ்களை குதிரைகளே 10 மைல் வேகத்தில்

இழுத்துச் சென்றனவாம். 1833ம் வருஷம் ஏப்ரல் மாதம் தான் இம்மாதிரியான பஸ்கள் அங்கு காணப்பட்டனவாம்.

... ... ...

## முதல் ஸ்திரீ விமானி

பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த பார்னஸ் டி லா ரோச் என்பவள் தான் 1909ல் முதல் ஸ்திரீ விமானமோட்டியாக இருந்தாள்.

... ... ...

## ஓரிணுகோ நதி

தென்னமெரிக்காவில் ஓரிணுகோ என்னும் நதி 2000 மைல் நீளமிருக்கிறது. இந்நதியில் 436 உபநதிகளும், 2000க்கு மேற்பட்ட சிறிய நதிகளும் வந்து கலக்கின்றன.

... ... ...

## கருப்பு ரோஜாப்பூ

கலிபோர்னியாவைச் சேர்ந்த தோட்டக்காரர் ஒருவர் ரோஜாச் செடியொன்றை பிரயாசை மிகப்பட்டு, ஆராய்ச்சியின் பலனால் கருப்புப் பூக்கள் பூக்கும்படி செய்திருக்கிறார்.

... ... ...

## மூக்குக் கண்ணாடி கண்டுபிடித்தவர்

1285ம் வருஷத்தில் அலெக்ஸாண்டர் ரோடி ஸ்பினு என்பவர் மூக்குக் கண்ணாடி கண்டு பிடித்தார்.

## 80 மணி நேரம் கொட்டாவி விட்டாள்

நியூயார்க்கிலுள்ள ஆக்கினிஸ்கான் என்ற 27 வயதுள்ள மாதுக்குக் கொட்டாவி நோய் பிடித்துக் கொண்டது. 80 மணி நேரம் விடாமல் கொட்டாவி விட்டாள். எந்த வைத்தியமும் பலன் தரவில்லை. கடைசியில் ஒரு வாலிபர் அவளுக்குத் தூக்கம் வரும் ஔஷதம் கொடுத்தார். தூங்கிவிழித்த அவளுக்குக் கொட்டாவி வரவில்லை.

... ... ...

## டென்னிஸ் பந்தால் கொல்லப்பட்டார்

இரண்டாவது ஜார்ஜ் மன்னருடைய குமாரர் பிரடரிக்லூயி என்பவர் வேல்ஸ் இளவரசராக இருக்கும்போது ஒரு டென்னிஸ் பந்தால் கொல்லப்பட்டார்.

... ... ...

## சிரிக்கும் பறவை

ஆஸ்திரேலியாவில் கூகபரா என்றொரு பறவை இருக்கிறது. அது சிரிக்குமாம்.

... ... ...

## நாய் பல் ரூபாய்

நியு கினியாவில் நாயின் பற்களை பணத்திற்கு பதிலாக உபயோகிக்கிறார்கள்ளாம்.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ஆு பிப்ரவரிமீ தாதுஆு தைமீ-மாசிமீ — திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 19 | திங் | ஷஷ் 47-55, ஹஸ் 5-46, தி 27-58, ஸத்தியகாமர். |
| 2 | 20 | செவ் | ஸப் 54-1, சித் 12-23, தி 28-7, நரஹரி. |
| 3 | 21 | புத | அஷ் 60-0, ஸ்வா 19-19, ரா 6-56, திருதினஸ்பிருக். |
| 4 | 22 | வியா | அஷ் 0-35, விசா 27-31, ரா 19-1. |
| 5 | 23 | வெ | நவ 6-57, அநு 34-41, ரா 21-24, தசமிதிதி. |
| 6 | 24 | சனி | தச 12-30, கேட் 40-48. [வைகாதசி. |
| 7 | தைமீ 25 | ஞாய | ஏகா 16-37, மூல 45-29, தி 2-21, ரா 12-24, ஸர் |
| 8 | 26 | திங் | துவா 19-6, பூரா 48-27, தி 10-38, பிரதோஷம். |
| 9 | 27 | செவ் | திர 19-47, உரா 49-44, தி 8-53, கிருஷ்ணாங்காரக |
| | | | சதுர்தசி, சிவராத்திரி. [வித்தியாதீசர். |
| 10 | 28 | புத | சசி 18-43, ஶ்ரீவ 49-24, சே 3-41, தை அமாவாசை. |
| 11 | 29 | வியா | ● 16-0, அவி 47-40, சே 3-7, கும்பரவி 52-48, |
| | | | திருப்பக்குழி தெப்பம். [கௌரீ விர. மாகசுத். |
| 12 | 1 | வெ | பிர 12-5, சத் 44-55, தி 4-51, விஷ்ணுபதி, கைலாச |
| 13 | 2 | சனி | துவி 7-14, பூட் 41-25, சே 3-59, திருப்பக்குழிரத. |
| 14 | 3 | ஞாய | திரி 1-47, உப 54-15, உட் 37-31, தி 3-51. |
| பிப்ரவரிமீ 15 | 4 | திங் | பஞ் 50-17, ரே 33-28, தி 5-30, வஸந்த பஞ்சமி. |
| 16 | 5 | செவ் | ஷஷ் 44-41, அசு 29-33, தி 20-12, ரா 23-4, ஶ்ரீ |
| | | | கோவிந்தப்பெருமாள், ஷஷ்டிவிரதம். [த்திகை. |
| 17 | 6 | புத | ஸப் 39-24, பர 25-53, ரா 25-16, ரதஸப்தமி, கிரு |
| 18 | 7 | வியா | அஷ் 34-32, * கிரு 22-43, ஶ்ரீமதா நந்தர், பீஷ் |
| 19 | 8 | வெ | நவ 30-9, ரோ 19-57, தி 0-52, ரா 4-20. [மாஷ்ட. |
| 20 | மாசிமீ 9 | சனி | தச 26-15, மிரு 17-44, ரா 9-0. [மீனயனம் 0-46. |
| 21 | 10 | ஞாய | ஏகா 22-57, ஆரு 15-58, ரா 16-16, ஸர்வைகாதசி. |
| 22 | 11 | திங் | துவா 20-12, புந 14-52, ரா 5-31, திதிதுவயம். |
| 23 | 12 | செவ் | திர 18-13, பூச 14-21, ரா 17-20, சதுர்தசி திதி. |
| 24 | 13 | புத | சசி 17-1, ஆயி 14-40, ரா 16-6, திருவெற்றியூர் |
| | | | மகிழடி, நடராஜ ரபிஷேகம். |
| 25 | 14 | வியா | ○ 16-46, மக 15-59, ரா 7-32, மாசிமகம். |
| 26 | 15 | வெ | பிர 17-48, பூர 18-25, ரா 8-13, கரிநாள். |
| 27 | 16 | சனி | துவி 20-1, உத் 22-6, ரா 15-30, கரிநாள், அதிதி. |
| 28 | 17 | ஞாய | திரி 23-37, ஹஸ் 27-3, ரா 19-46, திரிதியைதிதி, கரி. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்க்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரிமீ 1வ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8வ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |


ஸ்டார் கம்பைன்சாரின்

இரண்டாவது மகத்தான

தெலுங்கு பேசும்படம்

“சாரங்கதரா”

ஒரேசமயத்தில்

கெயிட்டி செலக்ட்

டாக்கிகளில்

பிப்ரவரிமீ 6வ முதல் காண்பிக்கப்படும்

ஆனந்த விழாவை ஆவலுடன் எதிர்பாருங்கள்

ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட்,

161, மவுண்டு ரோட், சென்னை.




**சுவை மிகுந்த உண்டிகள் — பானங்கள்.**

இணையற்ற ரகம் — வகையான உபசாரம் — உல்லாசமான இடம்

நல்ல காற்றோட்டம் — முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்,

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

கேஸரி

# பற்பசை




பற்களுக்கு வசீகரத்தையும், ப்ரகாசத்தையும், மதுரத்தையும் கொடுக்கும்.

பற்களை முத்துப்போல் அழகாகச் செய்வது மன்னியில்
சகலவித பல்நோய்களையும் தீர்க்கும்.

**விலை அணா 8**

**கேஸரி குடீரம், எழும்பூர், சென்னை**

ஜோலிகளைக் கண்டு உஷார்!!!




# அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்

இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதருஸ், கல்கத்தா.

159939

## மாலதி க்ரீம்

இது பாதம் பருப்பின் பாலிலிருந்து செய்யப்பட்ட சுகந்தமுள்ள நவனீதம். ஸ்திரீ, புருஷர்கள் தலைவாரிக் கொள்வதற்குமுன் கொஞ்சம் தலையில் தடவிக் கொண்டால் மயிர் பட்டுப்போல் அழகாக இருக்கும். குளிர்ச்சியைத் தந்து அழகையும், வசீகரத்தையும் கொடுப்பது. மாலதி அத்தர் சேர்ந்தது.

புட்டி அணா. 8

## மல்லிகா

இது குழந்தைகளுக்கான லேபம். சந்தன அத்தர், மல்லிகைப் பூச்சார், காஷ்மீர் புனுகு முதலியவற்றால் செய்யப்பட்டது. குழந்தைகள் ஸ்நானம் செய்த உடன் உடம்பில் தடவினால் பொன் மேனியைக் கொடுத்து சகல சர்ம வியாதிகளையும் போக்கும். இந்த லேபத்தை உபயோகப்படுத்தினால் குழந்தைகள் ரப்பர் பொம்மைகளைப்போல் புஷ்டியாயிருப்பார்கள்.

புட்டி அணா. 8

கேசரி குடீரம், எழும்பூர், மதருஸ்.

Printed and Published by Dr. K. N. Kesari at the Lodhra Press, Egmore, Madras

# லோத்ராவின் மகிமை

### சிறந்த ஔஷதம்

ஸ்ரீமதி அன்னு சாண்டி, எம்.ஏ., பி.எல்., அட்வகேட், ஆசிரியை, "ஸ்ரீமதி", திருவனந்தபுரம்:—"நான் தங்கள் லோத்ராவை உபயோகித்தேன். ருதுசம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் லோத்ராவே தலை சிறந்த ஔஷதம். அது அருந்த ருசியாயிருப்பதும், பத்தியமில்லாமலிருப்பதும் மேலும் குறிப்பிடத்தக்கது."

### தடைப்பட்ட மாதவிடாய்

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாள், கொள்ளேகால், மைசூர்:—"கடந்த மூன்று வருஷங்களில் எனக்கு மாதவிடாய் சரியாக ஏற்படவில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தூரம் வந்தது. இதனால் எனக்கு இடுப்பிலும், தொடைகளிலும் நோவு ஏற்பட்டது. நான் ரொம்பவும் மெலிந்து விட்டேன், என் உடல் எனக்கு பெரும் பாரமாகத் தோன்றியது. உடனே உங்கள் லோத்ரா இரண்டு புட்டி அருந்தினேன். என் வியாதி என்னை விட்டு நீங்கியது. இன்னும் ஒரிரண்டு பாட்டில் மருந்து சாப்பிட நான் விரும்புகிறேன். மேலும் என்னைப் போன்ற உபாதைகள் உள்ள எல்லோரும் லோத்ராவை உபயோகிக்குமாறு நான் சிபார்சு செய்கிறேன்."

### சகோதரிகளின் அனுபவம்

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—"லோத்ராவை உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருதுசூலை கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்."

### ஆச்சரியமான குணம்

ஸ்ரீமதி கர்த்தா, கொரளி அம்மளைக் ஹவுஸ், இரிஞ்சலக்கூடம், கொச்சி:—"கடந்த பத்து வருஷங்களாக நான் மாதவிடாய் சம்பந்தமான தொந்தரவால் ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தேன். உங்கள் லோத்ரா என்னை ஆச்சர்யப்படத்தக்க விதத்தில் அக்கஷ்டத்தினின்றும் விடுவித்து விட்டது."

### கர்ப்பாசய ரோக நிவாரணி

ஸ்ரீமதி மிஸ். அம்மாகுட்டி அம்மாள், சங்கீத உபாத்தியாயினி, சர்க்கார் ஹைஸ்கூல், திருச்சூர்:—"நான் நெடுநாட்களாகப் பலவிதமான கர்ப்பாசயரோகத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அநேக விதமான வைத்தியங்கள் செய்தும் குணம் கொடுக்கவில்லை. கடைசியாக உங்களது (கேசரி) லோத்ராவை உபயோகித்த ஒரு வார தினத்திற்குள் காரடி வித்தையைப்போல் குணம் அடைந்தேன். அதன் மகிமை சொல்லமுடியாது."

எங்கும் கிடைக்கும்.

கேசரி குடீரம், எழும்பூர், சென்னை.

# QUEEN OF TONICS

